551

[...]D BY THE TEXT-BOOK COMMITTEE, MADRAS.

# NINE
# Famous Navigators

[stamp] MADRAS 14 SEP 1935

259

P. B. SRINIVASACHARYA, B.A.

TB
U8(10)
N35
85992

ஸ்ரீ:

ஒன்பது

# புகழ்பெற்ற மாலுமிகள்

14 SEP 1935
MADRAS

P. B. ஸ்ரீநிவாஸாசார்யர், B.A.,
அவர்கள் இயற்றியது.

துரைத்தனத்தார் அங்கீகரித்தது.

அம்பிகா பிரதர்ஸ்,
மயிலாப்பூர் : : மதராஸ்.

பதிப்புரிமை]

[விலை அணு 8.

THE B. N. PRESS, EDUCATIONAL PRINTERS,

MOUNT ROAD : : MADRAS.

85992

SIR P. S. SIVASWAMY AIYER,
K.C.S.I., C.I.E.

*Sudharma,*
*Edward Elliot's Road,*
*Mylapore, Madras.*

15th February, 1931.

# FOREWORD

The objects which the publishers have set before themselves in bringing out this little book in Tamil on the lives of nine famous Navigators, must commend themselves to those who are interested in popular education. They wish to create a taste for the reading of books of travel and geographical exploration, and if possible, to create in the minds of readers a love of adventure. The book is written in a simple style and it is to be hoped that it will attract readers and serve the purpose which the publishers have in view.

P. S. SIVASWAMY AIYER.

# NOTE

This little book is intended as a non-detailed text book for pupils in Secondary Schools. It aims at stimulating a spirit of adventure and inquiry in pupils using it. The lives of nine famous navigators are, as may be found, dealt with in an easy, readable narrative form. It is earnestly hoped that teachers will find the book useful for class purposes and encourage us in our present endeavour to publish Tamil books that satisfy the needs of modern school requirements.

THE PUBLISHERS.

# விஷய சூசிகை

பக்கம்



1. கிரிஸ்தோபர் கொலம்பஸ் ... ... 1
2. வாஸ்கோட காமா ... ... 12
3. பெர்டிஞண்டு மெகல்லென் ... ... 21
4. ஹென்றி ஹட்ஸன் ... ... 35
5. காப்டென் ஜேம்ஸ் குக் ... ... 46
6. ஸர் ஜான் பிராங்கிளின் ... ... 62
7. காப்டென் ராபர்ட் பால்கன் ஸ்காட் ... 79
8. ஸர் எர்னஸ்ட் ஹென்றி ஷாக்கில்டன் 92
9. ரோவல்டு ஆமுண்ட்ஸென் ... ... 104

# I

# கிரிஸ்தோபர் கொலம்பஸ்.

முதன்முதலில் ஐரோப்பியர்களுக்கு அமெரிக்கா என்ற பரந்த கண்டமொன்று உண்டென்று கண்டு பிடித்துத் தெரிவித்தவர் கிரிஸ்தோபர் கொலம்பஸ் என்ற யாத்திரிகர். கிரிஸ்தோபர் கொலம்பஸ், இத்தாலியா தேசத்திலுள்ள ஜினோவா என்னும் பட்டணத்தில் மிகவும் வருந்திக்கொண்டிருந்த ஓர் ஏழைக்குடும்பத்தில் கி. பி. 1447-ம் வருஷத்திற் பிறந்தார். அவரைப்பெற்ருேர், கம்பளிநூலைச் சிக்கெடுத்து, நெய்வோருக்குக் கொடுத்து அதனால் வரும் சொற்ப ஊதியத்தைக்கொண்டு ஜீவித்து வந்தனர். இவ்வளவு எளிய ஸ்திதியிலிருந்தும் அவர்கள் தம்மாலியன்றவரை கிரிஸ்தோபருக்குக் கல்வி கற்பித்தனர். சிறுவயதிலேயே மிக்க சுறுசுறுப்பும் கூரிய அறிவும் உடையவரான கொலம்பஸ், விரைவிலே கணித சாஸ்திரத்திலும் சித்திர சிற்ப வித்தைகளிலும் தேர்ச்சிபெற்று இலத்தீன் பாஷையையும் கற்றுக்கொண்டார்.

அக்காலத்தில் அவருடைய நாட்டினரிற் பெரும்பான்மையோர் சமுத்திரப் பிரயாணத்தில் வல்லவர்களாயிருந்தனர். அவர்களுடைய வியாபாரமனைத்தும் பெரும்பான்மையும் கடல்மார்க்கமாகவே நடந்துவந்தது. அன்றியும் அவர்களே புதியனவாக நாடுகளையும் தீவுகளையும் கண்டுபிடிப்பதில் முனைந்து நின்றனர். கொலம்பஸும் இயல்பாகவே சமுத்திரப் பிரயாணம் செய்யவேண்டும் என்ற பேரவாமிக்கவராய்த் தமது பதினன்காம் பிராயத்திலேயே அதனை மேற்கொண்டார். முதன்முதலில் அவர் தம் நாட்டினரைப்




கொலம்பஸின் யாத்திரைகள்

போல், மத்திய தரைக்கடற் பிரதேசத்திலுள்ள துறைமுகங் களுக்குக் கரையோரத்திலேயே சென்று வருவாராயினர். அக்காலத்தில் கொடிய கப்பற் கொள்ளைக்காரரான பார்பரி தேசத்தவர்கள் இப்படிப்பட்ட கடற்பிரயாணிகளை மடக்கிக் கொள்ளையடித்துத் துன்புறுத்துவது வழக்கம். இக்கொள் ளைக் கூட்டத்தினரிடம் கொலம்பஸ் பலமுறை யகப்பட்டுக் கொண்டு மிகுதியும் துன்பப்பட்டார். பின்பு அவர் ஐஸ் லாண்டுக்கும் போய் வந்தார்.

கொலம்பஸ், தாம் கற்ற கல்வியைப் பலவிதங்களிலும் தகுதியோடு உபயோகப்படுத்திக் கொண்டு மேன்மேலும் அறிவை வளரச் செய்தார். அவர் வறுமைத் துன்பத்தை மிகுதியும் அனுபவித்துக் கொண்டிருந்தும், பிற வறுமை யாளரைப்போல் சாமானியமான காரியங்களிலே ஈடுபடாமல் எப்போதும் உயர்ந்த கருத்துக்களை மனத்திற் கொண்டவரா யும் உயர்ந்த செய்கைகளில் ஈடுபட்டவராயும் விளங்கினார்.

அக்காலத்தில் ஜனங்கள் கப்பல் யாத்திரை செய்து நூதனமான இடங்களைக் கண்டுபிடித்துவர, அவற்றைப்பற்றி ஐரோப்பா முழுவதிலும் பலவிதமான விநோத வதந்திகள் பரவி வந்தன: பல விடங்களிற் பழுக்கக் காய்ந்த பாறை களிடையே சலசலவென்று கொதிக்கும் சமுத்திரத்திலே சில மானுமிகள் நாவிகஞ் செய்து வந்தனரென்றும், தூர தேசத்திற் பலவிடங்களில் பரலும் மண்ணுமிட்டு வீதிகள் அமைக்கப்படுவதற்குப் பதிலாகப் பொன்னும மணியும் கொண்டு போடப்பட்டிருக்குமென்றும், சில நாடு களில் நவரத்தினங்களும் பொன்னும் மரங்களிலும் செடி களிலும் காய்த்து உதிர்கின்றன வென்றும், பின்னுஞ் சில நாடுகளில் மனிதர்கள் தங்கள் தலைகளைக் கைகளினிடையே

வளைத்து வைத்துக்கொண்டு நடக்கிறார்களென்றும், இன்னும் பலவாறும் பேசிக் கொண்டனர் ஜனங்கள். இப்படிப்பட்ட அபூர்வ விஷயங்களைப் பற்றிக் கேள்வியுற்ற கொலம்பஸ், இவற்றின் இன்மை யுண்மைகளைப்பற்றியும், பெருங்கடலுக் கப்பால் வேறு நாடுகளிருத்தல் கூடுமோ என்பதைப்பற்றியும் ஆராயலானார். அடிக்கடி அபூர்வமான மூங்கில்களும் சித்திர வேலைப்பாடமைந்த மரத்துண்டுகளும் எங்கிருந்து அலைகளாற் கடற்கரையி லொதுக்கப்படுகின்றன, பூமி உருண்டை வடிவ மானதா, தட்டை வடிவமானதா, என்ற இவ்வாறான ஐயங் கள் பல அவருடைய மனத்திற் குடிகொண்டன; அவர் அவற்றைப் பற்றி இரவு பகலாகச் சிந்தனை செய்யலானார்.

பின்பு கொலம்பஸ், தாம் கேள்விப்பட்ட அபூர்வ விஷ யங்களின் உண்மையை ஆராயும் பொருட்டு, இப்படிப்பட்ட, முயற்சிகளுக்குப் பெரிதும் ஆதரவளித்த அரசனான ஹென்றி என்பவன் ஆண்டுவந்த போர்ட்சுகல் தேசத்தின் முக்கிய பட்டணமான லிஸ்பனை யடைந்தார். அடைந்தவர் சிறிது காலத்துக்கெல்லாம் அங்கு வாழ்ந்துவந்த பேர்போன வயோ திக மாலுமி யொருவனுடைய மகளை மணம் புரிந்து கொண்டார். இம் மணவினையால் அவர்தம் கருத்துக்களிற் சிலவற்றை முற்றுவித்தற்கு உதவி புரிய வல்லார் சிலருடைய நட்பு அவருக்குக் கிடைத்தது. அதனால் அவருடைய ஊக் கம் மேம்படுவதாயிற்று.

இச்சமயத்தில்,உலகம் உருண்டைவடிவமானதே யென் றும், தட்டையாய்ப் பரந்த வடிவமுடையதல்ல வென்றும், அட்லான்டிக் மகா சமுத்திரத்திற்கப்பால் மக்கள் கண்டறி யாததொரு நூதன நிலப்பிரதேசமிருக்க வேண்டுமென்றும், இந்தியா தேசத்திற்குச் செல்லக் கடல்மார்க்கமாய் மேற்காக

ஒரு வழி யிருக்கவேண்டுமென்றும், அவருக்குத் திடமான நம்பிக்கை ஏற்பட்டது. இப்புதிய மார்க்கம் தன்னாலேயே கண்டுபிடிக்கப்படுவதற்கு உரியதெனக் கடவுளின் கருத்தாம் என்று ஒரு உறுதியான கொள்கையும் அவர் மனத்தில் வேரூன்றுவதாயிற்று. அதனால் அவர் எவ்வகைப்பட்ட வருத்தமும் நோக்காமல் கருமமே கண்ணாயிருந்து இவ்விஷயத்தைச் சாதிக்க வேண்டுமென்று தீர்மானித்தார்.

ஆனால் தம்முடைய நன்முயற்சிகளில் மேற்கொண்டு உழைக்க வொட்டாதபடி அவருக்குச் சில சங்கடங்கள் நேர்ந்தன. அவருடைய குடும்பத்தில் பிணியும் இழவும் சம்பவித்தன. பட்ட காலிலேயே படுவது போல் அவருடைய கெட்ட குடியானது மேன்மேலும் இடுக்கணுற்றுக் கெட்டது. அவருடைய வாழ்க்கைத் துணைவி யிறந்தாள். அக்காலத்தில் நாடு முழுவதிலும் கலகங்களும் சண்டைகளும் மிகுந்திருந்தமையால், கொலம்பஸின் சொத்துக்கள் விரோதிகளின் கைகளிற் சிக்கின. இறுதியில் அவர் மிகவும் மனமழிந்து, தம்முடைய அருமைக் குழந்தையை யெடுத்துக்கொண்டு அதன் பொருட்டே உயிர் தரித்திருக்கத்துணிந்து, ஒருமடத்தை யடைந்து, யாசித்து வாழும் வாழ்க்கையை மேற்கொண்டார். இத்துணைத் துன்பங்களி-னிடையேயும் நூதனமாக ஒரு நாட்டைக் கண்டுபிடிக்க வேண்டுமென்னும் உறுதி அவர் கருத்தை விட்டகலவில்லை

அவர் மெதுவாகப் போர்ட்சுகல் தேசத்து அரசனுடைய சமுகத்தைநாடிப்பழக்க மேற்படுத்திக்கொண்டு, பின்மேற்குத் திசையாக இந்தியாவுக்குச் செல்லும் மார்க்கமாவது, இன்றேல் ஒரு புதிய பூப்பிரதேசமாவது இருக்கவேண்டும் என்று

தாம் கொண்ட உறுதியான கொள்கையை அவ்வரசனுக்கு வெளிப்படுத்தி, அதனைக் கண்டுபிடித்தற்குரிய உபாயமொன்றைத் தெரிவித்து அவனுதவியை நாடினர். ஆனல் அந்த அரசன் கொலம்பஸின் வாக்கை அலட்சியம் செய்ததன்றி அவரை அதைரியப்படுத்தினன். அன்றியும் அவரால் தான் அறிந்து கொண்ட விஷயங்களைத் தானே கண்டு பிடித்துப் பேரும் புகழும் நற்பலன்களும் பெறலாமென்று கருதி இரகசியமாகக் கப்பற்படையொன்றை அனுப்பவுமனுப்பினன். ஆனல் அம்முயற்சிவீணுயிற்று. கிரிஸ்தோபரோ முன்னிலும் அதிக ஊக்கமுடையவராய்த் துரோகிகளான போர்ட்சுகேசியரிடமிருக்கப் பிரியப்படாமல், தம் முயற்சியைப்பற்றி ஸ்பெயின் தேசத்தரசியிடம் கூறி அவளுடைய உதவியைப் பெறத் தீர்மானித்து, அத்தேசத்தின் இராஜதானியாகிய மாட்ரிட் நகரத்தையடைந்தார். அநேக வருஷகாலம் அவர் அங்குத் தமது தரித்திரமான வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்தபடியே சந்தர்ப்பம் நேரிட்டபோதெல்லாம் தம் எண்ணத்தை அரசியறியும்படி செய்து வந்தார். பல முறையும் அவருடைய எண்ணம் நிறைவேறுதற்குரிய வழியில்லையென நெஞ்சழிந்து வருந்தும்படி நேரிட்டதாயினும், அவர் கருமமே கண்ணுயிருந்து முயற்சித்து வந்தாராதலால் இறுதியில் அரசியாகிய இஸபெல்லா அவர்பால் இரக்கங்கொண்டாள். பலவாறு தடுத்த தன் மந்திரிகளின் நல்லுரைகளையும் அவள் அலட்சியம் செய்துவிட்டு, இக் கப்பல் யாத்திரையாலேற்படும் கஷ்ட நஷ்டங்களோ அல்லது நன்மைகளோ பின் சொந்தமான காஸ்டில் ராஜாங்கத்தைச் சேரட்டுமென்று கூறித் தன் நகைகளை அடகுவைத்துப் பொருள்சேகரித்து அளித்துக்கொலம்பஸை ஊக்கினள்.

அதனால், கிரிஸ்தோபர் கொலம்பஸ் பெருமகிழ்ச்சி யடைந்தவராய் இஸபெல்லா ராணிக்குத் தாம் உண்மைப் பணியாளராய் உழைப்பதாகக் கி.பி. 1492-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 17-ம் தேதியன்று ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார்.

பிறகு அவர் மூன்று சிறிய கப்பல்களைத் தயாரித்து நெடுந்தூரப் பிரயாணத்திற் பழகிய சில மாலுமிகளைச் சேர்த்துக்கொண்டு அரசியிடமும் மற்றவர்களிடமும் விடை பெற்று ஆகஸ்டு மாதம் மூன்றும் தேதியன்று பிரயாணமாகி முதலிற் கனேரித் தீவுகளை யடைந்தார். பின்பு அங்குநின்றும் ஸெப்டம்பர் மாதம் 3-ம் தேதியன்று புறப்பட்டு நேர்மேற்கே நோக்கிக்கொண்டு பல நாட்கள் வரையிலும் பூப்பிரதேசம் உளதென்பதற் கடையாளம் கொஞ்சமேனும் காணாமல் அவர் தம்முடைய கப்பல்களைச் செலுத்திச் சென்றார். அவருடைய மாலுமிகள் சில நாட்கள் வரையில் பொறுமையோடிருந்தார்கள். ஆயினும் அவர்கள் வெகு சீக்கிரத்தில் தம் நம்பிக்கையை யிழக்கலானார்கள். கொலம்பஸ் தம்முடைய வீரர்களால் அனுபவித்த கஷ்டங்களுக்கு அளவில்லை. தம் நாடு நகரங்களையும் மனைவி மக்களையும் உற்றாருறவினரையும் விட்டு இத்தனை தூரமும் இவர் சொல்லையே பெரிதாய்க் கொண்டு நம்பிவந்து மோசம் போனோமேயென்று நினைத்து வருந்தி மாலுமிகள் கிரிஸ்தோபரைப் பலவாறு நிந்தித்தார்கள். ஒருமுறை அனைவரும் கப்பலில் கலகம் செய்து அவரைக் கடலில் தூக்கி எறிந்து கொன்றுவிட்டுத் தம் நாடு நோக்கித் திரும்பிச் செல்லலாமா என்றும் ஆலோசித்தனர். இறுதியில் கொலம்பஸ் அவர்கள் அனைவரையும் சாந்தப்படுத்தி, ‘இன்னும் மூன்று நாட்களில் பூப்பிரதேசம் எதனையும் காணவிட்டால் நாவாய்களைத் திருப்பிச் செலுத்தி சுதே

சத்திலேயே உங்களைக் கொண்டுபோய்ச் சேர்த்து விடுகிறேன்,'' என்று அவர்கள் முன்பு மண்டியிட்டுச் சத்தியம் செய்து கொடுத்தார்.

கடவுள் அருளால் அன்று இராத்திரியே, அதாவது அக்டோபர் மாதம் 12-ம் தேதி சுமார் இரண்டு மணிக்கு, கொஞ்ச தூரத்தில் கரையில் எரிவதுபோல் ஒரு தீபத்தின் ஒளி புலப்பட்டது. கொலம்பஸ் அளவுகடந்த மகிழ்ச்சியுடையவராய்ப் பாய்களை யிறக்கிக் கப்பல்களை நங்கூரம் பாய்ச்சி நிறுத்தி நிலங்கண்டதற்கு அறிகுறியாக ஒரு பீரங்கி வெடி தீர்த்து, பொழுது விடியுந்தனையும் ஆவலோடும் ஆரவாரத்தோடும் காத்திருந்தார். சூரியோதயமானவுடனே தம் முன்னே யொருதீவும் குடிசைகளும் மரங்களும் மனிதர்களுமிருப்பதைக் கண்டு அனைவரும் சந்தோஷ சாகரத்தில் மூழ்கினர். மாலுமிகளனைவரும் தாம் கிரிஸ்தோபரைத் துன்பத்திற்காளாக்கியதை யெல்லாம் நினைத்து வருந்தித் தம் பிழைகளைப் பொறுத்து மன்னிக்க வேண்டுமென்று மன்றாடிப் பிரார்த்தித்துக் கொண்டனர். அதன் பின் கிரிஸ்தோபரும் அவருடைய ஆட்களும் ஸ்பானியக் கொடிகளைத் தாங்கிக் கொண்டு கரையை யடைந்தனர். மாலுமிகள் ஒருமனதாய்த் தம் தலைவரை 'அட்மிரல்' என்ற பட்டத்தால் கௌரவித்து அவருக்கு உண்மையுடன் ஊழியஞ் செய்வதாக உறுதிமொழி கூறினர்.

கொலம்பஸூம் அவருடைய ஆட்களும் தாம் கண்டது இந்தியாவின் கீழ்க்கரை யென்றே உறுதியாகக் கருதியிருந்ததனால் அந்நாட்டின் குடிமக்களை இந்தியரென்றே யழைத்தனர். அப்பெயரே இன்னும் அமெரிக்க சுதேசிகளுக்கு

வழங்கி வருகிறது. அக்காலத்தில் இந்தியாவை மகா கான் என்ற மகமதிய சக்கரவர்த்தி யொருவன் ஆட்சி செய்திருந்தான் என்று ஐரோப்பியர் கருதியிருந்தனர். அந்தச் சக்கரவர்த்தி தாம் கண்டநாட்டில்உளன் என்றுகருதிக்கொலம்பஸ் தூதுவர் சிலரை அனுப்ப, அங்கு எங்கும் அந்நாமதேயத்தவனை சக்கரவர்த்தி யொருவனுமிலன் என்றுஅவர்கள் திரும்பி வந்து கூறினர். பிறகு காலக்கிரமத்தில் தாம் கண்டுபிடித்த விடம் பெரியதொருபூப்பிரதேசமன்றென்றும், தற்காலத்தில் மேற்கிந்திய தீவுகள் என வழங்கும் செழிப்புடைய பல தீவுகளில் ஒன்றென்றும் அவர்களுக்குத் தெரியவந்தது. அதற்கு அவர் ஸான் ஸால்வேடார் என்று பெயரிட்டார். இப்போது அது வாட்லிங்க் தீவு என்ற பெயரால் வழங்கப்படுகிறது என்று கூறுவர்.

கொஞ்ச காலத்துக்குப் பிறகு தாம் மேற்கொண்ட காரியத்தில் வெற்றியடைந்த கிரிஸ்தோபர் திரும்பவும் ஸ்பெயின் தேசத்தை யடைந்தார். அப்போது ஸ்பானிய பிரமுகர்கள் பலரும் கூடி அவரை வரவேற்று உபசரித்து, அவர் கொண்டுவந்த விசித்திரமான மனிதர்களோடும் பொருள்களோடும் அவரை ஊர்வலமாக வரச்செய்து பார்ஸிலோனு என்னும் நகரத்திற்கு அழைத்துச் சென்றார்கள். ஸ்பானியர்களனைவரும் கொண்ட களிப்பிற்கு எல்லையில்லை. பாஸிலோனு அரண்மனையில் பெர்டிணண்டு என்ற ஸ்பானிய அரசனும் அவன் தேவியாகிய இஸபெல்லாவும் ஒரு பெருஞ் சபை கூட்டி, ஸ்வர்ணமயமான பீடத்தில் உயரிய விதானத்தின் கீழ் அமர்ந்து கிரிஸ்தோபரை நல்வரவு கூறி யுபசரித்து நூதனமாகக் கண்டமொன்று கண்டுபிடிக்கப்பட்டதற்கும் கொலம்பஸின் திறமைக்குமாக மெச்சிக் குடிகளின்

முன்னிலையில் மண்டியிட்டுக் கடவுளை வாழ்த்தி அவருக்கு வந்தனம் புரிந்தார்கள்.

இவ்வளவு திறமையாளரிடத்தும் பொறாமைகொண்டவர் சிலரிருந்தனர். ஸ்பெயின் தேசத்தில் அக்காலத்தில் கிராண்டுகார்டினல் என்று ஒரு பிரபு இருந்தார். ஒரு சமயம் அவர் கொலம்பஸைக் கௌரவிக்கும் பொருட்டு அவரை யழைத்து ஒரு விருந்தளித்தார். அவ்விருந்துக்குப் பலபிரமுகர்களும் வந்திருந்தனர். கொலம்பஸினிடம் பொறாமை கொண்ட ஒருவன், அவர் அமெரிக்காவைக்கண்டுபிடித்ததில் விசேஷமேதுமில்லை என்றும் இதரர்களும் இவ்வாறே கண்டு பிடிக்கக்கூடும் என்றும் கூறினான். அதிக சாதுரியம் வாய்ந்தவரான கொலம்பஸ் அவனுடைய வாயை யடக்கக்கருதி, தம் கையிலுள்ளதொரு முட்டையை யனைவர்க்குங்காட்டி அதனை முனைப்பாகம் கீழாக வரும்படி நிற்கச்செய்ய அவர்களில் எவருக்கேனும் முடியுமா என்றுகேட்க, அவ்வாறு செய்ய அனைவரும் முயன்றும் ஒருவராலும் முடியாது போயிற்று. அவர்கள் அவரையே அவ்வாறு செய்யும்படி வேண்ட, அவர் அதன் முனைப்பாகத்தைச் சொட்டையாக்கி மேசையின்மீது நேராக நிறுத்தி மற்றவர்களுக்கும் வழியைக் காட்டி, இவ்வாறே அவர்கள்தாம் புதிய உலகத்துக்கு வழி காட்டுவர் போலும் என்று இடித்துரைத்தார். அனைவரும் வியப்படைந்தார்கள். முட்டையை நிற்கவைக்கும் வித்தை அனைவர்க்கும் எளிதான ஒரு காரியமாகவே இருந்தும், அதன் உபாயம் கொலம்பஸ் கூறின பிறகன்றி ஒருவருக்கும் புலப்படவில்லை யல்லவா? அது போலவே அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்ட பின்பு அதனைத் தாமும் கண்டு பிடிப்பதாகச் சாமானியர் கூறுவதற்குக் கஷ்டமா? எவ்வளவோ அல்லலும் சரீரப்பிரயாசை

யும் பட்டு ஒரு புதிய கண்டத்தைக் கண்டுபிடித்து அதற்கு வழி காட்டிய கிறிஸ்தோபருடைய செய்கை அரியது என்பதற்கு ஐயமும் உண்டோ? யார்தான் இதைக் கண்டு ஆச்சரியமெய்தார்கள் ?

கொலம்பஸ் 1493-ம்வருஷம் ஸெப்டம்பர்மாதம்25-ம் தேதி யன்று முன்னையதைக் காட்டிலும் பெரியதொரு கப்பற் படையோடு புறப்பட்டு மேற்கிந்தியத் தீவுகளில் ஒன்றான டோமின்கோவை நவம்பர் மாதம் மூன்றாந்தேதி யன்று அடைந்தார். அதன் பின் 1496-ம் வருஷம் அவர் தமது ஜன்ம தேசத்துக்குத் திரும்பிச்சென்று, மறுபடியும் 1498-ம் வருஷத்தில் மூன்றும் முறையாகப் புறப்பட்டார். இந்தத் தடவைதான் அவர் அமெரிக்கா கண்டத்தின் தென் பாகத்தைக் கண்டு பிடித்தார். இந்தச் சமயம் புதியவராக நியமிக்கப்பட்ட ஸ்பானிய கவர்னர் ஒருவர் கொலம்பஸை ஏதோ காரணத்தை முன்னிட்டுச் சிறை செய்து ஸ்பெயினுக் கனுப்பினர். ஆயினும் ஸ்பானிய அரசரும் அரசியும் அவரிடம் தாம்கொண்ட நன்மதிப்பை வெளிப்படுத்தி விடுவித்தார்கள்.


கடைசி முறையாகக் கிறிஸ்தோபர் 1502-ம்வருஷத்திற் புறப்பட்டு அமெரிக்காவை அடைந்து மெக்ஸிகோ குடாக் கடலின் தென்கரையில் பிரயாணம் செய்து பல விஷயங் களைக் கண்டறிந்து ஸ்பெயினுக்குத் திரும்பிச் சென்றார். ஆயினும் விதிவசமாக அவருக்குப் பலரும் விரோதிகளாயினர். அரசி யிறந்துவிடவே அரசனும் அவரால் உண்டான நன்மைகளைக் கருதாமல் அந்திய காலத்தில் தவிக்கவிட்டான் இவற்றால் கொலம்பஸ் மனமுடைந்து 1506-ம் வருஷம் மே மாதம் 20-ம் தேதியன்று வல்வடோலிட் என்ற இடத்தில் தேகவியோகமாயினர்.

# II

## வாஸ்கோட காமா.

சுமார் 500 வருஷங்களுக்குமுன் ஐரோப்பிய நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் வியாபாரப் போக்குவரத்துக்களெல்லாம் தரை மார்க்கமாகவே நடந்துவந்தன. அவ்வாறு தரைமார்க்கமா கவியாபாரிகள்செல்லும்போது அவர்கள்கடக்கவேண்டிய நாடுகளில் வசித்து வந்தவர்கள் அதற்காக அநியாயமான சுங்கங்களை வாங்கி வந்தனர். அநேக நாடுகளில் கொடிய யுத்தங்கள் நடந்து வந்தனவாகையால், போர்வீரர்கள் அடிக்கடி வியாபாரிகளை எதிர்த்துக் கொன்று அவர்கள் பொருளைக் கைப்பற்றி வந்தனர். அன்றியும் பல விடங்களில் கொடிய கள்வர்கூட்டங்கள் சஞ்சரித்திருந்து வியாபாரிகளைக்கொன்று பொருளைக் கவர்ந்து இன்னல் புரிந்து வந்தனர். இவ்வாறான கொடுமைகளுக்கு ஆற்றாதவர்களாய் ஐரோப்பிய நாட்டினரிற் பலரும் இந்தியாவுக்குச் செல்வதற்குச்சமுத்திர மார்க்கமொன்றைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று முனைந்தனர். சமுத்திர மார்க்கமானது தரை மார்க்கத்தைக் காட்டிலும் அதிக தூரமானதேயாயினும் அச்சமின்றியும் சீக்கிரமாகவும்செல்லலாகும் என்ற கருத்துப்பற்றியேஜனங்கள் அதனை மேற்கொள்ளலாயினர்.

இவ்வாறான முயற்சியில் முதலில் ஊக்கம் மிகுந்திருந்து பின்பு இது அசாத்தியம் எனக் கைவிட்டவர் பலர்ஆயினும், இறுதியில் வாஸ்கோட காமா என்ற தைரியமுள்ள ஸமுத்ர யாத்ரிகரே இதனை முட்டின்று நிறைவேற்றினர்.




வாஸ்கோ டகாமா வின் யாத்திரை

வாஸ்கோடகாமர் போர்ச்சுகல்தேசத்தில் அலெம்டிகோ என்ற மாகாணத்தில் ஸைன்ஸ் என்றதொரு சிறிய துறை முகப்பட்டினத்திலே கி. பி. 1460-ம் வருஷத்திற் பிறந் தார். அவர் தமது வாலிபப் பருவத்திற் கல்வி முற்றிய பின்பு, ஸ்பெயின் தேசத்தில் ஒரு பகுதியாகிய காஸ்டில் அரசாங்கத்தாரோடு நேர்ந்த யுத்தத்தில் போர்புரிந்து கடற் சண்டையில் திறமை வாய்ந்தவரெனப் பெயரெடுத்தார். பின்பு அவர் இந்தியாவுக்குக் கடல்மார்க்கமாக ஒரு வழியைக் கண்டு பிடிக்கும்படி போர்ட்சுகல் அரசனுல் தூண்டப்பட்டு அதற்கு வேண்டிய உதவியும் பெற்றுர்.

பின்பு வாஸ்கோட காமா, கி. பி. 1497-ம்வருஷத்தில் ஜுலை மாதம் 8-ம் தேதியன்று நான்கு கப்பல்களோடும் தேர்ந்த மாலுமிகள் சிலரோடும் போர்ச்சுகல்தேசத்தின் தலை நகராகிய லிஸ்பனைவிட்டுப் புறப்பட்டார். நண்பர்களும் பிறரு மாகப் பலவகைப்பட்ட மக்களும் ஒருங்குகூடி அவர்களு டைய சமுத்திரயாத்திரை நல்ல பலனோடு முற்றுப்பெறட்டு மென வாழ்த்தி மகிழ்ச்சியோடு விடை தந்து அனுப்பினர். யாத்திரிகர்களனைவரும் ஆபிரிக்காக் கண்டத்தின் மேலைக் கடற்கரை யோரமாகவே தங்கள் கப்பல்களைச் செலுத்திச் சென்றனர். இவர்கள்கிரமப்படியேசென்றபின் **நன்னம்பிக்கை** முனை (Cape of Good Hope) என்றுவழங்கும் ஆபிரிக்கா வின் தென்கோடி முனையை யடைந்தனர். இவ்வழியே பத்து வருஷங்களுக்கு முன் பார்தொலோமியூ டயஸ் என்பவர் வந் திருந்தார். ஆனல் இம்முனையைச் சுற்றி வெகுதூரம் வரை யிலும் எப்போதும் பெரும்புயல்கள் நிகழ்வது இயல்பா யிருந்தபடியாலும் அவரால் இவ்விடத்தைக் கடந்து மேற் சொல்ல முடியாமற்போனபடியாலும் அவர்மனமழிந்து இவ்

விடத்திற்குப் புயற்காற்று முனை(Cape of Storms) என்று பெயரிட்டுச் சுதேசத்துக்குத் திரும்பினர்; அப்போது ஆண்டிருந்த இரண்டாவது ஜான் என்னும் போர்ச்சுகேசிய அரசர் அதனைப்பற்றிக் கேள்வியுற்றபோது அதற்கு மங்கல வழக்காக நன்னம்பிக்கை முனை என்று பெயரிட்டார். வாஸ்கோட காமாவும் மாலுமிகளும் இம்முனையை யடைந்த வுடன் பெரும்புயல் உண்டாயிற்று. இவர்களால் காற்றுக் கெதிராகக் கப்பல்களைச் செலுத்த முடியாமற் போயிற்று. ஆயினும் தாம் கொண்ட முயற்சியிற் சிறிதும் பின்வாங்காத தலைவர் தம் தோழர்களை நோக்கி, 'நாம் நேரெதிராகப் போக முடியாதாகையால், பக்கவாட்டமாகவே கடலுக்குள் வெகு தூரம் சென்று பின்பு அவ்வாறே ஒதுங்கித் திரும்ப வேண் டும்; இவ்வாறு பலதரம் செய்வதால் நாம் முன்னுகச் சிறிது தூரம் செல்லலாம்,' என்ருர்.

மாலுமிகள் அவர் சொன்னவாறே கப்பல்களை மூன்று முறை செலுத்தியபின் மிக்க பிரயாசையுடன் நன்னம்பிக்கை முனையைச் சுற்றிவந்து விட்டனர். முதன் முதலாக நன்னம் பிக்கை முனையைச் சுற்றிவந்த ஐரோப்பிய மாலுமிகள் இவர் களே ஆவர்.

அப்போது மாலை நேரமாயிற்று; நிலப்பிரதேசம்எங்கும் தென்படவில்லை. கப்பல்களோ புயற்காற்றின் கொடுமையாற் சிதைந்து கொண்டே யிருந்தன. ஒரு கப்பல் மேலே செல்வ தற்குத் தகுதியற்றவாறு அடியோடு உடைந்துபோயிற்று. மாலுமிகளும் மிகுதியும் களைத்துப் போயிருந்தனர். ஆதலால் வாஸ்கோட காமா இரவுதங்கிக் களைப்பாறுமாறு மாலுமி கட்குக் கூறி, கப்பல்கள் ஒன்றைவிட்டொன்று பிரிந்து தவறிப்போய்விடாமலிருப்பதற்கு அடையாளமாக ஒவ்

வொரு கப்பலின் வெளிப்புறத்திலும் விளக்குகளை அமைக்கக் கட்டளையிட்டார்.

ஆகாராதிகள் குறைவுற்றமையாலும், கடலின் கொடுமையாலும், கப்பல்கள் பாழடைந்தமையாலும் போர்ச்சுகேசிய மாலுமிகள் தங்கள் கப்பல்களை எங்கேனும் ஒரு துறைமுகத்தில் நிறுத்தி எல்லா விஷயங்களிலும் சௌகரிய மேற்படுத்திக்கொண்டு கப்பல்களைச் செப்பனிட வேண்டுமென்று துணிந்தனர். இந்த நோக்கத்துடன் அவர்கள் சிறிது தூரம் சென்றபின், பாறைகளும், சிற்றாறுகள் சங்கமமாகும் சிறிய கடற்கழிகளும், ஒரு பேராறும் உள்ள கடற்கரையை யடைந்தனர். மாலுமிகளிற் பலர் சிற்றாறுகளுலொன்றிற் பலவகைப்பட்ட மீன்களைப் பிடித்துச் சமைத்துண்ண, அதன் பயனாக அதிக நோயுற்றனர்.

பிறகு வாஸ்கோட காமா சில மனிதர்களை உள்நாட்டில் ஏதேனும் கிராமமிருக்குமா என்று பார்த்துவரப் படகுகளில் அனுப்பினர். ஆனால் வெகுதூரம் வரையிலும் நிர்மானுஷ்யமான பிரதேசமாக அந்நாடு இருக்கவே அவர்கள் அவ்விடம் விட்டுப் புறப்பட்டனர்.

இதற்குள் மழைக்காலம் நெருங்கிவிடவே முன்போலப் பெரிய புயல்கள் சம்பவித்தன. கப்பல்கள் அதிகமாகச் சேதமடைந்தன. மாலுமிகள் பட்டகஷ்டங்களுக்களவில்லை. வாஸ்கோடகாமாவும் அதிகத் துன்புற்றார். கப்பல்கள் அதிகமாகச் சேதமுற்றிருந்தனவாதலால் அவைகளைச் செப்பனிட்டே தீரவேண்டுமென்றும் அதற்காகக் கடற்கரையை நோக்கிச் செல்ல வேண்டுமென்றும் மாலுமிகள் தலைவரை நிர்ப்பந்தித்தனர். ஆனால் அவர்கள் கொண்ட உண்மையான கருத்து என்னவென்றால் இந்தச் சாக்கை முன்னிட்டுக்கொண்டு

சுதேசம் திரும்பவேண்டுமென்பதே. வாஸ்கோட காமாவோ இவர்களுடைய எண்ணத்தை முன்னதாகவே அறிந்திருந் தார். ஆதலால், கப்பல் செலுத்துவதற்கு வழிகாட்டியாக இருந்த, தலைமை மீகாமனைச் சிறையிட்டு அன்னோனத் தாம் வெளிவிடப் போவதில்லையென்றும், அவனொருவனே சுதே சத்துக்கு மார்க்கம் அறிந்தவனாதலால் கப்பல்களைத் திருப்ப முடியாதென்றும் கண்டிப்பாக மறுத்து விட்டார். பிறகு மற்றவர்களும் பயந்து அவர் சொற்படியே நடக்க ஒப்புக் கொண்டு கப்பல்களை மேற் செலுத்திச் சென்றனர்.

கடைசியில் ஒரு நாள், சுற்றிலும் அதிக ஜனநட மாட்டமுடைய செழிப்பான கிராமங்களை யுடையதும், தெளிவும் சுத்தமும் பொருந்திய ஓரழகிய ஆறு பாய்கின்ற கடற்கழியை யுடையதுமான ஒரு கடற்கரைப் பிரதேசத்தை வாஸ்கோடகாமா அடைந்தார். அப்பிரதேசத்தில்வாழ்ந்திருந் தவர் கருநிறம் பொருந்திய நீக்ரோவர். புதுமையான கப்பல்கள் தம் நாட்டின் கரையில் வந்து தங்குவது கண்டு அவர்கள் பேருவகை யுற்றுச் சுற்றிச் சுற்றிப் பார்த்தனர். போர்ட்சுகேசியர் தங்களோடு முகம்பார்க்குங் கண்ணாடிகளும், அழகிய மணிகளும், நாகரிகமற்ற ஜனங் களுக்குப் புதுமையாய் விளங்கக்கூடிய பல பொருள்களும் தம்மோடு கொண்டு வந்திருந்தார்களாதலினால் அப்பொருள் களை அவர்களுக்குக்காட்டி அவர்களுடைய நன்மதிப்பையும் சகாயத்தையும் பெற்றனர். அவ்விடத்திற் கப்பல்கள் நன் ருகப் பழுது பார்க்கப்பட்டன. சிறிது காலத்திற்குள் மிகுதியும் உடைந்து போன ஒரு கப்பலிலுள்ள மனிதர்களை மற்ற மூன்று கப்பல்களிலு மேற்றிக்கொண்டு அக்கப்பலைத் தீக்கிரையிட்டுப் பின்பு வாஸ்கோட காமாவும் அவர் மாலுமி களும் மற்ற மூன்றையும் செலுத்திக்கொண்டு சென்றார்கள்.

பின்பு அவர்கள் மொஜாம்பிக் என்ற இடத்தை யடைந்தனர். அவர்கள், தமக்கு வழிகாட்டி உதவி புரிவதற்கு ஓராளை யனுப்பும்படி அவ்விடத்திய அரசனைக் கேட்டுக் கொண்டனர். அவ்வாறே அவன் ஓராளை யனுப்பினனேனும் வாஸ்கோட காமாவும் அவருடைய வீரர்களும் அம்மனிதனிடம் நம்பிக்கை கொள்ளவில்லை. ஏனெனில் அம்மனிதன் அபாயகரமான ஓரிடத்தை நோக்கிக் கப்பல்களைச் செலுத்தும்படி செய்து வந்தான். அதனால் வாஸ்கோட காமா அவனைப் பிடித்துச் சிறையிட்டு, மோசக்கருத்துக்கொண்ட தன் அரசனுடைய கட்டளையினாலேயே அவன் அவ்வாறு செய்தான் என்பதை அவன் வாயாலேயே அறிந்துகொண்டு அவனைத் தண்டித்தார்.

பிறகு அவர்களனைவரும் மேலிண்ட் என்ற இடத்தை யடைந்தார்கள். அங்கே அவர்களுக்கு நம்பிக்கையான வழிகாட்டி யொருவன் அகப்பட, அவன் துணையைக்கொண்டு புறப்பட்டு இருபத்திரண்டு நாட்கள் வரையில் நேர் கிழக்காகச் சமுத்திரத்தில் தங்களுடைய கப்பல்களைச் செலுத்திக் கொண்டு சென்று தென்னிந்தியாவின் மேலைக்கடற்கரையில் உள்ள கள்ளிக்கோட்டை (Calicut) என்ற துறைமுகத்தை யடைந்தார்கள்.

அக்காலத்தில் அந்நகரை யாண்டுவந்த ஸாமூதிரியினுடைய ஆட்கள் படகுகளிலே வந்து வாஸ்கோட காமாவைக் கண்டு அவரை யாரென்றும் எவ்விடத்திலிருந்து வந்தவரென்றும் கேட்டறிந்து கொண்டனர். பின்புஅவர் தம்மோடு விலையுயர்ந்த சில பொருள்களைக் கையுறையாக எடுத்துக்கொண்டு சென்று அரசரைக்கண்டு அவ்விடத்தில் வியாபாரஞ்

செய்யத் தமக்கு அனுமதியளிக்கும்படி கேட்டுக்கொண்டார். அரசரும் அதற்கு இணங்கினர்.

அப்போது வாஸ்கோட காமா ஐரோப்பியர்களுக்குப் பயன்படக் கூடிய பலவகைப்பட்ட பண்டங்களைச் சுதேசிகளிடம் அதிக விலை கொடுத்து வாங்கினர். ஆனால் இந்திய வியாபாரிகள்சிலர் சீக்கிரத்திலே போர்ட்சுகேசியத்தலைவரிடம் அசூயை கொண்டு தம்அரசரிடம் சென்றுஅவருக்குவிரோதமாகப் பல விஷயங்களைக் கூறி மனத்தைக் கலைத்து, மோசமான கருத்தோடேயே அவர் வந்திருக்க வேண்டு மென்று அவரை நம்பச் செய்தனர். அதனால் ஸாமூதிரி வாஸ்கோட காமாவைப் பிடித்துச் சிறையிலிம்படி கட்டளையிட்டார். ஆனால் போர்ட்சுகேசியத் தலைவர் இதனை முன்னதாகவே அறிந்து கொண்டு தப்பித்துக் கடற்கரை யோரத்திலேயே உள்ள வேறு பட்டணங்களில் ஒன்றை யடைந்தார். பின்பு சிலகாலம் பொறுத்து அவர்தம் ஜன்மபூமியை நாடிச்சென்று கி.பி. 1499-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் பதினெட்டாம் தேதியன்று தம்முடைய யாத்திரைக்காகச் செலவிட்ட தொகைக்கு அறுபது மடங்கு அதிக மதிப்புள்ள திரவியங்களோடு லிஸ்பனை யடைந்தார். போர்ட்சுகேசியர் அனைவரும் அவ்யாத்ரிகரைப் பெருங்களிப்போடு வரவேற்றனர்.

மூன்று வருஷங்கள் கழித்து, அதாவது 1502-ம் வருஷத்தில் பிப்ரவரி மாதத்தில், அவர் திரும்பவும் இந்தியாவுக்குச் சென்றார். அப்போது கள்ளிக்கோட்டையில் உள்ள மாப்பிள்ளைமார்களென்ற முகமதிய மதத்தினர்சிலர், ஒரு பெருங்குழப்பமுண்டுபண்ணி அவ்விடத்திலுள்ள போர்ட்சுகேசியரை வருத்தி அவர்களுடைய கார்யஸ்தரான 'கொறியா' என்பவரைக் கொன்றுவிட்டனர். அதனால் வாஸ்கோட

காமா அந்நகரை முற்றுகையிட்டுக் கள்ளிக்கோட்டையார்களுடைய கப்பற்படையை ஒரு கடற்போரில் முறியடித்தார். அதன்பிறகு, 1503-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் முதல் தேதியன்று அவர் லிஸ்பனுக்குத் திரும்பிச் செல்ல, அல்பான்ஸோடி ஆல்புகெர்க் என்ற கீர்த்தி வாய்ந்த வீரர், போர்ட்சுகேசியர் தலைவராக இந்தியாவுக்கு வந்து சேர்ந்தனர்.

வாஸ்கோடகாமா இனித் தம்வாழ்க்கையை நிம்மதியாகக் கழிக்கவேண்டுமென்று விரும்பி ஏவோரா என்ற விடத்தையடைந்தார்: ஆயினும் அப்போதும் போர்ட்சுகேசிய அரசரான முதலாவது எம்மானுவேல் இந்திய-போர்ட்சுகேசிய வியவகாரங்களில் தமக்குப் போதனைகூறும் மந்திரியாக அவருடைய உதவியை நாடியிருந்தார். கி.பி. 1520-ம் வருஷத்தில் அவர் விடுகிரா என்ற இடத்துப் பிரபுவாகக் கௌரவிக்கப்பட்டுப் பட்டம் பெற்றார். தம் வாழ்நாளை இனிச் சுகமாகக் கழிக்க வேண்டுமென்று கருதியிருந்த அவர் தம் தேசஸேவையையே முக்கியமாகக் கருதும்படி நேரிட, 1523-ம் வருஷத்தில் அரசருடைய வேண்டுகோளின்படி மூன்றாம் முறையாக இந்தியாவுக்குவந்து அரசப்பிரதிநிதியாக ராஜாங்கநிருவாகம் புரிந்து வந்தார். ஆனால் அவர் அவ்வுத்தியோகத்தில் அதிக காலம் நீடித்திருக்கவில்லை. கொடிய காலன் அடுத்த வருஷத்திலேயே அவரைத் தன்னுலகுக்கு அழைத்துக் கொண்டான்.

தற்காலத்தில் சமுத்திர மார்க்கமாக இந்தியாவுக்கும் மேனாடுகளுக்கும் நடக்கும் வியாபார முதலிய சகலவியவகாரங்களின் பெருக்கையும் பார்க்கும்போது, இவையெல்லாம் ஆதியில் ஒரு போர்ட்சுகேசிய நாவிகாது திறமையாலேயே சாத்தியமாயின என்று நினைக்க யார்தான் மகிழ்ச்சியுறார்?


---

III

# பெர்டிஞண்டு மெகல்லென்

பூகோள சாஸ்திரத்தில் ஆச்சரியப்படத்தக்க அரிய பல விஷயங்கள் கண்டுபிடிக்கப்பட்ட காலத்தில், கொலம்பஸும் வாஸ்கோட காமாவும் பால்போவாவும் பெருகுகின்ற கீர்த்தியை யுடையவர்களாய் விளங்குகின்ற காலத்தில், மாதத்துக்கு மாதம் நிலவுலகத்தினது படத்தை மாற்றி வரையும்படி நேரிட்ட காலத்தில், துணிகரமும் சாகசமும் உடைய வியாபாரிகள் பொன்னும் மணியும் அளவின்றிப் பிறநாட்டில் ஈட்டிச் சுதேசம் போந்து சுகமே வாழும் காலத்தில், தேச பக்தியும் ராஜ பக்தியும் உடைய வீர நாவிகர்கள் புது நாடுகளைத் தம் தாய் நாடுகளோடு சேர்த்து அபிவிருத்தி செய்யும் காலத்தில், பெர்ஞண்டோ மெகல் ஹானிஸ் அல்லது பெர்டிஞண்டு மெகல்லென் (Ferdinand Magellan) என்பவர் போர்ட்சுகல் தேசத்தில் ட்ராஜோ மான்டிஸ் (Trazo mantes) என்ற மாகாணத்தில் ஸப்ரோஸா (Sab rosa) என்ற ஊரில் கி. பி. 1480-ம் வருஷத்தில் ஒரு சீமானுடைய மகனாய்ப் பிறந்தார். அவர் தமது வாலிபப் பருவத்திலே கரடு முரடான பிரதேசத்தில் முரடர்களின் மத்தியிலே வளர்ந்து வந்தாராயினும் நன்றாகக் கல்வி கற்றுத் தேர்ந்து போர்ட்சுகேசிய அரசியினுடைய சொந்த ஆட்களில் ஒருவராக உத்தியோகம் பெற்றார். சிறுவயதிலே அவர் அதிக முரட்டுக் குணம் உடையவராய் இருந்தாரென்று கூறுவர்.

பெர்டிஞண்டு மெகல்லென் வாழ்ந்து வந்த லிஸ்பன் நகரமானது, அப்போது நாவிகவியவகாரங்கள் பலவற்றிற்கும்




மெகல்லெனுடைய யாத்திரை

ஒரு முக்கிய ஸ்தலமாக இருந்தது. வீர நாவிகர் பலருடைய தீரச் செயல்களுமே எங்கும் பிரஸ்தாபிக்கப்பட்டு வந்தன. தினமும் கிழக்கிந்தியத் தீவுகளிலிருந்து பலவகைப்பட்ட விலையுயர்ந்த திரவியங்களையுங் கொண்ட கலங்கள் துறை முகத்தில் வந்து நிற்கும். கடலுக்கப்பாலுள்ள நாடுகளுக்குச் செல்வதற்கு முந்திக்கொண்டு நூற்றுக்கணக்கான வாலிபர்கள் அந்நகரை யடைந்து கப்பலிலேறுவர். வேறு நாடுகளுக்குச் சென்று திரும்பி வந்து புதுப்புது விஷயங்களைக் கூறிக்கொண்டு துறையிலிறங்கும் வீரரோடு மெகல்லென் பழக நேரும். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களால் அவருடையமனம் முற்றிலும் துணிகரமான கடற்பிரயாணத்திலேயே நாட்டம் உற்றது. போர்ட்சுகலைவிட்டுச் சென்ற நூற்றுக்கணக்கான மாந்தர்கள் திரும்பிவராமலே அழிந்ததும் உண்டு; ஆயினும், கஷ்டப்படாமல் சுகப்பட முடியாதென்றும், கோழைத்தனம் கீர்த்திபயவாது என்றும் மெகல்லென் நன்குயறிவார். ஆதலால், அவர் சாந்தமான சமஸ்தான வாழ்க்கையைச் சிறிதும் விரும்பாதவராய்த் தீரமாகக் கடற் பிரயாணத்தையே நாடினார்.

ஆனால் அதற்குரிய சந்தர்ப்பங்கள் அவருக்கு வாய்க்கவில்லை. கி. பி. 1505-ம் வருஷம் பிரான்ஸிஸ்கோ டா அல்மீடா என்பவர் இந்தியாவிலுள்ள போர்ட்சுகேசிய பிரதேசங்களுக்கு அரசப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். மெகல்லென் அவரோடு சென்ற கடற்படையாளருள் ஒருவரானார். அல்மீடா சிறந்த வீரர்; ராஜபக்தியிலும் தேசபக்தியிலும் சிறந்தவர்; உத்தம புத்திமான்; பிறருக்கு எவ்விதத்திலும் முன்மாதிரியாக விளங்கத்தக்கவர். இயற்கையாகவே நல்ல குணங்களையுடைய மெகல்லென், இவரிடம் சேவை செய்ததாலும், இவருடைய சகவாசத்தை மேற்கொண்டதாலும் பின்னும் சிறந்த தன்மையாளரானார்.

போர்ச்சுகேசியருடைய கடற்படையானது இந்தியா-வுக்குச் செல்லும் வழியிலே ஆபிரிக்காவின் கீழ்க்கரையில் தங்கி, மொம்பாஸா என்ற கோட்டையை முற்றுகையிட நேரிட்டது. அதில் மெகல்லென் தம்முடைய வீரத்தை வெளிப்படுத்தினர். அவர்கள் இந்தியாவை யடைந்த பின்பு, மூர்கள் என்ற ஒருவகைச் சாதியார்களோடு அடிக்கடி சண்டையிட நேரிட்டது. இந்தியர்களாலும் முகம்மதியர்-களாலும் எகிப்தியர்களாலும் மலாய் நாட்டார்களாலும் தூண்டப்பட்ட மூர்கள், போர்ச்சுகேசியரை உபத்திரவப் படுத்தியதற்கு அளவில்லை. அப்படிப்பட்ட மூர்களோடு யுத்-தஞ் செய்ய நேரிட்டபோது மெகல்லென் நடந்துகொண்ட விதத்திலிருந்து அவர் அஞ்சா நெஞ்சும், போரிற் பின்னி-டாத தன்மையும், எடுத்த காரியத்தை முட்டின்றி முடிக்க-வல்ல திறமும் உடையவர் என்பது அனைவர்க்கும் தெரிந்-தது. அவ்வாறான போர்களுள் ஒன்றில் அவர் அதிகமாகக் காயமடைந்தார்.

1509-ம் வருஷத்தில் அவர் ஸுமத்ராவுக்கும் மலாய் தீபகற்பத்துக்கும் சென்ற படையிற் சேர்ந்தார். பின்பு அவர், கோவா பட்டணத்தையும் மலாக்கா பட்டணத்தை-யும் கைப்பற்றுதற்குச் சென்ற படைகளிலும் சேர்ந்தார். மலாக்காவைக் கைப்பற்றினது, மொலுக்கஸ் முதலிய வியா-பார யோக்கியமான இடங்களுக்குச் செல்லும் மார்க்கத்-தில் முக்கியமான இடமொன்றைப் போர்ச்சுகேசியர்களுக்-குத் தந்ததென்னலாம். இதுமுதல் மெகல்லெனுடைய பிற்-கால சரிதம் இத்தீவுகளோடேயே சம்பந்தப்படுவதாயிற்று.

ஏழு வருஷகாலம் இவ்வாறு வாழ்ந்து வந்தபின், மெகல்லென் போர்ச்சுகலுக்குத் திரும்பினர். அவருடைய

உழைப்பை அரசாங்கத்தார்மெச்சிஉத்தியோகத்தில் அவருக்குப் பெரிய பதவி கொடுத்தார்கள். ஆயினும் முன்போலவே அவருக்குச் சாந்தமான சமஸ்தான வாழ்க்கையில் இச்சையில்லாமற் போகவே, அவர் அடுத்த வருஷத்திலேயே ஆபிரிக்காக் கண்டத்தின் வடபாலுள்ள மொராக்கோவிலிருந்த மூர்களோடு யுத்தஞ்செய்யச் சென்ற படையிற் சேர்ந்தார். இவ்யுத்தத்தில் போர்ட்சுகேசியர்களுக்கு அதிக சிரமம் இல்லாதிருந்தபோதிலும் மெகல்லெனுக்குக் காலிலே ஓர் அபாயகரமான காயமுண்டாயிற்று. அதனால் தம் ஆயுளின் பிற்கால முழுதிலும் மெகல்லெனுடைய கால்களுள் ஒன்று முடமாகவே இருக்கும்படி ஆயிற்று.

சிறிது காலத்துக்கெல்லாம் ஒரு சம்பவம் நேரிட்டது. அதுவே அவருடைய வாழ்க்கைச் சரிதத்தில் மிக முக்கியமானதொரு விஷயமாயிற்று. மூர்களினிடத்திலிருந்து கவரப்பட்ட பலபொருள்களையும் பாதுகாக்கும்படி மெகல்லெனும் மற்றொரு படைத்தலைவரும் ஆஞ்ஞாபிக்கப் பட்டிருந்தனர். அப்போது சில கால்நடைகள் மாயமாய்க் காணமற் போகவே, அவைகளை மெகல்லெனே விற்று விட்டாரென்று அவர்மீது பழியேற்பட்டது. அடாததான இப்பழியைப் பொறுமல் அவர் தம் அரசராகிய மானுவெல்லினிடம் நேரில் முறையிட்டுக் கொள்வதற்குச் சென்றார். ஆனால் மொராக்கோவிலிருந்து பலவாறு தயாரிக்கப்பட்ட கட்டுக்கதைகள் முன்னமேயே மெகல்லெனுக்கு விரோதமாக அரசருக்குச் செவியறிவுறுத்தப் பட்டிருந்தமையால் அவர் நியாயம் பெற இயலவில்லை. ஆயினும் அவர் அச்சமயத்திலேயே இயற்கையான தம்முடைய துணிவோடு தமக்கு உத்தியோகத்தில் மேற்பதவி தரவேண்டுமென அரசரைக் கேட்டுக் கொண்டார்.

அரசர் முதலில் திடுக்கிட்டுப் போனார்; பின்பு அவர் கோபத்துடன் மெகல்லெனை நோக்கி, சாட்டப்பட்ட பழிக்கு உத்தரவுசொல்லுதற்குமொராக்கோவிற்குத்திரும்பிச்செல்லு மாறு கட்டளை யிட்டார். தம்முடைய நிரபராதத்தை விசாரணையால் நிரூபிப்பதை மெகல்லென் பெரிதும் விரும்பினாரேனும் அதிகாரிகளால் இவ்விஷயம் கவனிக்கப்படாமற் போயிற்று. அதனால் அவர் திரும்பவும் அரசரைக்கண்டுஅவருடைய பிரியத்துக்குப் பாத்திரராக முயன்றார். ஆனால் அவருடைய முயற்சிகள் வீணாயின. அது முதல் நன்றியற்ற தம் நாட்டுக்கு உழைப்பதனால் தமக்கு அபகீர்த்தியேயன்றி வேறு ஏதுமில்லை என்ற எண்ணம் அவருக்கு உறுதியாக ஏற்பட்டது. அதனால் அவர் தேசாபிமானத்தை விட்டுவிட்டு, லோகோபகாரமான தம் பிற்காலச் செய்கையை எப்படியும் நிறைவேற்ற விரும்பி ஸ்பானிய உதவியை நாடினார்.

பெர்டினாண்டு மெகல்லென், நியாயம் பெறாது தம்மைப் போலவே துன்புற்ற வேறு சிலரால் தொடரப்பட்டு 1517-ம் வருஷத்தில் ஸ்பெயினுக்குக் கடந்து சென்று ஸெவில் நகரத்தையடைந்து அங்கே பிரபலராயிருந்த டியாகோ பார்போஸா (Diago Barbosa) என்றவருடைய நன்மதிப்பையும் நட்பையும் ஆதரவையும் பெற்றார். சிறிது காலத்தில் அவர் பார்போஸாவின் மகளாகிய பியாட்ரிக்ஸை மணம் புரிந்துகொண்டதனால் அவர்களுடைய நட்புப்பின்னும் பெருகுவதாயிற்று. ஆயினும், பாபம், இவ்வின்பகரமான வாழ்க்கை மெகல்லெனுடைய மரணத்தினாலும், அதனைத் தொடர்ந்து அவருடைய அருமைக் குழந்தையின் மரணத்தினாலும், அவருடைய மனைவியின் துயரத்தினாலும் சீக்கிரத்தில் நிலைகுலைந்து போகும் என்று அப்போது யார் நினைத்தார்கள்?

அப்பால்தாம் முதலில் சென்றிருந்த மொலுக்கவில் வெகுநாள் தங்கியிருந்து சுதேசந் திரும்பிய தமது நண்ப ரொருவனால் அப்பிரதேசத்தின் சிறப்பைப் பற்றியறிந்து அங்குப் பிரயாணம் செய்ய யத்தனித்தார். கிரிஸ்தோபர் கொலம்பஸைப் போலவே கிழக்கிந்தியத் தீவுகளுக்கும் இந்தியாவுக்கும், மேற்காக ஒரு மார்க்க மிருக்கவேண்டு மென்று அவர் உறுதியாக நம்பினார். ஆயினும் பெரியதான அமெரிக்காக் கண்டம் பல ஆயிரம் மைல்கள் தெற்கே கடலிற் பரந்து ஊடுருவி யிருப்பதால் சங்கடப்பட்டவராய் அதனைச் சுற்றிச் சென்றே அம்மார்க்கத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று துணிந்தார். அக்காலத்திய அறிஞர்கள் அவ்வாறு சுற்றிச் செல்ல மார்க்க மிராதென்று நம்பி யிருந்தனரேனும், மெகல்லென் தாம் கொண்ட அபிப்பிராயத்தை மாற்றவில்லை.

இம்மாதிரி தாம் பிரயாணஞ் செய்ய நினைத்து, உதவி கேட்ட காலத்தில் போர்ட்சுகேசிய அரசரான மானுவேல் இகழ்ந்து உதவி புரிய மறுத்திருந்தார். ஆதலின் மெகல்லென் ஸ்பானிய அரசர் சார்லஸினிடம் தம்முடைய எண்ணத்தை வெளியிடமுயன்றார். ஆயினும் ஸ்பானிய மந்திரிகளிற் பலரும் இது கூடாத காரியமென, அவர்களுள் சிறந்த அறிஞரான ஜுவன் டி அரண்டா என்பவர் இதனைப்பற்றித் தீர்க்கமாய் ஆலோசித்து அக்கரை கொண்டவராய் மெகல்லெனையும் அவருடைய உதவியாளராகிய ரய் பாலேரியோ (Ruy Falerio) என்பவரையும் அரசர் சமுகத்திற்கு அழைத்துச் சென்றார்.

அக்காலத்தில் ஸ்பெயினுக்கும் போர்ட்சுகலுக்கும் பரஸ்பரமானதொரு ஒப்பந்த மிருந்தது. அதன்படி, ஸ்பானி

யர்கள் மேற்காகவே சென்று புதுப் பிரதேசங்களைக் கண்டு பிடித்து அவற்றின் வியவகாரங்களை நடத்திக்கொள்ள வேண்டுமென்றும், போர்ட்சுகேசியர் அவ்விதமே கிழக்கு நோக்கிச் சென்று செய்து கொள்வதென்றும் ஏற்பட்டிருந்தது. அதனால் மெகல்லென், மேற்காகவே கிழக்கிந்தியத் தீவுகளுக்கும் இந்தியாவுக்கும் செல்லவேண்டுமென்றும், அப்பிரதேசங்களுக்குப் போர்ட்சுகேசியருக்குள்ள உரிமை ஸ்பானியருக்கும் உண்டென்றும் வாதிக்க, சார்லஸ் அதன் பலாபலன்களை ஆராய்ந்தறிந்து அம்முயற்சியில் உதவிபுரிய ஒப்புக்கொண்டார். அதன்படி ஐந்து கப்பல்க ளடங்கிய ஒரு சிறு படை தயாரிக்கப்பட்டு முன்னூறு சிறந்த மாலுமிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இவ்விஷயம் விரைவிலே போர்ட்சுகேசிய ராஜதானியிலே பரவியது. போர்ட்சுகேசியத் தலைவர்களும் பிறரும் இப்பெரிய யாத்திரையைத் தடுக்கப் பலவாற்றானும் முயன்றார்கள். ஒன்றும் பயன்படாமற் போகவே இறுதியில் மெகல்லெனை வஞ்சகமாகக் கொன்றாகிலும் தீர்ப்பது என்று துணிந்தனர். ஆனால் அம்முயற்சிதானும் கடவுளருளாற் கூடாது போயிற்று.

முடிவில், நாகரிகமற்ற ஜனங்கள் பெரிதும் விரும்பக் கூடிய பலவகைப்பட்ட பொருள்களையும், இத்தனை பெரிய யாத்திரைக்கும் போதுமாறு தாராளமாகத் திரவியங்களையும் பிறவற்றையும் கப்பல்களில் நிரப்பிக்கொண்டு மெகல்லெனும் அவருடைய வீர நாவிகர்களும் புறப்பட்டனர். மாறி மாறி வந்த துயரத்துடனும் களிப்புடனும், உற்றாரும் உறவினரும் தேசமக்களும் அவர்களுக்கு விடையளித்தனர். ஆனால் பின்னால் நேரும் பயன் எப்படிப்பட்டது, எப்படிப்

பட்ட அரும்பாடுபட்டு, கொண்ட காரியத்தில் ஜயம் பெறும்படியாயிருக்கும் என்ற, இவை முதலான பல விஷயங்களை அப்போது ஒருவரும் அறியவில்லை.

புறப்படுமுன் மெகல்லெனுடைய ஆப்தராயிருந்த ரய்பாலேரியோ எக்காரணங் கொண்டோ இவ்யாத்ரிகக் கூட்டத்தினரை விட்டுப் பிரிந்து நின்றார். அதனால் மெகல்லென் தம் அதிகாரப்படியே எளிதில் எல்லா விஷயங்களையும் யாத்திரையிலே நடத்தமுடியும் என்று எண்ணினார். ஆனால் ஜுவன்டி கார்த்தஜினு என்ற கப்பல்தலைவன் தமக்கு விரோதியாக மாறி யாத்திரையின் மத்தியிற் கலகம் செய்வான் என்று அவருக்கு அப்போது தெரியாது.

இவ்யாத்ரிகக் கூட்டத்தாரில் அந்தோனியோ பிகாபெட்டா (Antonio Pigafetta) என்ற இத்தாலியப் புலவர் ஒருவர் இருந்தார். இவரே இவ் யாத்திரையின் சரிதத்தை முற்றிலும் எழுதிவைத்தவர். மெகல்லென் தினசரிக் குறிப்பு ஒன்றும் வைக்காமற் போனதனால் நாம் இவருடைய நூலிலிருந்தே இவ் யாத்திரையைப் பற்றிய சகல விஷயங்களையும் அறிகிறோம்.

கப்பற் படையானது புறப்பட்டு அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தைக் கடந்து சென்று தென் அமெரிக்காவை நெருங்கும்போது ஜுவன்டி கார்த்த ஜினு அவருடைய அதிகாரத்துக்குக் கீழ்ப்படிய மறுத்துக் கலகத்துக்குச் சன்னத்தன் ஆனான். ஆனால் முன்னமேயே தாம் சில மாலுமிகளால் கஷ்டப்படக்கூடுமெனத் தம் மாமனாராகிய பார்போஸாவினால் எச்சரிக்கப்பட்டிருந்ததால் சாக்கிரதையாக இருந்த மெகல்லென் உடனே அவனைச் சிறைசெய்து கடுங்காவலில் வைத்தார்.

டிசம்பர் மாதத்தில் கப்பல்கள் தென்னமரிக்காவின் கீழ்க்கரையிலுள்ள ரியோ டி ஜனிரோ என்ற துறையை யடைந்தன. முகம்பார்க்கும் கண்ணுடிகள், மணிகள், சீப்புக்கள், தூண்டிற்கோல்கள் முதலிய அற்பமான பொருள்களைப் பெற்றுக்கொண்டு தென் அமெரிக்கா வாசிகள் மாலுமிகட்குப் பலவகைப்பட்ட மீன்களேயும் பழங்களேயும் இனிய கிழங்குகளேயும் உணவுப் பொருள்களேயும் மிகுதியும் தந்தனர்.

பிறகு மெகல்லென் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுத் தென் அமெரிக்காவின் கரையோரமே தெற்காகச் சென்று, ஏழுவருஷங்களுக்கு முன்பு பால்போவாவினுல் கண்டு பிடிக்கப்பட்ட (பஸிபிக்) மகா சமுத்திரத்திற்கு வழியாக விளங்கக்கூடும் என்று தாம் உறுதியாக நம்பிய ஜலசந்தியைக் கண்டு பிடிக்க முயன்ருர். பல அரிய விஷயங்களே அவர் கண்டறிந்தாரேனும், நெடுநாட்களாகியும் ஜலசந்தியொன்றையும் அவர் கண்டு பிடிக்க முடியவில்லே. அச்சமயம் பெரும் புயல்கள் சம்பவித்துக் குளிர் மிகுதியும் உண்டானதால் கப்பற்படை, பாடகோனியா (Patagonia) வின் கரையில் ஒரு கழியில் தங்க நேரிட்டது. அப்போது மாலுமிகள் அமைதியற்றவர்களானுர்கள். தலேவர் அவர்கட்கு உணவுப் படிகளேக் குறைக்கும்படி கட்டளேயிட்டார். மாலுமிகளிற் பலரும் கஷ்டப்பட்டு யாத்திரை செய்து பின்பு ஈட்டும் தனத்தைக் காட்டிலும் தங்கள் உயிரும் மனேவி மக்களும் வீடு வாசல்களுமே மேலானவையாதலால், ஸ்பெயினுக்கே திரும்பிச் சென்று, அமெரிக்காக் கண்டம் பிளவில்லாமல் தெற்கே வெகு தூரம் பரந்திருக்கின்றதென்று கண்டோமென அனேவர்க்கும் கூறிவிடலாமே என்று வாதிக்கலானுர்கள். தலேவரோ அவர்களே நோக்கிப் பின்வரும் புகழைப்பற்றியும் கடமை யியற்றலின் பெருமையைப் பற்றியும் விளங்கக் கூற,

அவர்களிற் பலர் நல்லறிவுடையவர்களானார்கள். சிலர் மட்டும் கலகத்திலேயே நாட்டமுற்றிருந்தனர்.

ஒருநாளிரவு அதிகஇருட்டாயிருந்தபோது கலகக்காரர்களால் கார்த்தஜினா விடுவிக்கப்பட்ட, அவன், கலகத்துக்கு முக்கிய காரணமாயிருந்த ஒரு கப்பல் தலைவனுடைய உதவியைக்கொண்டு தான் முன்பு செலுத்தி வந்த கப்பலிலும் மற்றுமொரு கப்பலிலும் உள்ள வீரர்களைத் தன்னோடு சேரச் செய்து கலகத்தை மூட்டினான். சிறந்த வீரராகிய மெகல்லென் உடனே கலகத்திற் சேராதிருந்த சான்டியாகோ, தமது சொந்தமான ட்ரினிடாட் ஆகிய இரண்டு கப்பல்களையுங் கொண்டு கலகக்காரர் வசமான விக்டோரியா என்னும் கப்பலை மீட்டுக்கொண்டு, பின்பு இரவு வேளையில் வழியை மறித்து யுத்தஞ் செய்து அவர்களை அடக்கினார். பின்பு அவர் கலகத்துக்கு முக்கிய காரணமாகிய தலைவனைத் தூக்கிலிட்டுக் கார்த்தஜினாவைக் கரையிற் கொண்டுபோய் உதவியற்றுத் தவிக்குமாறு விட்டுவிட்டுத் திரும்பி வந்து கப்பல்களை மேலே செலுத்திச் செல்ல உத்தரவிட்டார். இதனால்,மெகல்லென் புத்திசாதுரியத்தோடு தேகவன்மையும் விடாமுயற்சியும் மனோதைரியமும் உடையவர் என்பதும் அவரை எதிரிட்டுக்கொண்டு நிருவகிப்பது அரிதென்பதும் மாலுமிகளுக்கு நன்குபுலப்பட்டது. அதனால் அவருடைய சர்வாதிகாரத்துக்கும் அவர்கள் உட்பட்டவரானார்கள்.

இதற்குள் ஸான்டியாகோ என்ற கப்பல் புயலில் அகப்பட்டு உடைந்துபோயிற்று. மற்ற நான்கு கப்பல்களும் தைரியத்துடன் புயலில் நிருவகித்துக்கொண்டுபோய் அமெரிக்காவின் தென்கோடியை யடைந்தவுடனே, தாம் இத்தனை காலமாக உண்டென்று உறுதியாக நம்பியிருந்த பெரிய ஜல

சக்தியை மெகல்லென் கண்டார். பஸிபிக் மகா சமுத்திரத்திற்கு வழியாக விளங்கும் அச் சலசந்தியை அவரே முதன் முதலிற் கண்டவராகையால் அன்று முதல் அதற்கு மெகல்லென் ஜலசந்தி என்னும் பெயருண்டாயிற்று.

பின்பு மெகல்லெனுடைய வீரர்களிற்சிலர் அப்பாலுள்ள மகா சமுத்திரத்தைக் கடப்பதற்கு வேறு ஒரு புதிய கப்பற்படை வேண்டுமென்றும் தற்போதைக்குத் தம் சுதேசத்துக்குத் திரும்புவதே தக்கதென்றும் கூறினர். ஆனால் இந்த அரிய சந்தர்ப்பத்தைக் கைவிட மனம்வராமல் அவர் அவர்களை மெதுவாகத் தம் சொல்லுக் கிணங்கச் செய்து, கப்பல்களை மேலே செலுத்திச் சென்று பஸிபிக் மகா சமுத்திரத்தைக் கண்ணுற்றார். வேறோரிடத்திலிருந்து இதற்கு ஏழு வருஷத்துக்கு முன் இதே சமுத்திரத்தைப் பால்போவா கண்டிருந்தாரென்பது முன்னமே கூறப்பட்டதால் விளங்கும். ஆனால் இவ்வளவு பரந்த சமுத்திரம் இது, என்று இதனிற் பிரயாணஞ் செய்து கண்டு அறிந்தவர் மெகல்லெனே. இம் மகா சமுத்திரம் சிறிதும் அலைப்பின்றிச் சாந்தமாயிருந்ததைக் கண்டு, இத்தன்மையைக் குறிப்பிடும் பஸிபிக் மகாசமுத்திரம் (Pacific Ocean) என்ற பெயரால் மெகல்லென் இதனை வழங்கினர். இப்போது தம்முடனிருந்த நான்கு கலங்களில் ஸான்டோ அன்டோனியோ என்ற கப்பலிலுள்ள மாலுமிகள் யாத்திரையில் பின்னும் செல்லப் பயப்பட்டுச் சுதேசம் திருப்பிச் சென்றனர். அங்குள்ளார்க்கு அவர்கள் தமது கோழைத்தனத்தை மறைக்கும்பொருட்டு மெகல்லெனைப்பற்றிப் பழிமொழிகள்கூறி, அவரோடு இருக்கத் தாங்கள் இஷ்டப்படாததால் திரும்பி வந்து விட்டதாகச் சொல்லிக் கொண்டு திரிந்தனர்.

மிகுந்திருந்த மூன்று கப்பல்களுடன் மெகல்லென் தைரியமாகப் பஸிபிக் மகா சமுத்திரத்தைக் கடக்க நினைத்தார். ஆனால் கப்பல்களிலோ உணவுப் பொருள்கள் மிகுதியும் குறைந்துபோயின; குடிக்கும் நீர் கெட்டுப் போயிற்று; மாலுமிகளிற் பலர் நோயுற்று இறந்தனர். இப்படிப்பட்ட கஷ்டங்களிலும் மெகல்லென் மனமழியாமல் புதிதாய்த் தாம் கண்டு பிடித்த ஜலசந்தியிலிருந்து புறப்பட்டுத் தொண்ணூறு நாட்கள் வரையில் நிலப்பிரதேச மென்பதையே கண்ணுற் காணுமற் சென்று, பின்பு குவாம் (Guam) தீவுகளை யடைந்தார். அங்கு மாலுமிகள் உணவுப் பொருள்களும் குடிக்கும் நீரும் சேகரித்துக் கொண்டனர்; எனினும் அத்தீவின் வாசிகள் கொடியராகையால் அங்குத் தங்க அவர்கள் விரும்பவில்லை அதனால் திரும்பவும் அவர்கள் புறப்பட்டு ஒரு வாரம் பொறுத்துப் பிலிப்பைன் தீவுகளை அடைந்தனர். அங்கேனும் ஒருவித கஷ்டமும் நேராமலிருக்க வேண்டுமே என்ற கவலையை யுடைய தலைவர் அவ்விடத்தில் ஸெபுத்தீவின் (Cebu) அரசனோடு சமாதான உடன்படிக்கை செய்து கொண்டார். துரோக சிந்தனையை யுடைய அவ்வரசன் தன்னைக் கிறிஸ்தவனாக்கவும் இடங்கொடுத்ததனை மெய்யென்று நம்பி மெகல்லென் ஏமாந்தார். அவன் பொருட்டு அவர் அடுத்த தீவின் அரசனோடு யுத்தஞ் செய்யவும் சென்றார். அவனோ அவருடைய அழிவையே கருதியிருந்தான். சுதேசிகள் ஸ்பானியரைக் காட்டிலும் பன்மடங்கினராயிருந்ததால் பின்னவர் அபஜயமடைய நேரிட்டது. மெகல்லென் யுத்தத்திற் கொல்லப்பட்டார்.

யுத்தம் முடிந்த பின் எஞ்சியிருந்த ஸ்பானியர்கள் தம் தலைவரின் பிரேதத்தைப் பெறுவதற்குப் பலவாறு முயற்சித்

தும் பயனில்லாமற் போயிற்று. ஆகவே அவருடைய உடல் மக்டான் தீவிலேயே உரிய மரியாதைகளுடன் அடக்கஞ் செய்யப்பட்டது. பிற்காலத்தில் எழுப்பப்பட்ட ஞாபகச் சின்னமொன்று அவருடைய சமாதிக் குழியைக் குறிப்பிட்டு விளங்குகின்றது.

அவர் இறந்த பின்பு, அவருடைய நண்பர்களிற் சிறந்தவர்களும் ஸ்பானிய மாலுமிகட்குத் தலைவர்களுமான ஸேர்ராஞேவும் பார்போஸாவும் * துரோகியான ஸெபு அரசனல் வஞ்சித்துக் கொல்லப்பட்டனர்.

மிகுந்திருந்த ஸ்பானிய வீரர்கள் அடியோடு உடைந்து போன ஒரு கப்பலைக் கொளுத்திவிட்டு மற்ற இரண்டு கப்பல்களோடும் கிழக்கிந்தியத் தீவுகளை யடைந்தனர். பின் அவற்றுள்ளும் ஒன்று அடியோடுசேதமானபடியால் அதனை விட்டுவிட்டு எஞ்சியிருந்த விட்டோரியா என்ற கலத்தில் வியாபாரச் சரக்குகள் பலவற்றையும் ஏற்றிக்கொண்டு புறப்பட்டு அதிகப் பிரயாசையுடன் நன்னம்பிக்கை முனையைச் சுற்றி வந்து 1522-ம் வருஷத்தில் ஸெப்டம்பர் மாதம் எட்டாம் தேதியன்று ஸெவில் நகரத்தை யடைந்தனர். இப்பூப் பிரதக்ஷிணத்தின் பின், மிகுந்து வந்து சுதேசத்தை அடைந்தவர்கள், ஸெபாஸ்டியன் கான்ஞே என்ற தலைவரும் அவர் அதிகாரத்தின் கீழடங்கிய பதினெட்டு ஐரோப்பியர்களுமாவர்.

முன்பு மொலுக்கஸ் முதலிய பிரதேசங்களுக்குச் சென்றிருந்த காலத்தில், தாம் பின்பு இறக்க நேரிட்ட இடத்தைக் காட்டிலும் சிறிது தூரம் அதிகமாகக் கிழக்கே மெகல்லென் பிரயாணஞ் செய்திருந்தாராதலால் அவரும் பூப் பிரதக்ஷிணத்தை முற்றுவித்தவர் என்று கூறுதற்கு உரியவர். இவருடைய சிறப்பைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ?

* இவர் மெகல்லெனுடைய மைத்துனர்

# IV

# ஹென்றி ஹட்ஸன்

ஹென்றி ஹட்ஸனுடைய வாலிபப் பருவத்தைப்பற்றி விவரமான விஷயங்கள் நமக்குப் புலப்படவில்லை. பதினரும் நூற்ருண்டில் பிரஸித்திபெற்ற ஹட்ஸன் என்ற பெயரோடு விளங்கிய ஒரு குடும்பத்தைச் சேர்ந்திருந்தவர் இவர் என்றும், அக்காலத்தில் பேர்போன வியாபார சங்கமாகிய 'மஸ்கோவி கம்பெனியை த்தாபிப்பதற்கு முதற் காரணராயிருந்தவர்களுள் ஒருவரான ஆல்டர்மன் ஹட்ஸன் என்ற தனிகர் இவருடைய பாட்டனராயிருந்திருக்க வேண்டும் என்றும் ஆராய்ச்சியாளர் ஊகித்துள்ளனர். தமது இளமைப் பருவத்தில் ஹட்ஸன் வியாபாரக் கப்பற்கூட்டத்தாரிடையே வளர்ந்து அவர்களோடு நெருங்கிய பழக்கமுடையவராய்ப் பல அரிய விஷயங்களைத் தெரிந்து கொண்டார் என்பது திண்ணம்.

இவர் நாவிகத் தொழிலில் தேர்ச்சி பெற்ற பிறகு மேற்கொண்ட அருஞ்செயல், வடமேற்காக வடஅமெரிக்காவைச் சுற்றி ஆசியாவுக்கு வழியிருக்குமோ என்பதைக் கண்டுபிடிக்க முயன்றமையாம். இதற்கு முன்னரே ஸெபாஸ்டியன் கேபட் என்பவர் இத்துறையில் உழைக்க, ஸர் ஹியூ வில்லோபி என்பவர் ஒரு கப்பற் படையை உடன்கொண்டு சென்று முன்னமேயே சரியான ஏற்பாடுகள் செய்துகொள்ளாமையால் உத்தர மகா சமுத்திரத்தில் பனியால் விறைத்துப் போய்க் கூட்டத்தோடு உயிரிழந்தார். அவரோடு சென்ற கப்பல்களில் ஒன்றுமட்டும் தப்பி வந்து ருஷியர்களுடைய உதவிபெற்று நாடடைந்தது. அதன் பிறகு பல வீரர்களும்

இதே காரியத்தை மேற்கொண்டுசென்றனரேனும், ஒருவரும் வெற்றி பெற்றாரிலர்.

இவ் யாத்திரையை மேற்கொள்வதனால் உண்டாகும் கஷ்டங்களைப்பற்றி ஹட்ஸனுக்கு நன்றாகத் தெரியும். மஸ்கோவி கம்பெனியாரும், ருஷியா தேசத்தோடு நல்ல வியாபாரம் நடந்து வந்ததனால் வடமேற்கு மார்க்க மொன்றைக் கண்டுபிடிப்பதில் அதிக சிரத்தை யெடுத்துக் கொள்ளவில்லை. ஆயினும் ஹட்ஸன் அவர்களைப் பலமுறை வேண்டிக் கொண்டதனால் அவர்கள் பன்னிரண்டு பேர்களைக் கொண்ட "ஹோப்வெல்" என்ற சிறிய கப்பலைச் சித்தப் படுத்தித் தந்தனர். யாத்திரிகர்கள் பன்னிருவருள் ஹட்ஸனும் அவருடைய சிறிய பிள்ளையாகிய ஜானும் அடங்கியிருந்தனர்.

1607-ம்வருஷம் மேமாதம் முதல் தேதியன்று ஹோப்வெல் கிரேவ்ஸெண்டு என்ற இடத்தை விட்டுப் புறப்பட்டு இருபத்தாறு நாட்களில் ஸ்காட்லாந்தின் கரையைவிட்டு நீங்கி மேற்செல்ல, மூடுபனியாலும் எதிர்க்காற்றாலும் கப்பல் தத்தளித்தது. குளிர் மிகுதியோ விவரிக்கத் தக்கதாயில்லை. ஜூன் மாதம் பதின்மூன்றாம் தேதியன்று நிலம் தென்பட்டது. அங்கு விளங்கியதொரு மலை, மிகவும் உன்னதமாய்ச் சிவந்த நிறத்தை யுடைய சிகரத்தையும், அடிவாரத்தில் சரிவில் களிமண்ணையும், இடைப்பிரதேசத்தில் பனியையும் மிகுதியாக உடையதாயிருந்தது. ஹட்ஸன் அதற்கு 'மவுன்ட் ஆப்காட்ஸ் மெர்ஸி' (திருவருட்குன்றம்) என்ற பெயரையிட்டார்.

விரைவில் ஹோப்வெல்லானது ஆர்க்டிக் மஹா சமுத்திரத்தில் கிரீன்லண்டுக்கும் ஸ்பிட்ஸ்பெர்கன் தீவுகளுக்கும்

இடையில் விளங்கும் உறைபனித் தடையை யடைந்தது. அதனால் ஹட்ஸன் தம் கப்பலை அத்தடையின் ஓரமாகவே செலுத்திக் கொண்டு மூன்றுநாட்கள்வரையிற் சென்றபிறகு உத்தர அக்ஷரேகை 80° எல்லையை அடைந்தார். அதுவரையில் ஐரோப்பியர்களில் எவரும் அவ்வெல்லை வரையிற் பிரயாணஞ்செய்ததில்லை. இங்குத் திரும்பவும் நிலம் தென்படவும் இனியும் மேற்செல்வதிற் பயனில்லை என்று அவர் நன்குணர்ந்து சுதேசம்நோக்கித் திரும்பலானார். அவ்வாறு திரும்பும் போதுதான், இப்போது ஜான் மேயன் என்று வழங்குவதும் 'ஹட்ஸன் டச்செஸ்' என்று அவரால் வழங்கப்பட்டதுமான தீவைக் கண்டுபிடித்தார்.

மொத்த யாத்திரையும் நாறுநாட்களில் முற்றுப்பெற்றது. முதலில் மேற்கொண்ட காரியத்தில் அது வெற்றியுறவில்லையேனும், வியாபாரசம்பந்தமாக மஸ்கோவி கம்பெனியாருக்குப் பெரிதும் பயனளித்ததாக விருந்தது. திமிங்கிலங்களைக் கொன்று அவற்றிலிருந்து பொருள்களைப் பிரித்தெடுத்து விற்பதனால் வரும் லாபத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்து ஹட்ஸன் கூறிய விஷயங்களை அங்கீகரித்த கம்பெனியார் விரைவிலே திரும்பவும் அவரை ஒரு யாத்திரைக் கூட்டத்தார்க்குத் தலைவராக்கி அனுப்பினர். இந்தத் தடவையும் அவர் முன்போலவே உத்தர மகா சமுத்திரத்தில் விளங்கும் பனித்தடையை யடைந்து அதன் பக்கவாட்டத்திலேயே சென்று 1608-ம் வருஷம் ஜூன் மாதம் 27-ம் தேதியன்று நோவா ஜெம்ப்ளா என்ற இடத்தை யடைந்து, அரிய பல விஷயங்களை அப்பிரதேசங்களில் ஆராய்ந்து, டாபின் (அல்லது தார்த்தாரியா) முனையைச் சுற்றிக்கொண்டுபஸிபிக் மகா சமுத்திரத்தையும் அடைய முயன்றார். இவ்வாறு இவர்

சென்றிருந்தால், சீன தேசத்துக்கும் ஐரோப்பாவுக்கும் வியாபாரப் போக்குவரத்துக்களுக்குரிய வழிகளைக் கண்டு பிடித்தவரா யிருப்பார். ஆயினும், பனியும் புயல்களும் அபாயகரமான நீரோட்டங்களும் இம்முயற்சிக்குத் தடைகளாக விளங்கவே, ஹட்ஸன் தீர்க்காலோசனை செய்தபின் இங்கிலாந்துக்குத் திரும்பினர்.

இந்த யாத்திரையில் ஹட்ஸன் வேறு பல அரிய விஷயங்களைக் கண்டுபிடித்து மீண்டு வந்தனரேனும், திரவிய சேகரமொன்றிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்த கம்பெனியார், தமக்கு இலாபகரமான விஷயம் ஒன்றையுங் கண்டு பிடித்து வரவில்லை என்று அவர்மீது வெறுப்புக் கொண்டனர். ஆகையால் அவர் மூன்ரும் முறையாகப் போய்வரமுயற்சித்தபோது அவருக்கு அவர்கள் எவ்வித உதவியும் செய்ய மறுத்து விட்டனர். ஆனல் இவ்வீர நாவிகருடைய கீர்த்தி ஐரோப்பா முழுவதிலும் பரவியிருந்ததாகையால், டச்சுக்காரக் கிழக்கிந்திய கம்பெனியார் உதவிசெய்ய மகிழ்ச்சியோடு முன் வந்தார்கள். 'குட்ஹோப்' 'ஹாப்மூன்' என்று இரண்டு கப்பல்கள் சித்தமாயின. 1609-ம் வருஷம் மார்ச்சு மாதம் 25-ம் தேதியன்று ஹட்ஸன் ஆம்ஸ்டெர்டாமிலிருந்து புறப்பட்டார்.

புறப்பட்டசமயமுதற்கொண்டே மாலுமிகள் கலகத்திற் கண்ணுயிருத்தனர். ஹட்ஸன் முதலிற் கப்பல்களைத் தாம் கண்டுபிடித்த பழைய இடங்களுக்குச் செலுத்திக் கொண்டு போக முயல, மாலுமிகள் பனியாலும் குளிராலும் படுங் கஷ்டத்தைத் தாளமுடியாதென்று பலவாறு முறையிட்டு அவரை எதிர்க்கத் தலைப்பட்டனர். கப்பல்செல்ல வேண்டிய மார்க்கத்தையும் அவர்களே கூற ஆரம்பித்தனர். ஆயினும்

இவ்வளவு கஷ்டங்களிலும் ஹட்ஸன் தைரியமிழவாதவராய் அட்லான்டிக்மகாசமுத்திரத்தைக்கடந்துநோவாஸ்கோஷியா என்ற இடத்தையடைந்து வட அமெரிக்காவின் கீழ்க்கரைப் பிரதேசங்களில் பிரயாணஞ் செய்து பரிசோதித்துஅமெரிக்க வாசிகளோடு வியாபார வசதிகளை யேற்படுத்திக் கொள்ள முயன்றார். ஆயினும் இவருடைய பிரயத்தனங்களனைத்தையும் கொள்ளையிற் பிரியம் உடையவர்களும் சச்சரவுக்காரர்களுமான மூட மாலுமிகள் கெடுத்து விட்டனர். ஸாண்டி ஹூக் என்ற இடத்தை ஸெப்டெம்பர் மாதத்தில்அடைந்து அதுவரையில் ஜனங்கள் நம்பியிருந்ததுபோல வட அமெரிக்காக் கண்டம் ஓர் ஜலசந்தியால் பிரிக்கப்படவில்லை என்பதை முதன் முறையாகத் தெற்றெனப் புலப்படுத்தினர்.

அப்புறம் தம்பெயரால் இன்றளவும் வழங்கப்படுகின்ற நதியில் வெகு தூரம் வரையில் உட்சென்று பல அரிய விஷயங்களைக் கண்டு பிடித்தார். இதன் பின் அவர் யாத்திரையினின்றும் திரும்பி வந்துவிட, டச்சுக்காரக் கிழக்கிந்தியக் கம்பெனியாரும் அவர்பால் வெறுப்புக் காட்டலாயினர். மற்றொரு யாத்திரைக்கு அவர்கள் உதவி புரிவதாகக் கூறினரேனும் அவர்களுடைய நிபந்தனைகள் கடினமாகவும், அவர்கள் தரும் பணம் சிரமத்துக்குத் தகாததாகவு மிருந்தது. ஆகவே, இம்முறை மஸ்கோவி கம்பெனியாரே அவருக்கு உதவி புரிய முன் வந்தனர்; ஆயினும், அவர்கள் பொருட் செலவில் மொத்தத்தையும் ஏற்றுக்கொள்ள இயலாமற் போக அவ்விஷயத்தில் ஸர் தாமஸ் ஸ்மித், ஸர் டட்லி டிக்ஸ், ஜான் ஒல்ஸ்டன் ஹோம் என்ற தனிகர் மூவர் உதாரமாக உதவி செய்தனர். இந்தத் தடவை தயாரிக்கப்பட்ட கப்பல் 'டிஸ்கவரி' என்பதாம். மேற்கொண்டகாரியமோ அமெரிக்கா

வுக்கு வடக்காக ஆர்க்டிக் மகா சமுத்திரத்தின் மார்க்கமாய் ஆசியாவுக்குச்செல்லவேண்டு மென்பதாம். இவ்யாத்திரையில் ஆரம்பமுதலே கலகாஸ்பதமான காரியங்கள் நடைபெற லாயின. மாலுமிகளில்ஹென்றிகிரீன்என்ருெருவனிருந்தான். அவன் கென்ட் மாகாணத்தில் ஒரு கௌரவமான குடியிற் பிறந்து சிறுவயதிலே சகவாசதோஷத்தாலும் துன்மார்க்கத் தாலும் கேடடைந்து வருந்திக்கொண்டிருந்தவன். ஹட்ஸன் அவனைக்கண்டு நல்வழிப்படுத்தமுயன்று அவனைத் தம் சொந்த மகனை நடத்துவது போலவே நடத்திவந்தார். நாய் வாலை நிமிர்த்த வசமாமோ? அதுபோல் கிரீன் பின்னும் சீர் கேட்டை யடைந்ததுமன்றி, ஹட்ஸனுடைய துரதிர்ஷ்ட முள்ள விதிக்கும் காரணமானுன் என்பது பிற் கூறப்படும் விஷயங்களால் விளங்கும்.

'டிஸ்கவரி' 1610-ம்வருஷம் ஏப்பிரல்மாதம் 17-ம்தேதி யன்று புறப்பட்டது. புறப்படு முன் நடந்த ஒரு சம்பத்தால் ஹட்ஸன் தம் மனவமைதியை இழந்தார். மஸ்கோவி கம் பெனியார்ஹட்ஸனோடு கலந்தாலோசியாமல் தம் நம்பிக்கைக் குப் பாத்திரவானுயிருந்த கோல்பர்ன் என்ற மாலுமி யொரு வனை முன்னவருக்கு உதவியாளனுக நியமித்தனர் தம் திற மைகளைப்பற்றி மஸ்கோவி கம்பெனியார்ஐயுற்றனர் என்றும் தம்மை யவர்கள் அவமானப் படுத்தினர் என்றும் ஹட்ஸன் கருதி மிகுந்த கோபத்தோடு கோல்பர்னை வேலையினின்றும் தள்ளிவிட்டுத் தமக்கு அனுமதி கிடைக்குமுன்னரேகப்பலைச் செலுத்திச்செல்ல மாலுமிகட்கு உத்தரவிட்டார். இவ்யாத்திரை முழுவதிலும் இவ்வாருன மனப்பாங்கோடேயே இவர் நடந்து கொண்டாரென்றும், அதனுல்தான் இவருக்குக் கேடு சம்பவித்ததென்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

கப்பல் இங்கிலாந்தை விட்டுப் புறப்பட்டபின் கிரீன்லண்டை அடைந்து பனிப்படலங்களின் இடையிற் சிக்கிக் கொண்டது. அதனை மீட்டுக்கொண்டு வரமுடியாமல் ஹட்ஸன் தத்தளித்தார். அவருடைய நிலைமையைக் கண்ட வீரர்களும் முணுமுணுக்கலாயினர். பின்பு அவர் நிலவுலகின் படத்தை எடுத்துக்கொண்டு அது வரையில் வேறு எந்தக் கப்பலும் சென்றிராத அளவு வரையில் தாங்கள் வடக்கே சென்று சாதித்திருப்பதை விளக்கிக் காட்டி மேலே செல்லும்படி வேண்டிக்கொண்டனர். அதனால் சிலர் நல்லறிவு பெற்றார்கள். சிலர் முன்போலவே குரோதத்துடனிழிந்தனர். குரோதத்துடனிருந்தவர்களில் முக்கியமான ராபர்ட் ஜுவெட் என்பவனைப் பதவியிற் குறைத்து, நல்லறிவு பெற்றவர்களில் தலைவனான ராபர்ட் பைலாட் என்பவனை அப்பதவிக்கு நியமித்தனர். இதற்குள் டிஸ்கவரியினுடைய கஷ்டங்கள் மிகுதிப்படுவதாயின. மூன்று மாத காலம் சொல்ல முடியாத அல்லறப்பட்டுப் பின்பு ஜேம்ஸ் குடாக்கடலின் தெற்கே மாரிகாலத்தில்தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சில நாட்களுக்குள் பனிக்கட்டியால் கப்பல் நாலா பக்கத்திலும் நெருக்கப்படுவதாயிற்று.

உணவுப் பொருள்கள் மிகுதியும் குறைந்து போனதனால், பக்ஷிகளையேனும், மிருகங்களையேனும், நீர் வாழ் பிராணிகளையேனும் கொன்று கொணர்பவருக்குச் சிறந்த பரிசுகளளிப்பதாக ஹட்ஸன் வாக்களித்தார். ஆயினும் மாலுமிகளனைவரும் அவருக்கு எவ்விதத்திலும் உதவிசெய்ய முயலவில்லை. ஹட்ஸனும் முன்கோபியா யிருந்தாராதலால் நாளுக்கு நாள் வியவகாரங்கள் சீர்கேடடையலாயின. இந்தச் சந்தர்ப்பத்தில், ஹென்றி கிரீனால் சில உபத்திர

வங்கள் நேருவனவாயின. ஹட்ஸன் அடிக்கடி அவன் சார்பாகப் பேசவேண்டி யிருந்தது. ஜான் வில்லியம்ஸ் என்ற வேட்டைக்காரன் இறந்து போகவே, அவனுடைய அங்கியை யாருக்குக் கொடுப்பதென்ற விஷயத்தில் விவாத முண்டாயிற்று. அவ்வங்கிக்காகக் கொடுக்கவேண்டிய பண மேதும் கிரீனிடத்தில் இல்லை; ஆயினும் அவன் ஹட்ஸ னிடத்தில் தனக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி அதனைப் பெற்றுக் கொண்டான். இதனால் மாலுமிகளிற் சிலருக்குக் கோபம் பின்னும் மூண்டது. அதன் பிறகு கப்பலில் வந்திருந்த தச்சன் தனக்குக் கட்டளை யிட்டபடி கரையில் ஒரு குடில் நிருமிக்க முதலில் மறுத்துப் பின்பு நிர்ப் பந்தத்தினால் கட்டலானான். அவனோடு சேர்ந்துகொண்டு கிரீனும் அதிருப்திகரமாக நடந்து கொள்ளவே ஹட்ஸன் கோபங்கொண்டு அவனுக்குத் தந்திருந்த அங்கியைப் பற்றிக் கொண்டார். அதனால் நன்றி கெட்ட கடையனான கிரீன் அவரிடம் விரோதங்கொண்டு அவருக்குக் கேடு சூழத் தலைப் பட்டான்.

அதன் பின் மூன்று மாத காலமாகக் குளிர்த்துன்பம் நாளுக்கு நாள் அதிகப்பட்டது. இத்துன்பம் போதாதென்று கிரீனும் மாலுமியர்பாற் கலகத்துக்கு வித்துக்களையிட்டு வந்தான். மழைக்காலத்தில் தாங்கள் சுட்டு உண்ட பறவை களின் இனங்கள் அது கழிந்தவுடன் பறந்து போயின. கரையிலுள்ள பாசியையும் தவளைகளையும் அருவருக்கத்தக்க ஒரு விதமான கஷாயத்தையும் உட்கொண்டு அனைவரும் ஜீவித்து வரலாயினர்.

கடும்பனி யகன்று கப்பல் விடுபடும் காலம் வந்த வுடனே கிரீனும், வில்ஸன் என்ற மற்றொரு துன்மார்க்கனும் கப்ப

லின் படகிற் சென்று மீன் பிடித்து வருவதாகக் கூறினர். அவர்களுடைய உண்மையான கருத்தோ ஹட்ஸனிடத்திலிருந்து தாம் தப்பித்துக்கொண்டு எங்கேனும் சௌகரியமாய்ப் போய்ச் சேரலாமென்பதே. தம் முயற்சியில் அவர்கள் சித்தி பெற்றிருப்பார்களாயின், ஹட்ஸன் உயிரோடு இங்கிலாந்துக்குத் திரும்பி யிருந்திருக்கலாம்; இரண்டு துன்மார்க்கர்கள் ஒழியவே பூபாரம் குறைந்திருக்கும். ஆனால் விதி வேறு விதமாயிருந்ததே!

அவர்க ளிருவரும் புறப்பட முயன்ற தினத்துக்கு முதல் நாளிரவு, தூரத்திலிருந்த காடுகளில் ஏதோ நெருப் பெரிவது போல் ஹட்ஸனுக்குத் தோன்றவே, அங்கு மனித சஞ்சார மிருக்குமென்றும், ஆகாராதிகளுக்கு வேண்டிய உதவியைப் பெறலாமென்றும் கருதி அவர் படகைத் தாமே செலுத்திக்கொண்டு கரையை யடைந்து சில நாட்கள் வரை நாட்டில் திரிந்து பார்த்தார். அவர் அவ்வாறு சென்றாரோ இல்லையோ, கிரீனும் வில்ஸனும் கப்பலில் இருந்த மற்றவர்களுடைய மனத்தைக் கலங்க முடையதாகச் செய்து முடித்தனர். ஹட்ஸன் தாம் கொண்ட காரியத்தில் அபஜயப்பட்டு மனமுடைந்து திரும்பி வந்து சுதேசம் செல்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலானார். உணவுப்பொருள்கள் இன்னும் பதினன்கு நாட்களுக்கே போதியனவா யிருந்தன. ஹட்ஸன் ஒவ்வொருவருக்கும் மிகுந்திருந்த உணவில் அவரவர் பங்கைக் கொடுக்கும்போது மனந்தாளாமல் கண்ணீர் விட்டாராம். கொடியனான வில்ஸன் தனது பங்கு அத்தனையையும் ஒரே நாளிலும், கிரீன் ஒரு வாரத்திய உணவை ஒரே நாளிலுமாகத் தின்று பிறரையும் வருத்தலானார்கள். போதுமான அளவு மீனும் பிடிக்க இயலாமற் போயிற்று.

'டிஸ்கவரி' ஜூன் மாதம் பதினெட்டாம் தேதியன்று புறப்பட்டது; ஆயினும், எதிர்க் காற்று அதனை மேற்செல்லவொட்டாதபடி தடுத்து பனிப்படலத்திற் கொண்டுபோய் விட்டு விட்டது. ஹட்ஸன் முற்றிலும் மனமழிந்து தம் மாலுமிகட்கு ஒரு விதத்திலும் உத்தரவு சொல்ல முடியாமல் தவித்தார். அப்போது ராபர்ட்ஜூவெட், கிரீன், வில்ஸன் ஆகிய மூவரும் எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்திருந்தனுல், மிகவும் நல்ல குணமுடையவனான அபாகக் பிரிக்கெட் என்பவனுடைய மனத்தையும் கலைத்துத் தங்களோடு சேரச் செய்து பின்பு தாம் எண்ணிய கொடிய காரியத்தை முடிக்கத் தலைப்பட்டனர். இன்னும் இதிற் சேராதிருந்தவர்கள், கப்பலிலிருந்த தச்சனும், ஜான் கிங்கு என்பவனுமே. தச்சனோடு பேசுவதுபோல் கிரீன் அவனை ஒரு புறமாக அழைத்துக் கொண்டுபோய் விட்டான். ஜான் கிங்கோ கலக மூண்டு விட்டதென்று அறிந்தவுடனே ஜூவெட்டைக் கொல்ல முயல, மற்றவர்கள் ஓடிவந்து அவனைக் கட்டிப்போட்டனர். மற்றவர்கள் திடீரென்று ஹட்ஸனைப் பிடித்துக் கட்டி விட்டனர். அபாகக் பிரிக்கெட் இன்னும் கலகத்திற் கலந்து கொள்ள விரும்பாதவனாயிருந்தால் அவனும் ஹட்ஸனுடைய கதியையே யடைந்திருப்பான். ஆயினும் இறுதியில் அவன் தன்னைக் காப்பாற்றும்படி வேண்டிக்கொள்ள, அவர்கள் அவனைக் கப்பலின் உள்ளறையிற் சிறைப்படுத்தினர்.

இப்போது கப்பற்றளத்தில் பின் புறமாக இறுகப் பிணைக்கப்பட்ட கைகளையுடையவராய் ஹட்ஸன் வருந்தி மாலுமிகளில் இரக்கமுடையவர் எவரையும் காணாது திகைத்தனர். தச்சனொருவன் மட்டில் கடைசியில் ஹட்ஸனுடைய கதியை மேற்கொண்டான். அபாகக் பிரிக்கெட், ஹட்ஸனைச்

சாளரத்தின் வழியாகப் பார்த்து இரகசியமாக இக்கலகத்துக்கு அவர் நினைத்திருந்ததுபோல் ஜூவெட் காரணனல்லனென்றும் அயோக்கியனான கிரீனே இதை யெல்லாம் முற்றுவித்தவனென்றும் கூறினான். கூறியும் என்ன பயன்?

இறுதியில் சச்சரவாக வாதித்தபின்பு எவரெவர்களைக் கைவிட வேண்டுமென்று அனைவரும் ஆலோசித்து, ஹட்ஸனையும் அவன் மகனையும் மற்றும் வியாதியஸ்தர்களான அறுவரையும் தச்சனையும் படகிலே இறக்கி அதனை யறுத்துத் துணையற்றுக் கடலிற் போகவிட்டனர். பின்பு ராபர்ட் பைலாட்டின் தலைமையின் கீழ் டிஸ்கவரி சுதேசத்திற்குத் திரும்பிச் சென்றது.


ஹட்ஸனும் படகில் விடப்பட்ட அவருடைய துணைவர்களும் எக்கதியடைந்தனர் என்பது நமக்கெட்டவில்லை. உணவின்றியும், படகைச்செலுத்துதற்குரிய சாதனங்களின்றியும் அவர்கள் பனிப்படலங்கட்கிடையே அகப்பட்டு அழிந்திருப்பார்களென்பது திண்ணம். அவரை இக்கதிக்குள்ளாக்கிய கலகக்காரரும் சுகப்பட்டார்களில்லை. அவர்களிற்பெரும்பாலோர் உணவில்லாமலிறந்தனர். கிரீனும் இன்னும் சிலரும் எஸ்கிமோக்களோடு சண்டையிட்டு மடிந்தார்கள். மிகுந்திருந்த சிலர் பழுதுபட்ட 'டிஸ்கவரி'யில் ஸெப்டம்பர் மாதத்தில் இங்கிலாந்தை யடைந்தார்கள். சில காலத்துக்கெல்லாம் ஹட்ஸனை இவர்கள் நிர்க்கதிக்காளாக்கின செய்தி வெளியாகிவிடக் குற்றவாளிகள் சிறைக்காளாயினர்.

V

# காப்டென் ஜேம்ஸ் குக்.

ஜேம்ஸ் குக் என்ற ஆங்கிலேய நாவிகர், இங்கிலாந்தில் யார்க்ஷைரில் மார்டன் என்ற கிராமத்தில் கி. பி. 1728-ம் வருஷத்தில் அக்டோபர் மாதம் 27-ம் தேதியன்று பிறந்தார். அவருடைய தாய்தந்தையர் எளிய குடும்பத்தினர். சிறுவயதில் ஜேம்ஸ் குக் தீவிர புத்தியேனும் திறமையேனும் உடையவராகத் தோற்றவில்லை. அவருடைய பெற்றோர் அவருக்குச் சாமானியமாகக் கொஞ்சம் கல்வி கற்பித்த பிறகு, பதின்மூன்றும் பிராயத்தில் அவரை ஒரு ஜவுளிக் கடையில் ஆளாக அமர்த்தினார்கள்.

ஆனால் ஜேம்ஸுக்கோ சாந்தமாக ஒரு ஜவுளிக்கடையில் வேலைசெய்து கொண்டிருப்பது பிடிக்கவில்லை. அவர் மனம் துணிகரமான செய்கைகளைச் செய்வதிலேயே நாட்டமுற்றிருந்தது. தாம் வெளியேற எந்தச் சந்தர்ப்பம் வாய்க்கும் என்றே அவர் பார்த்திருந்தார். அப்போது ஒரு நாள் ஒரு சந்தர்ப்பம் நேரிட்டது. ஜேம்ஸ் வேலை செய்திருந்த கடையின் முதலாளி தம் சிற்றறையில் ஒரு புதிய ஷில்லிங்கு நாணயத்தை வைத்துச் சென்றவர் திரும்பி வந்து பார்க்க அதனைக் காணவில்லை. ஆதலால் அவர் ஜேம்ஸைச் சந்தேகித்து அவருடைய தந்தைக்குச் சொல்லி யனுப்பினார். பின்பு ஜேம்ஸைச் சோதித்துப் பார்த்தபோது அந்த ஷில்லிங்கு அவரிடமே காணப்பட்டது. வெளித்தோற்றத்துக்கு அச்சிறுவர் குற்றவாளியே என்று நினைக்கும்படியாயிருந்தது. ஆனால் அதிர்ஷ்டவசமாக அவர் தம்முடைய மாசின்மையைநிரூபித்தார். ஆயினும் இவ்வநியாயப்பழி அவர் மனத்தை மிகவும்




காப்டென் குக்கின் யாத்திரைகள்.

புண்படுத்திவிட்டபடியால் அக்கணமே தாம்அவ்விட மிருக்க இஷ்டப்படவில்லை என்றும், கடலை நாடியே தாம் செல்ல உறுதி கொண்டு விட்டதாகவும் தம் தந்தையிடம் தெரிவித்தார்.

அவரிஷ்டப்படியே அவர் விட்பி (Whitby) என்ற ஸ்தலத்தில் நிலக்கரி வியாபாரஞ் செய்யும் கப்பற் கம்பெனி யொன்றில் முக்கிய பாகஸ்தராயிருந்த ஜான் வாகர் என்பவரிடம் தொழில் பயிலச் சேர்க்கப்பட்டார். ஜான் வாகர் ஜேம்ஸ் குக்கினிடம் மிகுந்த அன்பு கொண்டு அவரைத் தம்முடைய சொந்த மகனைப்போலப் பாவித்து, அவருடைய கஷ்ட காலங்களிலெல்லாம் பலவிதத்திலும் உதவி எல்லா நன்முயற்சிகளிலும் தூண்டி வந்தார். அப்பெரியாரால் இவ்வித உதவிகளைப் பெற்றதையும் நன்கு மதிக்கப்பட்டதையும் ஜேம்ஸ் குக் தம் ஆயுள் பரியந்தம் மறந்தவரல்லர். அவர் சிறந்த நாவிகரெனப் பிரபலரான பிறகும் அவருக்கு ஜான்வாகரே சிறந்த ஆலோசனை கூறுபவராகவும் உத்தம நண்பராகவும் விளங்கினர்.

பிற்காலத்தில் தாம் நாவிகத் தொழிலிற் காட்டிய திறமை யனைத்தையும் ஜேம்ஸ் குக் சம்பாதித்துக் கொண்டது இந்தக் காலத்திலேதான். இத்திறமை இவருக்குப் பல விதங்களிலும் பயன்படுவதாயிற்று. இவருடைய இருபத்தாறுவது பிராயத்தில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் சமாதானமில்லாமல் யுத்தம் நேரிட்டபோது அரசாங்கக் கப்பற்படையில் ஒரு வீரராய்ச் சென்று உழைக்கச் சந்தர்ப்பம் வாய்த்தது. நான்கு வருஷ காலத்துக்குள் இவரது திறமை நன்கு வெளிப்படவே, அதிகாரிகள் இவரை மிகவும் மெச்சி, 'பெம்ரோக்' என்ற கப்பலுக்குத் தலைவராக்கினர்கள்.

அமெரிக்காவிலுள்ள ஸெயின்ட்லாரன்ஸ் என்ற நதிப்பிர தேசத்தில் செய்யவேண்டியிருந்த சில காரியங்களில் இவர் மிகுதியும் உழைத்தகாலம் இதுவேயாம். அதன்பிறகு பிரெஞ்சுக்காரர்களிடமிருந்து நியூபௌண்ட்லாண்டு தீவை மீட்டுக் கொள்ளவேண்டி முயன்றகாலத்து 'நார்தம்பர்லண்டு' என்ற கப்பலில் உத்தியோகஸ்தராக நியமிக்கப்பட்டார். இக் காலத்திலெல்லாம் அவர் மற்றவரைக் காட்டிலும் தாம் எவ்வாற்றானும் சிறந்தவர் என்பதை வெளிப்படுத்தினர். தமக்குச் சாமானியமானவேலை போதாதென்றும், எவ்வளவு கடினவேலையாயினும் தாம் அதனை மேற்கொள்ளத் தக்கவரே என்றும், விரைவிலேயே தமக்கு அப்படிப்பட்டது நேரும் என்றும் இவர் உறுதியாக நம்பினர். இவர் தம் தொழிலைப் பற்றினவளவில் சிறந்த தைரியமுடையவராயிருந்தனரேனும் உயர்பதவியைத் தாம் அடைய நேரின் அதற்குத் தகுந்த கல்வி யறிவு இல்லாதவராக இருந்தார். உயர்பதவி யடைவதற்கோ அதிக காலம் இவர் பொறுக்க வேண்டிய அவசியம் இல்லாதிருந்தது. இவருக்குக் கல்வி கற்பிப்பதற்கோ ஆசிரியர் ஒருவருமிலர். ஆகலின், இவர் தமக்கிருந்த இயல்பான நுண்ணறிவைக் கொண்டு தாமே கல்வி கற்றுப் பிற்காலத்தில் தமக்கு உபயோகப்படுதற்குரிய கணித சாஸ்திரத்திலும், பிற துறைகளிலும் நல்ல தேர்ச்சிபெற்றார். இயற்கையான தம்முடைய விடாமுயற்சியையும் எதையும் குறைவின்றிச் செய்யும் திறமையையுங் கொண்டு இவ்விஷயத்திற் பெரிதும் பயன் படுத்தி இதரர்களுக்கு ஒரு முன் மாதிரியாக விளங்கினர். 1762-ம் வருஷத்தின் கடைசியில் இவர் மிஸ் எலிசபெத் பாட்ஸ் என்னும் பெண்மணியை மணம் புரிந்துகொண் டார்.

1763-ம் வருஷத்தில் சமுத்திர சர்வேயராக நியமிக்கப் பட, ஜேம்ஸ் குக் நியூபௌண்ட்லண்டுக்குச் சென்று தம் உத்தியோக காரியங்களைக் கவனிக்கலானார். அப்போது ஒரு சமயம், எப்போதைக்கும் இவருடைய உயரிய வண்ணங்கள் பலிக்காமற் போவதற்காகும் என்று நினைக்கும் எண்ணமாக இவருக்கு ஒரு பெரிய விபத்துண்டாயிற்று. வெடிமருந் தடங்கியிருந்த ஒரு பெரியகுப்பியை இவர் எடுத்துச்சென்று கொண்டிருக்கும்போது எதிர்பாராவிதமாய் அது வெடித்து இவருடைய கைகளிலொன்றை ஊறுபடுத்தியது. தேர்ந்த சிகிற்சையினால் காயங்களாறிப் பின்பு சொஸ்தமான போதி லும் அந்தக் கை ஊறுபட்டதாகவே விளங்கியது. ஆயினும் ஜேம்ஸ் குக் இதைப் பொருட்படுத்தாமல் தம் தொழில்க ளனைத்திலும் முனைந்து நின்று முட்டின்றி முடித்து வந்தார்.

பின்பு 1768-ம் வருஷத்திலே இவர் இதுவரையும்எதிர் பார்த்துப் பொறுத்திருந்த நல்ல சமயமொன்று இவருக்கு வாய்த்தது. அவ்வருஷம் மே மாதத்தில் 'குக்'குக்கு 'லெப்டி னென்டு' என்ற பதவி கிடைத்தது. அப்போது, 1768-ம் வருஷத்தில் ஜூன் மாதம் மூன்றாம்தேதியன்று சூரிய பிம்ப வடிவிற்குக் குறுக்காகச் சுக்கிரன் செல்லும் என்ற அபூர்வ விஷயத்தை வானசாஸ்திரிகள் பலரும் அறிந்திருந்தனர். இப்படிப்பட்ட அரிய விஷயத்தை தக்க விடத்திலிருந்து கவனித்து ஆராயவேண்டுமென நினைத்து ஆங்கில ராயல் சொஸைடியார் உரிய ஏற்பாடுகளைச் செய்யலானார்கள். தென் பஸிபிக் மகா சமுத்திரத்தில் உள்ளதான 'தாஹிதி' என்ற தீவு இவ்வித ஆராய்ச்சிக்கு எவ்விதத்திலும் தக்க இட மென்று தீர்மானிக்கப்பட்டது. அத்தீவுக்குச் செல்லக் கூடியவர்களுக்குத் தலைமை வகிக்கத்தக்கவர் அளவற்ற

தைரியமும் சாகசமும் உடையவராய், மாலுமிகளையும் பிறரையும் தம் ஆணைக்கடங்கிநடக்கச் செய்பவராய் இருப்பதோடு, வான சாஸ்திரத்திலும் கணித சாஸ்திரத்திலும் தேர்ச்சி பெற்றவராயிருக்க வேண்டுமென்பது அத்தியாவசியமாயிருந்தது. இவ்வெல்லாத் தன்மைகளும் ஒருங்கே யமையப் பெற்றவர் ஜேம்ஸ்குக் ஒருவரே ஆகையினால் ராயல் சொஸைடியார் இவரையே இவ் யாத்திரைக்குத் தலைவராக்கினார்கள்.

ஜேம்ஸ்குக், 'எண்டெவர்' (Endeavour) என்ற கப்பலைத் தேர்ந்தெடுத்து, 85 மனிதர்களுடனும், ஒன்றரை வருஷத்துக்கு வேண்டிய ஆகார சேகரத்துடனும் 1768-ம் வருஷம் ஆகஸ்டுமாதம் 25-ம் தேதியன்று ப்ளேமத் என்ற துறைமுகத்தை விட்டுப் புறப்பட்டார். தென்மேற்காகவே சென்று நவம்பர் மாதம் 13-ம் தேதியன்று, கப்பல், 'ரியோடிஜனிரோ' என்ற தென் அமெரிக்கத் துறைமுகத்தை யடைந்தது. அங்கிருந்த போர்ச்சுகேசிய கவர்னர் இவ்யாத்திரிகக் கூட்டத்தினர்பால் அவநம்பகமுடையவரா யிருந்தார். அவருக்கு வானசாஸ்திரத்தில் எவ்வித பயிற்சியு மில்லாமையால், இவர்கள் கூறிய விஷயங்கள் பொய்யென்றும் இவர்கள் ஏதோ மோசக்கருத்துடனேயே தங்கள் நாட்டைச் சார்ந்தனரென்றும் எண்ணலானார். அதனால் ஆங்கிலக் கப்பற்றலைவர் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டுத் தென் அமெரிக்காவின் கரையோரமே தெற்காகச் சென்று, அபாயகரமாக அக்காலத்திற் கருதப்பட்டுவந்த ஹார்ன் முனையைச் சுற்றிக்கொண்டு பஸிபிக் மஹா சமுத்திரத்திற் புகுந்தார். அங்கே இவர் சனசஞ்சாரமுள்ளவைகளாய்விளங்கிய பலதீவுகளை எதிர்பாராத விதமாய்க் கண்டுபிடித்தார். அவற்றினுட் சென்று பரிசோதிக்கவேண்டுமென்ற அவா, லெப்டனென்டுக்கு அதிகமிருந்த

தேனும், தாம் மேற்கொண்டு வந்தகாரியம் அஃதன்றாகை-யால் காலதாமதமின்றிமேலே செல்லுற்று 1769-ம் வருஷம் ஏப்ரல்மாதம் 10-ம் தேதியன்று தாஹிதித் தீவை அடைந்து அங்கு உள்ள 'மதவை' குடாவில் கப்பலை நிறுத்தினர்.

அடுத்த தினமே அத்தீவின் வாசிகள், சமாதானத்துக்கு அறிகுறியாக மரக்கிளைகள் பலவற்றைத் தாங்கிக் கொண்டு படகுகளிலிவர்ந்து ஆங்கிலக் கப்பலை நோக்கி வந்தனர். ஜேம்ஸ் அம்மரக்கிளைகளை வாங்கித் தம் கப்பலிலே நாட்டித் தாமும் சமாதானமாகவே வந்திருப்பதைக் குறிப்பிட்டனர். தாஹிதியர், குக்கினிடமிருந்து பட்டுக் கைகுட்டைகள் முதலிய அற்பப் பொருள்களைப் பெற்றுக் கொண்டு, அள வற்ற காய் கனி கிழங்குகளையும் உணவுப் பொருள்களையும் தந்தனர். கரையிலிறங்கியவுடன் ஆங்கிலேயர்களனைவரும் தாஹிதியத் தலைவர்களால் நன்கு உபசரித்து வரவேற்கப் பட்டனர். இருதிறத்தாரும் ஒருவரையொருவர் சன்மானித்துக் கொண்டனர். மாலையில் ஆங்கிலேயர், தாஹிதியர்களால் அளிக்கப்பட்ட விருந்தில் அதிதிகளாயினர். ஆயினும் காலஞ் செல்லச் செல்ல், அத்தாஹிதியர் கைதேர்ந்த முடிச் சுமாறிகளென்று குக்கும் அவருடைய நண்பரும் அறிய நேரிட்டது. தாஹிதியத் தலைவனொருவனுடைய உதவியால் இழந்த பொருள்களை ஆங்கிலேயர் பெற்றனரேனும், துப்-பாக்கிகள், தூரதிருஷ்டிக் கண்ணாடிகள், சிறுகோடரிகள், சாஸ்த்ரீயக் கருவிகள் முதலியன தினமும் காணமற்போய்க் கொண்டேயிருக்கவும், ஜேம்ஸ் அரும்பாடுபட்டு இவற்றைத் திரும்பப் பெற நேர்ந்தது.

பின்பு எந்த அலுவலைக்குறித்துக் குக் அத் தீவுக்கு வந்தாரோ அந்த அலுவலைக் கவனிக்கும்படியான நாள் குறு

கிற்று. அவ்வலுவலில் குறைவேதும் ஏற்படா திருக்கும் வண்ணம் அநேக கட்சியினராகத் தம்மவர்களைப் பிரித்துத் தீவின் பல பாகங்களுக்கும் அனுப்பினர். வானசாஸ்திரத்தில் அபூர்வமாய் நேரும் அவ்விஷயத்தை அக்கூட்டத்தார்கள் அனைவரும் சிறிதும் பிசகின்றிக் கண்டாராய்ந்தனர். குக், இக்காரியத்தை இறுதிவரையில் ஒரு அம்சமும் விடுபடாது நிறைவேற்றியது அவருடைய இயற்கையான திறமையையே வெளிப்படுத்தியது.

ஆங்கிலேயர் அத்தீவில் தங்கியிருந்ததெல்லாம் மூன்று மாதங்களே. அம்மூன்று மாதங்களும் அவர்கள் மிகவும் இன்பமாய்க் கழித்தபிறகு ஜூலைமாதம் பதின்மூன்றும் தேதியன்று அத்தீவைவிட்டு மனமில்லாமலே புறப்பட்டார்கள். அச்சமயம் ஜேம்ஸ் குக்கினிடம் மிகுதியும் அன்பு கொண்டவனான டியூபியா என்ற தாஹிதியத் தலைவனொருவன் தன் மகனையும் உடனழைத்துக்கொண்டு புறப்பட்டு வருவதாகக் கூற, ஜேம்ஸ் மகிழ்ச்சியோடு அவனையும் கப்பலில் ஏற்றிக்கொண்டார். டியூபியா முக்கியமாகத் துவிபாஷியாக விளங்கினனேனும், இதர மார்க்கங்களிலும் குக் அவனைப் பயன்படுத்திக் கொண்டார். அவர் அப்பிராந்தங்களிலுள்ள வேறு சில தீவுகளைக் கண்டுபிடித்துப் பின்பு டியூபியாவின் உதவிகொண்டு முன்னமே கண்டிருந்த தீவுகளைப் பற்றிய விவரங்களைப் பிழையின்றி உணர்ந்து அனைவருக்கும் உபயோகமாகும் வண்ணம் அவற்றின் படத்தை வரைந்து கொண்டார். அந்தப் படம் பிரிட்டிஷ் மியூஸியத்தில் வைக்கப்பட்டு இன்றளவும் விளங்குகின்றது.

தாஹிதித் தீவை விட்டுச் சென்று மூன்று மாதங்களானபின்பு 'எண்டெவர்' நியூ ஜீலண்டு தீவை யடைந்தது.

இதற்கு நூற்றெழுபத்தைந்து வருஷங்களுக்கு முன்பு டாஸ்மன் என்ற டச்சுக்கார மாலுமி இத்தீவைக் கண்டு பிடித்திருந்தாரேனும், இத்தீவின் விஸ்தீரணம், உருவம், தேசவாசிகள் முதலிய விஷயங்களைப்பற்றி எதுவும் அறிதற் கில்லாமலிருந்தது. முதன் முதலில் நியூ ஜீலண்டில் கரை-யோரங்களிலே சஞ்சரித்து, டாஸ்மன் நினைத்ததுபோலன்றி இஃது இரண்டு தீவுகளாலாகியது என்று கண்டுபிடித்த ஐரோப்பியர் ஜேம்ஸ் குக்கே யாவர்.

நியூ ஜீலண்டு வாசிகளாகிய மயோரியர்களோடு போக்கு வரத்துக்கள் முதன் முதலில் மிக்க அதிருப்திகரமாக இருந்-தன. மயோரியர்கள் பகையே பாராட்டினர்; ஆதலின், எப் போதும் சமாதானமாகவே இருக்க விரும்பிய குக், கப்பலைச் செலுத்திக் கொண்டு கரையோரமாகவே வடக்கே சென்றார். ஆயினும் மயோரியர்களிற் கொடியோராயிருந்த பலர் சிறு படகுகளிலேறி அவர்களைத் துரத்த முயன்றனர். ஆனால் துப் பாக்கிகளைச் சமயோசிதம்போல் உபயோகித்து வந்தமையால் குக் அவர்களைத் தூரத்திலேயே வைத்திருந்தார். சந்தர்ப்பம் வாய்த்தபோதெல்லாம் குக் மயோரியர் சிலரோடு வியாபாரம் செய்யத் தவறவில்லை. பின்பு அவர் வடக்குத்தீவு முழுவதை யும் சுற்றிப் பார்த்தார். எதிர்பாராமல் அவர் திடுக்கிடும்படி அத்தீவுவாசிகளிற் சிலர் நரமாமிச பக்ஷிணிகளாயிருந்தனர்.

பிறகு குக், தம் பெயரால் இன்றளவும் வழங்கும் ஜல சந்தியின் வழியாகச் சென்று தெற்குத் தீவையும் சுற்றிப் பிரயாணஞ் செய்து, அப்பால் அக்காலத்தில் நியூ ஹாலண்டு என்று வழங்கப்பட்ட ஆஸ்திரேலியா கண்டத்துக்குச் சென் றார். நடுவில் இரண்டு நாள் மிகக் கொடிய புயல் உண்டாக, அதனால் கப்பல் கவிழ்ந்துவிடும்போலிருந்தது. ஆயினும் கட

வுள் அருளால் மாலுமிகளனைவரும் ஆஸ்திரேலியாவின் கீழ்க் கரையை யடைந்து, செழிப்போடு விளங்கிய நிலத்தூடு பாய்ந் திருந்த கழியொன்றில் கப்பலைச் செலுத்தித் தங்கலானார் கள். அவ்விடத்திலுள்ள பயிர் பச்சைகளின் செழிப்பைக் கண்டு வியந்த குக் அக்கழிக்குப் பாடனிபே (Botany Bay) என்ற பெயரையிட்டார்.

இவ்விடத்தைக் கண்டுபிடித்ததனால் ஜேம்ஸ் குக் தம்மை அறியாமலே ஒரு பெரிய தொண்டைத் தம் தாய் நாட்டுக்குச் செய்துவிட்டார். ஆஸ்திரேலியா கண்டம் ஆங்கிலேயப் பிர தேசமாவதற்கு அடிகோலியவர் அவரே. அதனால் ஆங்கிலே யர் உள்ளத்தில் அவர் என்றும் நிலைத்திருக்கத்தக்க புகழைப் பெற்றார். இதற்கு முன் அத்தேசத்தைக் கண்டுபோனவர் கருதியவாறன்றி, அத்தேச முழுவதும் வெள்ளைக்காரர் களாற் குடியேற்றம் உறுவதற்குத் தக்கவிடமே என்று கண்டு பிடித்தவர் அவரே.

தாம் கருதிவந்த காரியத்தைக் காட்டிலும் இன்னும் அதிகமாகவே செய்து முடித்ததைப்பற்றி மகிழ்ந்த ஜேம்ஸ் குக் அங்கு நின்றும் புறப்பட்டு அதிக அபாயகரமான கரை யோரமே கஷ்டப்பட்டுக் கப்பலைச் செலுத்திச் சென்று 'நியூகினீ' என்ற தீவையடைய, அவ்விடத்தில் இடி மின்ன லாற் கப்பல் கொஞ்சம் சேதமுற்றது. அன்றியும் அங்கு 'மலேரியா' என்ற கொடிய முறைக்காய்ச்சலும் சில மாலுமி களுக்குக்காண, தம்சிறந்ததுணைவர்களில் இரண்டொருவரை ஜேம்ஸ் இழக்கும்படியாயிற்று. டியூபியாவின் மகன் முன் னும் டியூபியா பின்னுமாகக் காலனுக்கிரையாயினர்.

கடைசியில் ஜேம்ஸ் குக் ஆபிரிக்காக் கண்டத்தை நோக் கிக் கப்பலைச் செலுத்திச் சென்று நன்னம்பிக்கை முனையைக்

சுற்றிக்கொண்டு 1771-ம் வருஷம் ஜூலை மாதம் 13-ம் தேதி யன்று தம் சுதேசத்தை யடைந்தார். இவ்யாத்திரை முடிய மொத்தத்தில் ஏறக்குறைய மூன்று வருஷகாலமாயிற்று. இதனால் முக்கியமாகக் குக்குக்கும் மற்ற வீரர்களுக்கும் கீர்த்தி பெருகலாயிற்று. அதிகார பதவியினரும் பிறரும் குக்கை மெச்சி அவரைப் பலவிதத்திலும் கௌரவப்படுத்தினர். அவருக்குக் 'கமாண்டர்' என்ற உத்தியோகப் பதவியும் கொடுக்கப்பட்டது.

ஆராய்ச்சியாளர்களான யாத்திரிகர்களுக்கு எப்படிப்பட்ட குணங்கள் பொருந்தியிருக்கவேண்டுமோ அவ்வளவும் குக்கினிடம் பொருந்தியிருந்தன. ஸன்மானங்களையேனும், பிறரால் நேரும் பெருஞ்சுட்டையேனும் அவர் பெரிதாகக் கருதவில்லை; மெய்வருத்தம், மனத்துன்பம் முதலியவற்றையும் அவர் பொருட்படுத்தினாரில்லை. சாஸ்திர விஷயமாகத் தம் மனத்திற் கொண்டிருந்த அவாவைப் பூர்த்தி செய்விப்பதொன்றே அவருக்குப் பெரு மகிழ்ச்சி தரும் பெருங்காரியமாக இருந்தது. சென்ற யாத்திரையினால் உண்டான உற்சாகம் பெரிதும் பலப்படுவதாக அடுத்த வருஷமே அவர் தக்ஷிணப் பிராந்தங்களுக்குத் திரும்பவும் யாத்திரை செய்ய ஆயத்தமாகிப் புறப்பட்டார்.

இவ்விரண்டாம் யாத்திரையின் கருத்து, தக்ஷிணமகா சமுத்திரத்தில் ஆஸ்திரேலியாவுக் கடுத்தாற்போலவே அனைவரும் நம்பியிருந்தபடி ஏதேனும் பெரிய கண்டமொன்று இருக்கிறதா என்று காணவேண்டுமென்பதே. இவ்யாத்திரைக்குத் தயாரான கப்பல்கள் 'ரெஸல்யூஷன்' 'அட்வெஞ்சர்' என்பன இரண்டாம்; யாத்திரிகர்களின் தொகை 193. எல்லா ஏற்பாடுகளும் குறைவில்லாமற் செய்யப்பட்டு

உரிய நன்னாளில் அனைவரும் தெற்கு நோக்கிப் புறப்பட்டனர்.

1773-ம் வருஷ முதலில் ஜேம்ஸ் தக்ஷிண மகா சமுத்திர எல்லையை அடைந்தாராயினும் மிகப் பெரியதொரு பனிப் படலத்தால் தாம் வழிமறிக்கப்பட்டதைக் கண்டார். ஆயினும் அவர் தம் துணைவர்களின் உதவிகொண்டு காணக்கருதி வந்த கண்டத்துக்காக அநேக மாத காலம் ஆராய்ந்து தேடிச் சுமார் 10,500மைல் தூரம் சென்று, பின்பே அனைவரும் கருதி யிருந்தது பிழையென்று துணிந்தார். பின்பு மாரிகால முழுவதையும் ஸொஸைடித் தீவுகள் என்று கூறப்படும் நிலப் பிரதேசங்களை ஆராய்வதில்செலவிட்டு, தாஹிதித் தீவினரைப் போலவே இத்தீவினரும் கைதேர்ந்த முடிச்சுமாறிகள் என்பதை யறிந்தார். ஆயினும் அவர்களோடு நட்பையே பாராட்டிப் பல விஷயங்களிலும் அவர்களுடைய உதவியைப் பெற்றார். அத்தீவுவாசிகள் நட்பிற் கறிகுறியாகப் பன்றிகளைப் பரிசாகத்தருவதையும், ஒருவர் மூக்கோடு மற்றொருவர் மூக்கைத் தேய்த்துக் கொண்டு மரியாதை புரிந்து கொள்ளுவதையும், இன்னும் இவைபோன்ற பற்பல நடையுடை பாவனைகளையும் குக் குறிப்பிட்டுக் கொண்டார்.

இந்தச் சமயத்தில் ஜேம்ஸுக்குத் திடீரென அபாயகரமான நோய் சம்பவிக்க, அனைவரும் திகிற்படும்படி நேரிட்டது. ஆனால் இறுதியில் கடவுளருளால் அந்நோய் நீங்கியது. அதன் பின்பு, 1774-ம் வருஷத்தில் ஸெப்டம்பர் மாதத்தில் 'நியூகலிடோனியா' என்ற தீவை ஜேம்ஸ் கண்டுபிடித்தார். இவ்வாறு முன்னிலும் அதிக புகழோடு அவர் 1775-ம் வருஷம் ஜூலை மாதம் 30-ம் தேதியன்று இங்கிலாந்தை யடைந்தார். இந்த யாத்திரையால் அவர்தென்

கடற்றெகுதியின் படத்தைப் பிழையின்றிப் பூர்த்தி செய்வித்துப் பூகோள சாஸ்திரத்திற்கு இன்றியமையாத ஒரு தொண்டைப் புரிந்தார். இவ்வாறுன அருஞ்செய்கைகளுக்கு மெச்சிய அதிகாரிகள் இவரை 'ராயல் சொஸைடி'யில் ஒரு முக்கிய அங்கத்தினராக்கினர். இச்சமயத்தில் இவர் கண்டு பிடித்த பூகோளசாஸ்திர சம்பந்தமான விஷயங்களைக்காட்டிலும் முக்கியமான விஷயம் ஒன்றுண்டு. அதற்காக மாலுமிகள் அனைவரும் இப்பெரியாருக்கு எக்காலத்திலும்கடமைப் பட்டவர்களாவர். சாதாரணமாக மாலுமிகளுக்குக் கடல் யாத்திரைகளில் உண்டாகக்கூடிய சில கொடிய நோய்கள் உண்டு, அவற்றுள் ஒன்று குஷ்டம்போன்ற சொறி கரப்பான் என்ற வியாதியாம். இப்படிப்பட்ட வியாதிகள் யாத்திரிகர்களுடைய உயிர்களுக்கே ஆபத்தைவிளைவிக்கத்தக்கன. தாம் மேற்கொண்ட சில முன் சாக்கிரதையான செய்கைகளால் காப்டென் குக் இவ்வித வியாதிகளைப் பெரிதும் தடுத்துவிட்டார். கப்பலில் சுத்தமான காற்று எப்போதும் பரவியிருக்கும்படிக்கும், மாலுமிகளின் ஆகாரத்தில் நிரம்பக் காய்கறிகளும் புழுக்கிய தானியவகைகளும் இரத்தசுத்தி செய்யக்கூடிய சாமக்கிரியைகளும் கலந்திருக்கும்படிக்கும், செய்துஇம்முறைகளால் கொடிய நோய்களை வரவொட்டாத படி செய்தார். இவ்வாறு தாம் கண்டுபிடித்த விஷயத்தைப் பற்றி ராயல் சொஸைடியார் முன்பு ஓர் அரிய பிரசங்கத்தையும் புரியவே, அவர்கள் 'காப்லி' பொற்பதக்கத்தை அவருக்கு அளித்துக் கௌரவித்தனர்.

இப்போது காப்டென் குக்குக்குவயது நாற்பத்தேழுக்கு மேலாயிற்று. தம் வாழ்நாளிற் சிறந்த காலத்தைத் தேச ஸேவையிலேயே செலவிட்டுக் களைப்புற்ற அவர் ஓரிடத்தில்

நிலைத்து இன்பமாகக் காலங் கழிக்க எண்ணம் கொண்டு சுமார் ஒரு வருஷகாலம் கிரீனிச் வைத்தியசாலையில் சிரம மில்லாத ஒரு காப்டன் பதவியை மேற்கொண்டு வாழலானார். ஆயினும் என்றும் சமுத்திர யாத்திரையிலேயே காலங்கழிக்க நாட்டங்கொண்ட அவர் மனம் வெகு சீக்கிரத்தில் இவ் வாழ்க்கையில் அதிருப்திப்படலாயிற்று. இவரெண்ணப் படியே நடக்க ஒரு சந்தர்ப்பமும் இவ்வமயம் வாய்த்தது.

அரசாங்கத்தார் அட்லாண்டிக் மகா சமுத்திரத்திலி ருந்து பஸிபிக் மகா சமுத்திரத்துக்குச் செல்வதற்கு வட மேற்காக ஒரு மார்க்கத்தைக் கண்டு பிடிக்க வேண்டுமென்று பெரிதும் விரும்பியிருந்தனர். 1776-ம் வருஷத்தில் இதனை மேற்கொள்ளுதற்குக் தக்க வீரர். ஒருவரைத் தேடவுமாயி னர். காப்டென் குக்கே இத்தகைய காரியத்துக்கு ஏற்றவர் என்று அவர்கள் உறுதியாக நம்பினரேனும், இதுவரையில் எவ்வளவோ சிரமப்பட்ட அவரைத் திரும்பவும் சிரமப் படுத்த மனம் இல்லாதவராக இருந்தனர். பின்பு அவர்கள் தமக்கு ஒரு கப்பற்றலைவரைத் தேர்ந்து தரும்படி ஜேம் ஸையே கேட்க, அவர் தம்மினும் வயதிற்சிறியவர்களாய், முன்னுக்குவரக்கூடிய பலரைப்பற்றிக் கூறியும் அரசாங்கத் தார் அவர்களைத் தக்கவர்களாக ஒப்புக் கொள்ளவில்லை. அதனால் காப்டென் குக் இறுதியில் வேறுவழியின்றித் தாமே சென்றுவருவதாகக் கூற அதிகாரிகள் அளவற்ற உவகை கொண்டார்கள். அதன்படி அவர்கள் எல்லாவற் றையும் தீர்க்கமாக ஆலோசித்து ஏற்பாடு செய்துதர, காப் டன் கிளர்க் என்றவரைத் தமக்கு அடுத்த தலைவராக அழைத்துக்கொண்டு குக் ஜூலை மாதத்தில் புறப்பட்டுச் சென்றார். அவர் இந்த யாத்திரையில், முன் கண்டுபிடித்த சில தீவுகளைப்பற்றிய சந்தேகங்களனைத்தையும் தீர்த்துக்

கொண்டு, 'ஹாவையியன்' அல்லது 'ஸாண்ட்விச்' தீவுகளை யடைந்து அப்பிரதேசங்களைப் பற்றிய ஆராய்ச்சி புரிந்த பின்பு, வட- அமெரிக்காவின் மேற்குக் கரையிலுள்ள வான் குவர் தீவை யடைந்தார். அதன் பின்பு அவர் பேரிங்கு ஜல சந்தியின் வழியாக உத்தரமகா சமுத்திரத்தை யடைந்து அரசாங்கத்தார் தமக்குக் கட்டளையிட்டபடி வடமேற் கான மார்க்கத்தைக் கண்டுபிடிக்க முயல, அப்போது மேற் செல்லவொட்டாதபடி மிகப் பெரியதான பனிப்படலம் ஒன்று அடியோடு தடுத்துவிட்டது. அதனால் மனமழிந்தார் காப்டென் ஜேம்ஸ் குக். ஆயினும் அவர் திரும்பவும் முயல் வதே சரியென்று தீர்மானித்து மாரிகாலத்தை ஸாண்டுவிச் தீவுகளிற் கழிக்க நினைத்தார்.

அத்தீவுவாசிகள் ஆங்கிலேயரிடத்து அன்போடேயே கடந்து வந்தனரேனும், தம்மிடையே அவர்கள் தங்க வந்ததைக் கண்ணுற்றபோது பலவாறான ஐயங்கொண்டு தடுக்கலாயினர். கொஞ்சங் கொஞ்சமாக இருதரத்தினர்க்கும் மனஸ்தாபம் முற்றியது. அதனால், அப்பிரதேசத்தின் அரசனோடு சமாதானம் செய்துகொள்ள விரும்பி அவனுடைய கொலுவை யடைந்தனர். அரசரோடு திருப்திகரமான விஷயங்களைப் பேசி முடித்துக் கொண்டிருக்கின்ற சமயத்தில், ஹாவையியர் தலைவனொருவன் ஆங்கிலக் கப்பலிலிருந்து தீர்க்கப்பட்ட துப்பாக்கி வெடியால் உயிர் துறந்தான் என்ற வதந்தி அங்கு எட்டியது. உடனே அங்குக் குழப்பமுண்டாக, ஒரு முரட்டாள் ஈட்டி கொண்டு ஜேம்ஸைக் குத்துவதற்கும் ஆயத்தமானான். அத்தருணம் தம் விருப்பத்திற்கு விரோதமாகவே ஜேம்ஸ் ஒருவனைச் சுட்டுத் தள்ளவும் நேரிட்டது. அதன் பின்பு அவர் தம் வீரர்களைப் பின்வாங்கிச் செல்ல

உத்தரவிட்டார். அவர் ஹாவையியர்களை நோக்கிக்கொண்டு இருந்த வரையில் ஒருவரும் அவரை எதிர்க்க முன்வரவில்லை. ஆயினும் துரதிர்ஷ்டவசமாகத் தம் வீரர்களுக்கு ஏதோ கட்டளையிடும் பொருட்டு அவர் சிறிது திரும்பினது தான் தாமதம், சில கொடியர்கள் அவரை முரட்டுத்தனமாக அடித்து வீழ்த்தி விட்டனர். அக்கணமே மற்றுஞ் சிலர் அவர்மீது பாய்ந்து அவருடைய உயிரை வாங்கினர்.

இவ்வாறாக ஆங்கிலேயர் அனைவரும் மனமாழ்கும்படி காப்டென் ஜேம்ஸ் குக் 1779-ம் வருஷம் பிப்ரவரிமாதம் 14-ம் தேதியன்று மரணமடைந்தார். கொஞ்சநேரம் சச்சரவு செய்த பின்பு சுதேசிகள் அவருடைய உடலைக் காப்டென் கிளர்க்கினிடம் கொடுத்துவிட, அது உரிய மரியாதைகளுடன் ஒரு வாரத்துக்குப் பின் கடலிற் சேர்க்கப்பட்டது.


பஸிபிக் மகா சமுத்திரப் பிரதேசத்தின் அமைப்பு முதலியனவற்றை பூகோள சாஸ்திரிகள் பலரும் அறியும் வண்ணம் செய்தளித்த சாஸ்திரவிற்பன்னரும், ஆஸ்திரேலியா கண்டத்தையும் நியூஜீலண்டு தீவுகளையும் பிரிட்டிஷ் ஸாம்ராஜ்யத்துக்குத் தேடித் தந்த பெரியாரும் ஆகிய ஜேம்ஸ் குக்கை எவரேனும் மறக்க முடியுமோ?

## VI

# ஸர் ஜான் பிராங்கிளின்.

சாஸ்திர ஞானத்தின் அபிவிருத்தியின் பொருட்டு எத்தகைய வருத்தத்தையும் பொருட்படுத்தாமல் தடைகளனைத்தையும் மீறி மேற்செல்லுங் காலத்தில் கொடிய காலன் வாய்ப் பட்டுப் புகழுடம்பைப் பெறும் உத்தமர் சிலரே. அத்தகைய உத்தமர் எந்நாட்டினரேனும், எத்தேயத்தினரேனும், எம்மதத்தினரேனும் உலகினராற் கொண்டாடப்படுவது திண்ணம். அத்தகைய பெரியாருள் காப்டென் ஸர் ஜான் பிராங்கிளின் என்பவரும் ஒருவர்.

இவர், இங்கிலாந்தில் 'ஸ்பில்ஸ்பி' என்ற இடத்தில் 1786-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 16-ம் தேதியன்று பிறந்தார். இளமைப்பருவத்தில் இவர் மிகவும் பலவீனராயிருந்ததனல், இவர் அதிககாலம் உயிர் வாழ்வது அரிது என்று இவருடைய குடும்ப வைத்தியர் கூறியிருந்தனர். ஆயினும் காலம் செல்லச் செல்லப் பிராங்கிளின் அழகிய ரூபமும், கம்பீரத் தோற்றமும், வலிமை பொருந்திய அங்கங்களும், அளவு கடந்த தைரியமும் உடையவராகி வைத்தியருடைய வார்த்தைகளைப் பொய்யாக்கினர். சிறுவயதில் இவர் மிகவும் அசுத்தமாக இருந்ததனல் இவருடைய பெற்றோர் இவரை அதிகப் பிரியத்துடன் பாராட்டவில்லை. சிறு வயதில் பிராங்கிளின் எல்லா விஷயங்களிலும் அனுவசியமாகத் தலையிட்டுக் கொள்ளும் சுபாவ முடையவராக இருந்ததனல் சில சமயங்களில் இவர் சங்கடத்துக்குள்ளாகவும் நேரிட்டது. லௌத் என்ற விடத்தில் உள்ள ஒரு பாடசாலையிற் கல்வி பயின்று




பிராங்கிளினுடைய யாத்திரைகள்
எண்கள் வருஷங்களைக் குறிக்கும்.

வரும்போது பிராங்கிளின் ஒருநாள் தம் நண்பனொருவனோடு கடற்கரைக்குப் பிரயாணஞ் செய்ய நேரிட்டது. அக்கால முதல் அவருடைய உள்ளத்தைக் கடல்கவர்ந்து கொண்டது. நாவிகத் தொழிலை மேற்கொள்வதே சரி என்று அவர் துணிந்தார்.

ஆயினும் அவர் இத்தொழிலை மேற்கொள்வதற்கு அவருடைய தந்தை சம்மதப்படவில்லை அவர் தம் புத்திரரை ஒரு பாதிரியாக்க எண்ணங் கொண்டார். ஆயினும் ஜான் இடைவிடாது அவரை வேண்டிக்கொண்டிருந்ததனால், ஒரு சமயம் கடலிற்போய்வந்தால் அந்த அவாத்தீருமோ என்று பரீக்ஷிக்க எண்ணி, ஹல்-லிஸ்பன் என்ற துறைமுகப்பட்டினங்களுக்கிடையே வியாபாரம் செய்யும் ஒருகப்பலில் அமர்த்தினர். இதனால் பிராங்கிளினுடைய ஊக்கம் பெருகுவதாயிற்றே யன்றிக் குறையவில்லை. அதனால் உறுதியுடைய அவருடைய தந்தையும் சிறுவருடைய பிடிவாதத்துக்கு இடங் கொடுக்கும்படி யாயிற்று. இரண்டு வருஷங்களுக்குப் பின்பு அவர் தம் தந்தைக்கு எழுதிய ஒருநிருபத்தினல் அவருடைய துணிகரம் நன்கு வெளிப்பட்டது. அவர் எழுதியதாவது, 'சிறு பிள்ளைகளுக் கியல்பாயுள்ள பிடிவாத குணத்தாலாவது, மாலுமிகளின் அழகிய உடையைக் கண்டு மயங்கிய அவாவினலாவது, பாடசாலைத் தொல்லை யொழியும் என்ற எண்ணத்தாலாவது நான் இவ்வாழ்க்கையை மேற்கொள்ளவில்லை. இவ்வாழ்க்கையின் கஷ்ட நஷ்டங்களை என் தோழர்கள் எனக்கு எடுத்து விளக்கிக் கூறு முன்னமே இவற்றைப் பற்றி நான் ஆழ்ந்து சிந்தித்து உணர்ந்ததுண்டு. கடலுக்குச் செல்வதிலேயே என் மனம் ஆழ்ந்து விட்டதனால், வியாபார முதலிய வேறு எவ்வகைத் தொழிலும் என் மனத்திற்கு அ

வசியமாகவும் அசாத்திய மானதாகவும் தோற்றியது,' என்பதே.

1800-ம் வருஷம் மார்ச்சு மாதம் ஒன்பதாம் தேதியன்று அவருடைய நாவிக வாழ்க்கை ஆரம்பமாயிற்று. அப்போது அவர் 'பாலிபீமஸ்' என்ற கப்பலில் முதற்றர 'வாலன்டிய'ராகச் சேர்ந்து, ஒரு வருஷ காலத்துக்குள் கோபன் ஹேகன் என்ற இடத்தில் நடந்த யுத்தத்தில் நெல்ஸன் தலைமையின் கீழிருந்த ஆங்கிலக் கப்பற் படையில் வீரத்தோடு நடந்து கொண்டார். அதனல் பலவகைப்பட்ட அபாயங்கள் நேரிட்டனவேயாயினும், தைரியமான அவருடைய மனத்துக்கு அவை உற்சாகமாகவே விளங்கின.

கோபன் ஹேகனில் நடந்த யுத்தத்திற்குச் சற்று முன்பாகத் தக்ஷிணப் பிராந்தங்களுக்கு ஒரு யாத்திரை ஏற்பாடு செய்யப்படுவதைப் பிராங்கிளின் அறிய நேரிட்டது. அவருக்கு நெருங்கிய உறவினரான காப்டென் மாத்யூ பிளிண்டர்ஸே அதில் தலைமை வகிப்பதாகவும் அவர் அறிந்தார். இப்படிப்பட்ட அரிய சந்தர்ப்பத்தை இழக்கப் பிராங்கிளினுக்கு மனம் வரவில்லை. ஆகவே யுத்தம் முடிந்தவுடனே அவர் இங்கிலாந்துக்குத் திரும்பி வந்து காப்டென் பிளிண்டர்ஸினுடைய 'இன்வெஸ்டிகேடர்' என்னும் கப்பலில் மாலுமியாகச் சேர்ந்து 1801-ம் வருஷம் ஜுலைமாதத்தில் புறப்பட்டுச் சென்ருர். அவருக்கு அப்போது வயது பதினைந்து. வான சாஸ்திரத்தில் இயல்பாக அவருக்கு இருந்த தேர்ச்சி அவருக்குப் பெரிதும் பயன்படவே, பிளிண்டர்ஸினுடைய யாத்திரிக கூட்டத்தில் அவருடைய சேவை இன்றியமையாததா யிருந்தது. அவருடைய முயற்சியும் ஊக்கமும் மேலதிகாரிகளால் மிகுதியும் கொண்டாடப்பட்டன. காப்டென் பிளிண்டர்

ஸும் தம் உறவினரான பிராங்கிளினிடம் அதிகப் பிரியங் கொண்டு இந்த நடுத்தரமான வயதில் நல்ல ஆலோசனைகளைக் கூறியும் வேண்டிய உதவிகளைச் செய்தும், தைரியப்படுத்தி வேலையில் ஊக்கியும் வந்தார். அவருடைய உருவத்தாலும், குணத்தாலும், செயலாலும், பிறவற்றாலும் கப்பலிலுள்ள மாலுமிகளனைவரும்மனங்கவரப்பட்டனர். அவர்களனைவரா லும் அவர் பெற்ற உதவிகள் அவருடைய வாழ்க்கையில் பெரிதும் பயன்பட்டன. அவருக்கு ஒரே குறை யிருந்தது; அன்னிய பாஷைகளிற் பயிற்சி யில்லாமை யொன்றே அவருக் குச் சிறிது கஷ்டமாகத் தோன்றியது.

இத்தருணத்தில் நடந்த ஒரு சம்பவம் பிராங்கிளி னுடைய துணிகரத்தை வெளிப்படுத்தும் நியூஹாலண்டு என்ற பெயரையுடைய ஆஸ்திரேலியாவின் கரையோரத்தில் "இன்வெஸ்டிகேடர்" சென்று கொண்டிருக்கையில், அக் கலத்தினின்றும் எட்டு மாலுமிகள் ஒரு தனிப்படகிற் புறப் பட்டு ஏதோ காரியமாகச் சென்றனர். ஆனால் அப்படகு உடைந்து போகவும்,அதிலிருந்தமாலுமிகளனைவரும் காணு மற் போகவும் நேரிட்டுவிட்டது. அதனால் காப்டென் பிளிண் டர்ஸ் ஜான் பிராங்கிளினைக் கரையிலிறக்கி அவர் கையில் ஆங்கில தேசக்கொடியாகிய யூனியன் ஜாக்கைக் கொடுத்துக் கரையில்ஏதேனும்பிரதேசங்கள் ஒதுக்கப்படின் அக்கொடியை நாட்டித் தெரிவிக்க வேண்டுமென உத்தரவிட்டனர்.

ஜான் பிராங்கிளின் தேக வன்மை துணிகரம் முதலிய உத்தமத் தன்மைகளோடு சிறந்த தேசாபிமானமும் உடைய வர். கரையில் அவரைப் பிளிண்டர்ஸ் விட்டுப் போன வுடனே, அவர் திரும்பிப்பார்க்க, தம்முன் ஆங்கில ஸாம் ராஜ்யத்துடன் சேர்க்கத்தக்கதொரு செழிப்புள்ள தேசம்

பரந்து விளங்குவதைக் கண்டார். அப்போது அவருடைய மனத்தில், தேசாபிமானம் ஒரு புறமும், உத்தரவுக் கடங்கி நடக்கும் தன்மை ஒரு புறமுமாகப் போரிடலாயின. கையில் இருந்த கொடியை உபயோகப்படுத்துவதற்குப் பிளிண்டர்ஸ் இட்ட கட்டளை ஒன்று; இவர், அந்நாட்டைத் தம் தாய் நாட்டின் ஸாம்ராஜ்யத்துக்குட்படுத்துவதற் கறிகுறியாக அக் கொடியை நாட்டவேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டு செய்த காரியம் வேறு; ஆக, இவருடைய தேசாபிமானமே முக்கியமாக விளங்க, அக் கொடியை நாட்டிவிட்டார். பின்பு கப்பலிலிருந்து ஒரு படகைச்செலுத்திக்கொண்டு ஒரு உத்தியோகஸ்தர் கரையை நெருங்கிவர, பிராங்கிளின் தைரியத்தோடு கூசாமல் கரையோரமே சிறிது தூரத்திற் கப்பால் விழுந்துகிடந்த ஏதோ ஒரு பொருளைச் சுட்டிக்காட்ட, அவ்வுத்தியோகஸ்தர் சென்று அது ஒரு நீண்ட பாறையென்றும், பிராங்கிளின் பார்வைப் பிசகினால் அதனைத் தவறாகக் கண்டிருக்க வேண்டு மென்றும் கூறிப் போனார். இவ் வீரவாலிபரின் மனத்திலிருந்த எண்ணத்தை அவர் எவ்விதம் அறிவார்? வெகு காலஞ் சென்ற பின்னரே இவ்விஷயம் அனைவர்க்கும் தெரியலாயிற்று.

இனி, ஆங்கில மாலுமிகளனைவரும் ஆஸ்திரேலியா கண்டத்தின் கரையோரமே நாடாராய்ந்து பல மாதங்கள் கழித்துக் கொண்டிருக்கையில், சமுத்திர யாத்திரைகளில் எதிர்ப்பார்க்கக் கூடாத அத்தனை கஷ்டங்களும் பிராங்கிளினுக்கு ஏற்பட்டன. அப்போது 'இன்வெஸ்டிகேடர்' என்ற கப்பலும் உடைந்தது. அதனை விட்டு மாலுமிகள் 'பார்புவாய்' என்ற கப்பலில் ஏறிக்கொண்டு தம் சுதேசத்தை நோக்கித் திரும்புங்கால் ஏழுநாட்கள் கழித்து அதுவும் கற்பாறை

களில் மோதி உடைந்துபோய்விட்டது. மூன்று மாத காலத்துக்கு வேண்டிய உணவுப் பொருள்களே இருந்தன; அவற்றைவைத்துக்கொண்டு உதவிக்கு ஏதாகிலும் கப்பல் வரக்கூடும் எனக் கருதி மாலுமிகள் காத்திருந்தனர். ஒப்பற்ற திறமையாளராகிய பிளிண்டர்ஸ் தாமே ஒரு சிறு படகைச் செலுத்திக்கொண்டு 750 மைல்கள் வரையிற் கஷ்டப்பட்டுப் பிரயாணஞ் செய்து கான்டன் என்ற சீனத் துறைமுகத்தை அடைந்தார்.

அவ்விடத்தில் ஒரு வர்த்தகக் கப்பற் கூட்டத்தார் நாதனியல் டான்ஸ் என்ற நாவிக வீரரது தலைமையின் கீழ்த் தங்கியிருந்தனர். அவரைக் கண்டு பிளிண்டர்ஸ் அவருடைய நல்லுதவியைப் பெற்றார். விரைவில் பிளிண்டர்ஸ் விட்டு வந்த மாலுமிகள் இவர்களைச் சேர்ந்தனர். இதற்குச் சிறிது காலத்திற்குள் எதிர்பாராத ஒரு கப்பல் யுத்தத்தை இவர்கள் செய்ய நேரிட்டது. சுதேசம் நோக்கிச் செல்லுகையில் பிரெஞ்சு சண்டைக்கப்பற் படை யொன்று இவ் வியாபாரப் படையை எதிர்த்து வந்துவிட்டது. டான்ஸோ தைரியமற்ற கோழையல்லர்; மேலும் அவரோடு பிளிண்டர்ஸும் இருந்தார்; பிராங்கிளின் போன்ற வீரவாலிபரு மிருந்தனர். இப்படிப்பட்ட திறமையாளர் பிரெஞ்சுக்காரரைக் கண்டு அஞ்சுவரோ? அனைவரும் ஒருமன மாகத் துணிந்து எதிர்பாராத விதம் தாக்கிப் பீரங்கிகளைச் சாமர்த்தியத்தோடு உபயோகித்துப் பகைவரைப் புறங்காட்டி விரைந்தேகும்படி செய்துவிட்டனர். இவ்வமயத்தில் தாம் செய்த சில அருஞ்செயல்களால் பிராங்கிளின் அளவு கடந்தவாறு புகழப்பட்டார். அவரும் பிளிண்டர்ஸோடும் டான்ஸோடும் நன்றாய் நெருங்கிப் பழகி, அவர்களை முன்மாதிரியாக எவ்வாற்றானும் கொண்டு ஒழுகி விருத்திக்கு வரலாயினர்.

பிராங்கிளினுக்குப் பதினெட்டு வயதானபோது அவர் இங்கிலாந்துக்குத் திரும்பி வந்தார். 'பெல்லேரோபோன்' என்ற கப்பலில் ஒரு உத்தியோகஸ்தராக அவர் நியமிக்கப் பட்டார். அப்போது உலக சரித்திரத்திற் பிரசித்திபெற்ற 'டிரபால்கர்' கடல் யுத்தம் நடந்தது. நெல்ஸன் ஆங்கில நாவிக யுத்த படைக்குத் தலைவராக இருந்து பிரஞ்சுக்காரரை முறி யடித்து அவர்கள் பலத்தைத் தொலைத்தது இந்த யுத்தத் திலே தான். இந்தச் சந்தர்ப்பத்தில்தான், 'தன் மக்கள் தம் கடமையைச் சரிவர நிறைவேற்றுவரென்றுஇங்கிலாந்துஎதிர் பார்க்கிறது,' என்ற பிரசித்தி பெற்ற செய்தியை நெல்ஸன் தம் வீரர்கள் தைரியம் இழவாதிருக்கும்படி பரவச்செய்தார். இந்தப் பெரிய யுத்தத்திலே தாம் வீரராயிருக்க நேர்ந்ததை விடப் பெரிய பாக்கியம் தமக்கு எக்காலத்திலும் கிட்டாது என்று பிராங்கிளின் நினைத்தார். நெல்ஸனுடைய சிறந்த செய்தியைக் கொடிக் குறிகளாற் பரவச் செய்த சிலரில், பிராங்கிளினும் ஒருவர். அஞ்சா நெஞ்சோடு கொடிய யுத் தத்தின் நடுவில் அளவற்ற பீரங்கி வெடிகளினிடையே இருந்து பழகியதனால் இவருடைய காது கொஞ்சம் செவிடு பட்டதாகவே அதுமுதல் விளங்கலாயிற்று.

இவ்வாறு ஆறு வருஷ காலமாக அவர்சாகசச்செய்கை களிலேயே ஈடுபட்டிருந்தார்; ஆதலால் அதனைத் தொடர்ந்த ஆறுவருஷகாலம் ஏதும்செயலற்றிருக்கும்படியாக அவருக்கு நேரிட்டது. கொஞ்சம் ஓய்வு பெற்றிருந்தது அவருக்குத் திருப்திகரமாகவே இருந்ததாயினும், விரைவிலே சாந்தமான செயலற்ற வாழ்க்கையில் அதிருப்தியுண்டாக, அவர் திரும்ப வும் வெளிச் செல்வதற்கு வேண்டிய சந்தர்ப்பம் ஏதேனும் வாய்க்குமோ என்று எதிர்பார்த்தவரானார்.

1814-ம் வருஷத்தில், அமெரிக்கா வாசிகளுக்கெதிராக நடந்த ஒரு யுத்தத்தில் கலந்துகொள்ளும்படி கட்டளையிடப்பட, அவர் 'பெட்போர்ட்' என்ற தம் கப்பலோடு அட்லாண்டிக் மகா சமுத்திரத்தைக் கடந்து சென்றார். அச்சமயம் அவர் லெப்டனென்டு என்ற பதவியை வகித்திருந்தார். நியூ ஆர்லியன்ஸ் என்ற துறைமுகத்தை எதிர்த்துச் செய்த யுத்தத்தில் அவர் வீரத்தோடுநடந்துகொண்டபோது கொஞ்சம் காயமடைந்தார். ஆனால் அவருடைய திறமையை மெச்சி மேலதிகாரிகள் அரசாங்கத்தாருக்கு எழுத நேர்ந்தது.

அந்த யுத்தம் முடிந்த பின்பு, பிராங்கிளின் இங்கிலாந்துக்குத் திரும்பினர். மூன்று வருஷங்கள்கழிந்தன. பூகோள சாஸ்திர சம்பந்தமாக உலகத்தாருடைய அறிவை விருத்தி செய்வதற்கு உழைக்க வேண்டுமென்ற அவா அவருடைய மனத்தில் மேலும் உறுதியாகப் பதியலாயிற்று. இப்போது யுத்தத் தொல்லைகள் அரசாங்கத்தாருடைய மனத்தை வருத்தாமல் எங்கும் அமைதியும் எத்துறையிலும் விருத்தியும் விளங்கவே, உத்தர மகா சமுத்திரத்தில் யாத்திரை செய்து வருவதற்கான ஏற்பாடுகள் சிலவற்றை அவர்கள் செய்யலாயினர். இவ் யாத்ரிகக் கூட்டத்திற்குத் தலைவராகக் காப்டென் டேவிட் புஷன் என்பவரும், அடுத்த துணைவராகப் பிராங்கிளினும் நியமிக்கப்பட்டனர். டோரோதியா என்ற கப்பலின் தலைமையைப் புஷனும் ட்ரேன்ட் என்ற கப்பலின் தலைமையைப் பிராங்கிளினும் ஏற்றுக்கொண்டு, தேம்ஸ் நதியை விட்டு 1818-ம் வருஷம் ஏப்பிரல் மாதம் 25-ம் தேதியன்று புறப்பட்டனர்.

கப்பல்களைக் கிரீன்லண்டுக்கும் ஸ்பிட்ஸ் பெர்கென் தீவுகளுக்கும் இடையிலே செலுத்திப் பின்பு சீதோஷ்ண நிலைமை

சரியாக இருந்து சௌகரியப்பட்டால் உத்தர துருவத்தைக் காணச் செல்லவேண்டுமென்றும், அதன்பின் பேரிங்கு ஜல சந்திக்குச் செல்லவேண்டுமென்றும் புஷன் துரைக்குக் கட்டளையிடப்பட்டிருந்தது. இந்தயாத்திரைஆரம்ப முதலேபிரதிகூலங்களுக்கு உட்பட்டதாயிருந்தது. பிராங்கிளினுடைய கப்பல் கடலுட் சென்ற சில நாட்களுக்குள் நீர் கொள்ள ஆரம்பித்தது. மிகக் கஷ்டப்பட்டுப் பரிசீலனை செய்து கப்பலின் அடித்தளத்தில் அதுசெய்யப்பட்ட காலத்தில் ஒரு சிறிய இடத்திற் சரியாகப் பூட்டுத் தைக்காத அசாக்கிரதையினால் அவ்வாறு நேர்ந்ததென்று கண்டுபிடித்து அதனைச் செப்பனிடுவதற்குள் பலமாத கால மாகிவிட்டது. இவ்யாத்திரையில் பிராங்கிளின் அனுபவித்ததெல்லாம் துன்பமே ஆயினும், பிற்காலத்தில் தனக்கு வேண்டிய விஷயங்களை எல்லாம் இதிலேயே அவர் நன்கறிந்து கொண்டார்.

ஒரு சமயம் பிராங்கிளின் சிறிய படகு ஒன்றில் தனியே சென்று கடலின்மீது உறைந்ததாலுண்டான ஒரு பனிவயலைப் பரிசீலனை செய்துகொண்டிருக்கும்போது காது செவிடு படும்படியான பெருஞ் சத்தமொன்று கேட்டுத் திரும்பிப் பார்க்க, மிகப் பெரியதொரு பனிப்படலம் உடைந்து படகை நோக்கி வெகு வேகமாக மிதந்து வருவதைக் கண்டுநடுங்கினார். தப்பித்துக்கொள்வது என்பதற்கோ வழியில்லை. திருவருளிலே பூரணமான நம்பிக்கை வைத்துத் தம்மைக் காப்பாற்ற வேண்டு மென்று பிரார்த்தித்துக் கொள்வதே அவராற் செய்வதற்கு உரியதாயிருந்தது. பெரு முழக்கத்தோடு அப் பனித்தொகுதி படகுக்குப் பக்கவாட்டில் தண்ணீரில் உருண்டு சென்று, பின்பு திரும்பவும் தோன்றியது. இச்சமயமும் அது நூறடி உயரம் வரையில் உருண்டு

புரண்டு பின்பு திருவருட் செயலால் கடலுள் வெகு தூரத்துக்கப்பால் சென்றது. எவ்வாறே இவருடைய படகு கவிழாமல் தப்பித்தது அதியற்புதமான ஒரு விஷயமே. கொஞ்சம் பிசகியிருந்தால் பிராங்கிளின் உயிரிழந்திருப்பார்.

வெகு சீக்கிரத்தில் புஷனும் பிராங்கிளினும் உத்தர துருவத்திற்குச் செல்வது அவ்வளவு எளிதான காரியமன்று என்றும், படகுகளேயும் கப்பல்களேயும் பொடியாக்கத்தக்க வன்மையுடைய பனிப்படலங்களினிடையே ஏதும் செய்வதற் கியலாது என்றும் சந்தேகமறத் தெரிந்து கொண்டனர். அன்றியும் இவர்கள் உத்தரப் பிரதேசத்திற்குரிய கொடிய புயல்களொன்றில் அகப்பட்டுக் கொண்டு தெற்கே துரத்தப்பட்டனர். ஆகவே தாம் மட்டுமேனும் அங்கே தங்கியிருந்து பின்பு சௌகரியப்பட்டபோது மேற்கொண்ட காரியத்தை முடித்து வருவதாகப் பிராங்கிளின் கூறியும் புஷன் கேட்கவில்லே. அதனுல் அனேவரும் சுதேசம் நோக்கி வரலாயினர். கப்பல்கள் தம்பழைய உருவம் தெரியாத விதமாகச் சேதப்பட்டு அக்டோபர் மாதம் 22-ம் தேதியன்று சுதேசத்தை அடைந்தன.

மேற்கொண்டகாரியத்தில் இவ்யாத்திரை அபஜயப்பட்டது எனினும், அறிவு வளர்ச்சியின் பொருட்டுக் கொடிய கஷ்டங்களுக்கு உட்பட்டுத் தம் உயிர்களேயும் அர்ப்பணஞ் செய்யத் துணிந்த வீரர்கள் உளர் என்பதை,இது தெளிவுபெறஉலகினர்க்கு எடுத்துக்காட்டியது. இவ்வாருன வீரர்களில் பிராங்கிளின் தலேசிறந்தவராயிருக்கவே,அரசாங்கத்தார்காலதாமதமின்றி அவருடைய தலேமையின்கீழ்ச் செல்லும்படி ஒரு யாத்திரைக்கு வேண்டிய ஏற்பாடுகளேச் செய்து, வட அமெரிக்காவின் வடகரையை ஆராயும்படிக்கும், உத்தரமாக

சமுத்திரத்திற்குச் செல்லும்படிக்கும் உத்தரவிட்டு, ஜார்ஜ் பாக், ராபர்ட் ஹூட் என்ற வீரமாலுமிக ளிருவரையும், டாக்டர் ஜான் ரிச்சர்ட்ஸன் என்ற சிறந்த சாஸ்திர விற்பன்னரையும் முக்கிய துணைவர்களாக அனுப்பினார்கள். 1819-ம் வருஷம் மே மாதம் 23-ம் தேதியன்று 'பிரின்ஸ் ஆவ்வேல்ஸ்' என்ற கப்பலில் பிராங்கிளினும் அவர் நண்பர்களும் புறப்பட்டனர்.

ஆகஸ்டு மாதத்தில் யாத்திரிகர்கள் ஹட்ஸன் குடாக் கடலை யடைந்தனர். சில நாட்களானவுடன் கரையோரமே செல்வதான பெரும்பிரயாணம் ஆரம்பமாயிற்று. அங்கங்கே அமெரிக்க சுதேசிகள் சிலரும் எஸ்கிமோக்களும் பிராங்கிளினைத் தொடர்ந்து சென்று உதவி புரிந்தனர். இந்த யாத்திரையில் அதிகமான ஊக்கத்தோடு முனைந்திருந்த தலைவர், மாரிகாலம் வந்ததையும் கவனியாமல் நெடுகச் சென்று ஆராய்ந்து, 1500 மைல் பிரயாணஞ் செய்தபின் என்டர்ப்ரைஸ் கோட்டை என்ற விடத்தில் தங்கலானார்கள். உணவுப் பொருள்கள் குறைந்துபோயின. சீதோஷ்ணமானியில் உள்ள பாதரஸமும் உறைந்து போகும்படியான அவ்வளவு குளிர் மிகுதி யுண்டாயிற்று. இந்த உபத்திரவங்கள் போதாதது போல், கொசுக் கூட்டங்களும் மிகுந்த துன்பத்தைத் தந்தன. ஒரு சமயம் வேகமாகச் செல்லும் காட்டாறொன்றின் கரையில் ஒரு கல்லின்மேல் பிராங்கிளின் நின்றுகொண்டிருந்தபோது அவருடைய கால் சறுக்கவே அவர் நீரோட்டத்தில் அகப்பட்டுக் கொண்டார். வெள்ளத்தின் வேகம் அவரைச் சுழற்றி யடித்துக் கொண்டுபோய்விட, தெய்வ யத்தனத்தால் ஓரிடத்தில் நீர் மட்டத்துக்குச் சரியாகத் தொங்கியிருந்த மரக்கிளை யொன்றைப் பற்றிக்கொண்டு பின்பு தம்

மைத் தேடி வந்த நண்பர்களால் விடுவிக்கப்படும் வரையில் அவர் தத்தளித்துக் கொண்டிருக்கும்படி நேரிட்டது.

மாரிகாலத்தில் அவர்கள் தங்கியவிடத்தில் உணவுப் பண்டங்கள் குறைந்து போனதனுல் வேற்றிடத்திலிருந்து அவற்றைத் தருவித்துக்கொள்ள வேண்டிய ஆவசியகம் ஏற்பட, அத்தொழிலைத் தானே மேற்கொள்வதாக ஜார்ஜ் பாக் கூறி நான்குமாத காலத்துக்குள் 1,000 மைல் தூரம் சென்று மீண்டு வந்து அதைச் செய்து முடித்தான். வசந்தகாலம் நெருங்கினவுடன் பிராங்கிளினும் அவருடைய நண்பர்களும் காப்பர்மைன் நதியின்முகத்துவாரம் வரையிலும்சென்று அப்பிராந்தங்களில் அதற்குமுன் ஒருவரும் கண்டு பிடிக்காத பல விடங்களைக் கண்டு பிடித்துப் பின்பு குளிர் மிகுதியும் உண்டானதால் திரும்பினர். திரும்புகாலில் பழகிய மார்க்கத்தைவிட்டு வேறொரு புதிய மார்க்கமாக என்டர்ப்ரைஸ் கோட்டைக்குவர, வழியிலே ஒரு நதி கண்டு பிடிக்கப்பட்டது. அதனைத் தம்மோடு கூடவந்தவரான ஹூட்டின் பெயரால் பிராங்கிளின் வழங்கினுர்.

அடுத்து வந்த சில மாதங்களில் அவர்கள் பசிப்பிணியாலும் குளிர்ப்பிணியாலும் நேரக்கூடிய சாவோடு போரிடும் நிலைமைக்கு வந்துவிட்டனர். அவ்வமயம் அவர்கள் நடந்துகொண்ட விதத்தைப்பற்றி விரித்துக் கூறுவதென்றல் அது சாமானியமான காரியமல்ல. அநேக நாட்கள் வரையில் அவர்கள் ஒருவிதமான காட்டுச் செடியின் தழைகளைத் தின்று ஜீவிக்கும்படியாயிற்று. ஒவ்வொரு சமயங்களில் அவர்கள் உணவின்றிப் பட்டினியாகவுமிருந்தனர். சிலசமயங்களிற் பசிப்பிணி தாளாமல் பழஞ் செருப்புக்களையும் ஊறவைத்துத் தின்னும் துர்ப்பாக்கியம் நேரிட்டது.

இப்படிப் பலவீனரான வீரர்களை, காற்றும் துரும்புகளைப் போலப் பலபக்கங்களிற் சிதறவடித்தது.பின்பு பிராங்கிளினுற் பின் தொடரப்பட்டு ஜார்ஜ் பாக் நாட்டினுட் சென்று ஆகாராதிகளை மிக கஷ்டப்பட்டுச் சேகரித்துக் கொண்டு திரும்பி வருவதற்குள்,டாக்டர் ரிச்சர்ட்ஸன்னையும் ஜான்ஹெப்பர்ன் என்ற வயோதிக மாலுமியையுந் தவிர மற்றவர்களனைவரும் உயிர் துறந்தனர். இவ்வாறு பிராங்கிளின் பட்ட கஷ்டங்களுக்கு எல்லையில்லை.

பிராங்கிளின் இங்கிலாந்துக்குத் திரும்பி வந்தபோது, தாம் நாட்டிலில்லாத சமயத்திலேயே கமாண்டெர் என்ற பதவிக்கு உயர்த்தப்பட்டிருந்ததைக் கண்டார். அதன்பின் உடனே இவருக்குக் காப்டின் பதவி கொடுக்கப்பட்டது. இவற்றையன்றி வேறு விதங்களிலும் அவர் கௌரவிக்கப்பட்டார். ராயல் சொஸைடியில் அங்கத்தினராகும் பெருமையும் அவருக்குக் கிட்டியது.

1823-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 10-ம் தேதியன்று அவர் எலினர் ஆன்போர்டன் என்ற பெண்மணியைமணந்து கொண்டார். ஆர்டிக் மகாசமுத்திரத்தில் அவர் கண்டுபிடித்த சில தீவுகள் அப்பெண்மணியின் பெயராலேயே இன்றளவும் வழங்கப்படுகின்றன. மணத்தின்போது ஆல்போர்டன் மனப்பூர்வமாக ஒப்புக்கொண்ட விஷயமொன்றுண்டு.மண வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்குங்காலத்தில் பிராங்கிளினுக்கு அரசாங்கத்தார் ஏதேனும் அதிகாரப் பதவி கொடுத்து யாத்திரைக் கனுப்பினுல்அதற்குத்தான் எவ்விதத்திலும் ஆக்ஷேபிப்பதில்லை என்று அவள் கூறியிருந்தாள். இதனுல் பிராங்கிளினுக்குத் தம் கடமையில் எவ்வளவு கருத்திருந்தது என்பதும், அவர் மனைவியும் அவருக்கு உத்தமத் துணைவியாக

இருந்தனள் என்பதும் தெளிவுபெற விளங்கும். விரைவிலே இச்சொல்லைப் பரீக்ஷிப்பதுபோல் பிராங்கிளினுக்குக் கடமை தரப்பட்டது. குடும்ப வியவகாரங்கள்பின்னால் துன்பகரமாக முடியும் என்று தெரிந்திருந்தும் தம் வாழ்க்கைத் துணைவி நோயுற்று வருந்திக்கொண்டிருக்கையில் பிராங்கிளின் கடமையை மேற்கொண்டு செல்லும்படியாயிற்று. 1825-ம் வருஷத்தில் ஜார்ஜ் பாக்கும் டாக்டர் ரிச்சர்ட்ஸனும் தொடர, பிராங்கிளின் இங்கிலாந்தை விட்டுச்சென்றார். மறுபடியும் தம் மனைவியைப் பார்ப்போமென்ற நிச்சயம் நம் நாவிக வீரருக்கில்லை. உத்தரத்ருவ ப்ரதேசங்களை யடைந்தபோதன்றி நாட்டவேண்டாம் என்று கூறி அவள் கொடுத்த ஒரு பட்டுக்கொடியை அவர் பெற்றுக்கொண்டு விடைபெற்றுப் போனார். வெகு சீக்கிரத்திலேயே அவள் காலகதியாயினள் என்ற செய்தி அவர் செவிக்கெட்டியது. அதற்காக அவர் வருந்தினரேனும் கடமையே பெரிதாக அவருக்குத் தோற்றியதாதலின் தம் மனத்தை ஒருவாறு தேற்றிக் கொண்டு அதிலேயே முனைந்து வேலை செய்யலானார்.

முதலில் சீதோஷ்ண நிலைமை சரியாக இருந்ததனால் அவர் நெடுகச் சென்று மக்கென்ஸி நதிப் பிராந்தியத்தைப் பரிசீலனை செய்து பின்பு பல புதிய குடாக்கடல்களையும் முனைகளையும் இன்னும் பல விஷயங்களையும் கண்டு பிடித்தார். இவரோடு வந்த டாக்டர் ரிச்சர்ட்ஸன் இவர் கண்டு பிடித்த சிலவற்றை இவர் பெயரால் வழங்கினார். இந்தப் பிரயாணத்திலும் கொசுக்களாலும் பிறவற்றாலும் உபத்திரவமடைந்தும், எஸ்கிமோக்கள் இந்தியர் முதலானவரால் பல சமயங்களில் தாக்கப்பட்டும், கொண்ட காரியத்தில் வெற்றி பெற்றவராகி, 1829-ம் வருஷம் ஏப்ரல் மாதம்

பிராங்கிளின் இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்றார். இந்தத் தடவை அவருடைய அருஞ் செயல்களை மெச்சி அவருக்கு அரசாங்கத்தார் 'ஸர்' என்ற பட்டம் அளித்தனர். இதற்குச் சில மாதங்களுக்குப் பின் அவர் ஜேன் கிரிப்பின் என்ற சிறந்த பெண்மணியை இரண்டாந்தாரமாகக் கொண்டார்.

இதற்குப் பிறகு சில காலம் பிராங்கிளின் 'ரெயின் போ' (வானவில்) என்ற கப்பலின் தலைவராயிருந்து மத்திய தரைக் கடலில் உத்தியோகம் செய்திருந்தார். 1836-ம் வருஷம் முதல் 1843-ம் வருஷம் வரையில் டாஸ்மேனியா என்ற தீவில் அவர் லெப்டனென்டு கவர்னர் பதவியை வகித்திருந்தார். இவ்வுத்தியோகத்தை ஏற்றுக் கொள்ளுங் காலத்திலேயே தமக்கியல்பான திறமைக்குரிய தொழில் வேறேதேனும் கிடைப்பின் அதனை ஏற்றுக்கொள்ளும் பொருட்டுக் கவர்னர் உத்தியோகத்தை 'ராஜீநாமா'ச் செய்து விடுவதற்கு அனுமதிக்கவேண்டுமென்ற நிபந்தனையை அவர் அதிகாரிகளிடத்தில் ஏற்படுத்திக் கொண்டிருந்தார்.

1845-ம் வருஷத்தில் ஏற்கெனவே பிராங்கிளினால் கண்டுபிடிக்கப்பட்டிருந்த வடமேற்கு மார்க்கத்தை முற்றிலும் கண்டு பிடித்துப் பூர்த்தி செய்விப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசாங்கத்தார் திரும்பவும் செய்யலானார்கள். முற்பழக்கத்தாலும் திறமையாலும் இதனை மேற்கொள்ளத் தக்கவர் பிராங்கிளினைத் தவிர வேறு எவரும் இல்லாமற் போயினும், இவர் முதுமைப் பருவ மடைந்தவராதலால் அரசாங்கத்தார் அவரினும் இளையோரைத் தேட முயன்றனர். இதனை அவர் பலமாக ஆக்ஷேபிக்க, அதிகாரிகள் அவரை நேரிற் கண்டு சம்பாஷித்துப் பின்பு அவரையே இப்புது யாத்திரைக்கும் தலைவராக நியமிக்க ஒப்புக் கொண்டனர். ஆகவே அவ்

வருஷம் மே மாதம் 19-ம் தேதியன்று 'இரிபஸ்', 'டெர்ரர்' என்ற இரண்டு கப்பல்களோடும் 134 மனிதர்களோடும் மூன்று வருஷங்களுக்குப் போதுமான உணவுப் பொருள்களோடும் பிறவற்றோடும் புறப்பட்டனர்.

விரைவில் கப்பல் கிரீன்லண்டை அடைந்தன. சில நாட்களான பின்பு அதாவது ஜூலை மாதம் 26-ம் தேதிக்குச் சரியாக, இக்கப்பல்களை வேறு சில ஐரோப்பியர்கள் கண்டனராம். அதன் பின் என்ன நேர்ந்ததென்பதை ஈசுவரனே யறிவார். நாட்கள் சென்றன; மாதங்கள் கழிந்தன; வருஷங்களாயின. பிராங்கிளினும் அவருடைய மாலுமிகளும் எக்கதியடைந்தன ரென்பதைப் பற்றிய விஷயம் ஏதும் தெரியவில்லை. அரசாங்கத்தாரும் ஆங்கில நன்மக்களும் தைரியம் இழந்து துன்புற்றார்கள்.

பின்பு 1847-ம் வருஷத்தில் ஒன்றும், 1848-ம் வருஷத்தில் மூன்றும் ஆக, நான்கு கப்பற்படைகள் காணாதவரைத் தேடச் சென்றன. கண்டுபிடிப்பவருக்கு அரசாங்கத்தார் 20,000 பவுன்களும், லேடி பிராங்கிளின் 3,000 பவுன்களும் பரிசளிப்பதாக வாக்களித்திருந்தனர்.

இறுதியில் பதினொரு வருஷங்களுக்குப் பின்பு காப்டென் மக்களின் டாக் என்பவர் பிராங்கிளினுடைய லெப்டினென்டுகளில் ஒருவரான கிராஹம் கோர் என்பவரால் எழுதப்பட்ட கடைசிக் கடிதமொன்றைக் கண்டெடுத்தார். அதில் அவர், கிங்வில்லியம் லாண்டுக்கும் விக்டோரியா லாண்டுக்கும் இடையேயுள்ள ஜலசந்தியின் மூலமாக வந்து வட அமெரிக்காவின் கரையைத் தாம் கண்டதான செய்தியைக் குறிப்பிட்டிருந்தார். எரிபஸ் என்ற கப்பலின் தளத்தில் 1847-ம் வருஷம் ஜூன் மாதம் 11-ம் தேதியன்று

காப்டின் ஸர் ஜான் பிராங்கிளின் உயிர் துறந்தார் என்ற விஷயமும் ஆராய்ச்சியா லேற்பட்டது. கிராஹம் கோரினுல் குறிக்கப்பட்ட செய்தியானது நம் நாவிக வீரரின் அந்திய காலத்தில் அவருக்குப் பெருமகிழ்ச்சி தந்திருக்க வேண்டும். இவ்வாருகத் தாம் மேற்கொண்ட காரியத்தைப் பூர்த்தி செய்து இறுதியில் அதிலேயே பூதவுடம்பை நீத்த பிராங்கி ளின், புகழுடம்பைப் பெற்று உலகினர் உள்ளத்தில் என் றும் உலவுபவராயினர்.

---


# VII

## காப்டென் ராபர்ட்பால்கன் ஸ்காட்.

ராபர்ட் பால்கன் ஸ்காட் (Robert Falcon Scott) இங்கிலாந்து தேசத்தில் டிவான்ஷைரில் டிவான்போர்ட் என்றவிடத்தில் 1868-ம் வருஷம் ஜூன் மாதம் ஆரும் தேதியன்று பிறந்தார். அவருடைய குடும்பத்தார் ஆங்கில கப்பற்படையோடுபலவிதங்களிலும்சம்பந்தப்பட்டிருந்தனர். சிறுபிள்ளையாக இருக்கும்போது ஸ்காட், தேகதிடமற்றவரா யிருந்தபோதிலும் கடற்படையிற் சேரவேண்டும் என்ற பேரவா அக்காலமுதலேஅவர்மனத்தில்வேரூன்றியிருந்தது.

அவர் முதன் முதலில் பேர்ஹாம் (Fareham) நாவிக வித்தியாசாலையில் தம் தொழிலைக் கற்றுக்கொண்டு பின்பு பிரிட்டானிய என்ற கப்பலில்தாம் கற்றவிஷயங்களை அப்பிய சித்துணர்ந்தார். இரண்டு வருஷகாலம் இவ்வாறு பழகிய பிறகு முறையே போயடீசியா என்ற கப்பலிலும் வேறு இரண்டு கப்பல்களிலும் மாலுமியாக இருந்து உரிய பரீக்ஷை

களிலேமுதற்றரமாகத்தேறிப் பின்பு 'லெப்டனென்டு' என்று பட்டம் வாங்கினர். கப்பற்படையில் தம்முடைய முன்னேற்




தக்ஷிண த்ருவ யாத்திரை

ஸ்காட்டினுடைய யாத்ரா மார்க்கம். 1902-4; 1912.
ஷாக்கில்டனுடைய யாத்ரா மார்க்கம். 1907-1909.
ஆமுண்ட்ஸனுடைய யாத்ரா மார்க்கம். 1911 - 1912.

றம் முழுவதும் தம் சொந்த உழைப்பினலேயே ஆகவேண்டு மென்பதையும் பிறருடைய சிபார்சுகள் தமக்குக் கிடைக்கா வென்பதையும் ஸ்காட் நன்கு யறிவாராதலால் அவர் மிகவும்

கஷ்டப்பட்டு வேலை செய்து 'டார்ப்பிடோ,' பீரங்கி ஆகிய இவற்றின் சம்பந்தமானகாரியங்களை ஊன்றிக்கற்றார். அவர் 1896-ம் வருஷத்தில் 'எம்பிரஸ் ஆப் இந்தியா' என்றகப்பலில் முதலிலும், மேஜெஸ்டிக், என்ற கப்பலில்பின்புமாக டார்ப்பிடோ சம்பந்தமான விவகாரங்களைக் கவனிக்கும் லெப்டெனென்டாக நியமிக்கப்பட்டார்.

தமது முப்பத்திரண்டாம்பிராயத்திலே ஸ்காட் 'கமாண்டெர்' என்ற உத்தியோக பதவியை யடைய,அப்போதுஇவர் மனதிற்கு உகந்தவிதமான சந்தர்ப்பமொன்று ஏற்பட்டது. 1899-ம் வருஷம் கோடைகாலத்தில் ஒருநாள் லண்டனில் ஒரு வீதியில் இவர் ஏதோ காரியமாக நடந்து போய்க் கொண்டிருக்கையில், ராயல் ஜியோக்ராபிகல் ஸொஸைடியின் (Royal Geographical Society-பூவிவரண சாஸ்திர சங்கத்தின்)தலைவரான ஸர் கிளெமன்ட்ஸ் மார்க்ஹாம் என்பவரைக் காண நேரிட்டது. இவர்களிருவரும் ஆப்த நண்பர்களாகையினால் சிறிதுநேரம் அளவளாவலானார்கள். அவர்களுடைய சம்பாஷணையில் அப்போது தென் துருவப்பிரதேசங்களுக்கு ஒரு பிரயாணம் ஏற்பாடு செய்யப்பட்டதென்று ஸ்காட்டுக்குத் தெரிந்தது. இதுவரையில் அரசாங்கக் கப்பற்படையில் தாம் விருத்தியடைய வேண்டுமென்பதே இவருடைய எண்ணமாக இருந்தது. ஆனால் இவ்விஷயத்தை அறிந்தவுடனே இவருடைய நாட்டமுற்றும் மாறியது. தென் துருவப் பிரதேசங்களுக்குச் சென்று பூதத்துவ முதலான சாஸ்திர சம்பந்தமான ஆராய்ச்சிகளைச் செய்து வருவதென்பது சாமானிய காரியமல்ல. அப்பிரதேசங்களிற் செல்பவருக்குப் பிராணஹானி நேரக்கூடிய விதமாகப் பல ஆபத்துக்களுண்டு. திடீர் திடீரென்று பனி மழைகளும்,

உடலை விறைக்கச் செய்யும் குளிரும் உண்டாகும். கப்பல்கள் சென்று கொண்டேயிருக்கையில், கடலில் மிதந்து வரும் மிகப் பெரிய உறைநீர்த்திரள்கள் அவற்றின்மீது மோதிச் சுக்கல் சுக்கலாக அவற்றை உடைத்துவிடும். சிலசமயங்களில் கப்பல்களைச் சுற்றியுள்ள கடல்நீர், பனிக்கட்டியாக உறைந்து போய் மாதக்கணக்கில் கப்பல்களை வெளிச் செல்ல வொட்டாது தடுத்துவிடும். அதுவும் தென் துருவப் பிரதேசத்தில் பனியுறைந்த ஒரு பெரிய கண்ட மிருப்பதனால், சில சமயம் நிலத்திற்கும் உறைந்துபோன கடல்பாகங்களுக்கும் வித்தியாசம் தெரியாமலிருந்து வெயிற்காலம் வந்தவுடன் பனிப்பிரதேசம் உருகிவிடுகையில் ஏமாற நேரும். மாலுமிகள் தம்மோடு கொண்டு செல்லும் உணவுப் பொருள்கள் குறைந்துபோனால் திரும்பவும் அவற்றைச் சேர்த்துக்கொள்ளச் சௌகரியங்கள் எவையும் இல்லை. இவைகளையெல்லாம் லக்ஷியம் செய்யாமல் துணிகரத்தோடும் சாகசத்தோடும் செல்வோமென்று புறப்பட்டவர்கள் உயிரோடு திரும்பிவருவரென்கிற நிச்சயமில்லை. இப்படிப்பட்ட கஷ்டங்கள் விளங்கும் பிரயாணத்தில் தலைமை வகிக்கக்கூடிய ஒருவரை ராயல் ஜியோக்ராபிகல் சொஸைடியார் தேடிக் கொண்டிருந்தனர். இந்த விஷயம் ஸ்காட்டுக்குத் தெரிந்தவுடன் அவர் ஊக்கம் மிகுந்தவராயும், பின்வரும்கீர்த்தியைப்பற்றித்தீர்க்கமாய்ஆலோசித்தவராயும், தம் நண்பரான ஸர் கிளமென்ட்ஸ் மார்க்ஹாமினால் தைரியப் படுத்தப்பட்டவராயும் அவ்யாத்ரிகக் கூட்டத்தாருடைய தலைவராகத் தாமேசெல்வதாக விஞ்ஞாபித்துக்கொள்ள, 1900-ம் வருஷத்தில் ஜூன் மாதம் 9-ம் தேதியன்று அப்பதவியை அடைந்தார்.

கமாண்டெர் ஸ்காட்டினுடைய முதல் யாத்திரை உலக சரித்திரத்தில் ஒருமுக்கியமானவிஷயம். அவருடையகருத்து

தாம் சாகசமாகத் தென்துருவத்தையே கண்டுபிடிக்கவேண்டு மென்பதல்ல. சாஸ்திர சம்பந்தமாக அப்பிராந்தத்தில் கூடிய வரையில் ஆராய்ச்சிசெய்து மாந்தர்கள் கொண்டுள்ள தப் பபிப்பிராயங்களைப் போக்கவேண்டுமென்பதே அவருடைய நோக்கம். அவருடையயாத்திரை, 1901-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் தொடங்கி 1904-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் முடிவுற்றது. அவ்யாத்திரையின் பயனுகை, ஐரோப்பிய அறி ஞர் பலரும் தம் தம் தப்பபிப்பிராயங்களனைத்தையும் மாற் றிக் கொள்ளும்படியாகவும், சந்தேக நிவர்த்தி செய்து கொள்ளும்படியாகவும், அப்பிராந்தங்களைப் பற்றிய தம் ஞானத்தை விர்த்தி செய்து கொள்ளும்படியாகவும் நேரிட்ட தனுல், அனைவரும் ஸ்காட்டுக்கு மிகவும் கடமைப் பட்டவர் களானுர்கள்.

இவ்யாத்திரையில் அனைவரும் நினைத்தது போலவே ஸ்காட்டுக்கு எதிர்பாராத இரண்டு சம்பவங்கள் நேரிட்டன. 1903-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில், 'விக்டோரியா லாண்டு' (Victoria Land) என்ற நிலப்பிரதேசத்தில், ஒரு வரும் அதுவரையிற் புகாத உட்பாகத்தில் தம்மோடு துணை வர் பன்னிருவரை அழைத்துக்கொண்டு பரிசோதிக்கச் சென் ருர். உறைபனிப் படலங்களும் உன்னத மலைகளும் அதிக மாகவுள்ள அப்பிரதேசத்தில் சுமார் ஆயிரம் மைலுக்கு மேல் இவர்கள் பிரயாணஞ் செய்தார்கள். கடல் மட்டத்துக்கு 9000 அடிக்கு உயரமான இடத்தை இவர்கள் எட்டினர். பின்பு ஸ்காட் இருவரைமட்டும் தம்மோடழைத்துக்கொண்டு ஆங்கிருந்ததொரு மிக விசாலமான பனிப் படலத்தைக் கடந்து சென்றுவரப் புறப்பட்டார். இப்பிரயாணத்தில்தான் இம்மூவருக்கும் பிராணுபத்தான ஒரு சந்தர்ப்பம்நேரிட்டது.

பனிப்படலத்தைக் கடக்கும்போது, மிக்க சாக்கிரதையோடும் சென்ற இவர்கள் கண்ணுக்கும் புலப்படாமல் பனியால் மேலே மட்டும் மூடப்பெற்றதான பிளப்பொன்றில் ஸ்காட்டும் அவர் நண்பர்களிருவருள் ஒருவரான இவான்ஸூம் தவறி விழுந்து விடும்படி நேரிட்டது. தெய்வாதீனமாய் இவர்கள் தம்மோடு இழுத்துச் சென்ற 'ஸ்லெட்ஜ்' (Sledge) என்ற ஒரு வகையான பனிப்பிரதேச வண்டியோடு தங்களைப் பிணைத்துக்கொண்டிருந்ததனால் இவர்கள் அடியோடு அகாதமான பள்ளத்தில் வீழ்ந்து மரணமடையவில்லை. அவ்வண்டி அவ்வகாதமான பள்ளத்தில் துவாரத்தை அடைத்துக் கொண்டமையால் மூன்றாவது வீராகிய லாஷ்லி கீழே விழாமல் தப்பித்துக் கொள்ளவும் வண்டியோடு அனைவரும் அழியாது நிற்கவும் நேரிட்டது.

முன்னே தாமும், தம்பின்னே இவான்ஸூமாகத் தூக்கிலிட்டதுபோல் நிலமட்டத்திற்குப் பன்னிரண்டடி கீழே தொங்கிக்கொண்டு தத்தளித்திருக்கையில், மானுஷாதீதமான ஒரு பெருமுயற்சி செய்து ஸ்காட் கொஞ்சமளவு நீண்டிருந்த பனிக்கட்டியொன்றில் காலடி வைத்துக் கொள்வதில் சித்தி பெற்றார். அதன் பிறகு தாம் சாதாரண மானுமியாயிருந்த காலத்தில் கற்றிருந்த ஒரு உபாயத்தின் உதவியைக்கொண்டு தம்மைப் பிணைத்திருந்த கயிற்றைப் பிடித்துக் கொண்டு சாக்கிரதையோடு வெளியேறினார். பின்பு அவரும் லாஷ்லியுமாகச் சேர்ந்து இவான்ஸை வெளியேற்றினார்கள். விவரிக்க முடியாத அவ்வளவு பெரிய ஆபத்தாக இது இருந்ததனாலும், எதிர்பாராதபடி இது சம்பவித்ததனாலும், இவர்கள் இதிலிருந்து தப்பியவுடன் தம் செய்கையையே நம்பாமல் சற்று நேரம் திக்பிரமை யடைந்து நின்றார்கள்.

இதன் பின்னர் நேரிட்ட மற்ருெரு சம்பவமும் இவர்கள் எதிர்பாராததேதான். இவ்யாத்திரையில் ஸ்காட்டினுடைய நோக்கமென்னவென்பதை முன்னமேயே கூறினேம். ஆயினும் தம்முடைய நோக்கத்திற் பெரும்பான்மையும் முற்றுப் பெற்றபின், அவர் ஷாக்கில்டன், வில்ஸன் என்ற இருவரோடும் புறப்பட்டுத் தென் துருவத்தையுங் கண்டுபிடிக்கலாமே என்ற கருத்துடையவராய் அதனை நோக்கிச் சென்று தென் துருவத்திற்கு 463 மைல்களே தூரமுள்ள ஒரு இடத்தை யடைந்தார். இதற்கு முன் ஒருவரும் அவ்வளவு தூரம் சென்றதே இல்லை. 1909-ம் வருஷத்தில் ஷாக்கில்டன்தான் இதனையுங் கடந்து சென்ருர்; ஆனல் ஸ்காட்டே திரும்பவும் அதனையும் கடந்து தென் துருவத்தை யடைந்தார் என்ற விஷயங்கள் பின்னல் நமக்குப் புலப்படும்.

இனி, 1904-ம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் ஸ்காட் இங்கிலாந்தை யடைந்தார். தென் துருவப் பிரதேசங்களில் இவர் சாதித்து வந்ததைப் பற்றி வியந்து பேசாதவர் ஒருவருமிலர். ஆனலும் ஸ்காட் மிகவும் கூச்சமும் அடக்க வொடுக்கமும் மிகுந்த குணம் உடையவராகையால் தம் பிரதாபங்களைப் பற்றிப் பிறர் பேசுதலையும் புகழ்தலையும் விரும்பவில்லை. தம்மைப்பற்றி எவரேனும் புகழ்ந்தால் தம்மைக் காட்டிலும் தம் நண்பர்களே அதற்குரியரென எடுத்துக் காட்டுவார். ஆயினும் அரசாங்கத்தார் இவரைத் தப்பித்துக் கொள்ள விடவில்லை; உரிய விதத்திலேயே அவரைக்கௌரவித்து, 'காப்டென்' பதவியைத் தந்தனர். ஏழாவது எட்வர்ட் சக்கரவர்த்தியாரும் இவ்வீரருடைய நட்பை விரும்பி இவரை ஓர் விருந்துக்கு அழைத்தனர். காப்டென் ஸ்காட்டோ இக்கௌரவங்களை அளவுக்கு விஞ்சியதாகத் தம் இயற்கையான குணத்தினற் கருதலானர்.

இம்மட்டோடு அரசாங்கத்தார் நிறுத்தவில்லை. 'கமாண்டர் ஆப் தி விக்டோரியன் ஆர்டர்' (Commander of the Victorian Order) என்ற உயரிய பட்டத்தை ஸ்காட்டுக்கு அளித்தார்கள். ஜனங்களும் இவருடைய செயல்களைப்பற்றி நன்கு உணரலான பிறகு, அனைவரும் இவரையொத்த சிறந்த சமுத்திர யாத்ரிகரைக் காண்பதரிது என்று கொண்டாடினர். அதன்பின் எப்படிப்பட்ட சமுத்திர யாத்திரைகளை ஏற்பாடு செய்யினும், ஸ்காட்டினுடைய அபிப்பிராயத்தைக் கேளாமல் எவரும் எதுவும் செய்வதில்லை.

1908-ம் வருஷத்தில் காப்டென் ஸ்காட் சித்திர சிற்ப சாஸ்திரங்களில் கைதேர்ந்த மிஸ் காத்லீன் ப்ரூஸ் என்னும் பெண்மணியைமணம்புரிந்துகொண்டு இன்பகரமான இல்லற வாழ்க்கையிலமர்ந்தார். ஆயினும் எப்போதும் அவருடைய மனம் தென் துருவப் பிரதேசத்திற் பின்னும் பிரயாணம் செய்து பல அரிய விஷயங்களைக் கண்டு பிடிப்பதிலேயே நாட்டமுற்றிருந்தது. இன்பமாகத் தம் வாழ்க்கைத் துணைவியோடு பேசிக்கொண்டிருக்கும் நேரங்களிலும், அவர் ஆச்சரியகரமான தென் துருவப்பிரதேசங்களின் படங்களைத் தம்முன் வைத்துக் கொண்டு தாம் சென்று அரும் செயல்களைப் புரிந்த விஷயங்களைப் பற்றியும், இன்னும் யாத்திரை செய்வதற்குரிய பல விடங்களைப் பற்றியும், தம்மை மறந்து விளக்கிக் காட்டுவாராம்.

அவ் வருஷத்திலேயே காப்டென் ஸ்காட்டுக்கு உதவியாளராய்முன்புசென்றிருந்தவர்களில்திறமைவாய்ந்தவரான ஷாக்கில்டன், தென் துருவப் பிரதேசங்களுக்குச் சென்ற மற்றொருகடற்படையில் தலைமை வகித்துச் சென்றார். அப்பிரதேசத்தில், 'எரிபஸ்' என்ற எரிமலைக்கு அடுத்தாற்போல்

ஷாக்கில்டன் மழைக்காலத்துக்குத் தங்கினுரென்றும், அம் மலை மற்றையோர் நினைத்திருந்ததுபோல் பெருநிலப் பாகத்தில் இல்லையென்றும், ஒரு சிறிய தீவில் உள்ளதென்றும் பின்பு ஸ்காட் அறியலானுர். ஷாக்கில்டன் இந்தத்தரம் தென் துருவத்திற்குத் தொண்ணூற்றேழு மைலுக்குள்ளாக ஓரிடத்தையடைந்து பின்பு மேலும் செல்ல முடியாமல் திரும்ப வேண்டியவரானுர்.

இப்போது காப்டென்ஸ்காட் அரசாங்கக் கப்பற்படையில் இரண்டாவது படைத்தலைவருக்கு முக்கிய உதவியாளராக நியமிக்கப்பட்டார். இது, அப்படையில் மிக முக்கியமானதொரு பதவியாம். இப்பதவியை யடைந்தவர்கள் வெகு சீக்கிரமாகப் பின்னும் மேலான பதவிகளை யடைவது சகஜம். காப்டென் ஸ்காட் மேலதிகாரிகளாலும் அரசாங்கத்தாராலும் தேசத்தாராலும் மிகுதியும் நன்கு மதிக்கப்பட்டவர். எளிதிலே இவர் மிகுதியும் சிறப்புறுதற்கு எல்லா வழிகளுமிருந்தன. ஆயினும், இன்னமும் இவருடைய மனம் தென் துருவத்தையே நாடியிருந்தது. கனவிலும் நனவிலும் அவ்வெண்ணம் இவர் மனதை விட்டகலவில்லை.

இச்சமயத்தில் ஷாக்கில்டன் திரும்பிவரவே, அவரால் இன்னமும் தென் துருவம் கண்டுபிடிக்கப்படவில்லை என்று அறிந்தவுடன், காப்டென் ஸ்காட் எப்படியேனும் தாம் அதனைக் கண்டுபிடித்தே தீருவதென்று துணிந்தார். ஆகவே அவர் விரைவில் கப்பற்படை யதிகாரிகளைத் தம்மை உத்தியோகத்தினின்றும் விடுவிக்கவேண்டுமென விஞ்ஞாபித்துக் கொண்டு, யாத்திராயத்தனங்களில் முனைந்து அதற்காகும் பொருளைச் சேகரிக்க ஆரம்பித்தார். இவர் தம் இயற்கையான லஜ்ஜையினுல் மிகுதியும் சங்கடப்பட்டாராயினும்,

அந்த நாட்டினர் ஒவ்வொருவரும் தாமே இதனை மேற்கொண்டு வேண்டிய உதவிகளை யெல்லாம் புரிந்தனர். பிறகு 1910-ம் வருஷம், ஜூன் மாதம் முதல் தேதியன்று 'டெர்ரா நோவா' என்ற கப்பலில் புறப்பட்டுத் தென் கடலை நோக்கிச் செல்வாராயினர். இந்த யாத்திரைக்கு வேண்டிய சகல காரியங்களையும் அவரே கவனித்து மாலுமிகளைத் தேர்ந்தெடுத்திருந்தனராகலின் மேற்கொண்டு செல்லும் இக் காரியத்தில் ஜெயம் பெறுவதில் சந்தேகத்துக்கு இடமே இல்லாது போயிற்று.

1911-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் இக் கப்பற்படை தென்கடல் எல்லையை யடைந்தது. இச்சமயந்தான் இவ் யாத்ரிகர்களில் அறிஞர்களாயிருந்தவர்கள் இப்பிராந்தங்களின் சீதோஷ்ண நிலைமை, கடல் நீரோட்டம், பனிப்படலங்களின் தன்மை, தென் மகா சமுத்திரத்தில் வாழும் ஜீவ ஜந்துக்கள், தென் புலத்தின் இயற்கையமைப்பு முதலியவற்றைப் பற்றிய பல சாஸ்திரீய விஷயங்களையும் கண்டுபிடித்துத் தொகுத்தார்கள். இப்பிராந்தங்களில் புதைந்து கல்லாகப் போன பல அங்கக் கட்டுகளையும் நிலக்கரித் தொகுதியையும் ஆராய்ந்து பார்த்து இவ்வாறான விஷயங்களைக்கொண்டு அப் பெருநிலப் பரப்பானது ஆதிகாலத்தில் பயிர் பச்சைகளாலும் விசித்திரமான உயிர் வருக்கங்களாலும் நிறைந்திருந்தது என்று ஸ்காட்டும் அவருடைய தோழர்களும் கண்டுபிடித்தார்கள். இவ்வாறு இவ்விஷயத்தை முதன் முதலிற் கண்டு பிடித்தவர்கள் இவர்களே.

இந்தத் தடவையும் ஸ்காட் சில கஷ்டங்களை யனுபவிக்க நேரிட்டது. அவருடைய திறமையுள்ள நாய்க்கூட்டமொன்று ஒரு படுகுழியில் விழுந்துவிட்டது. அவரே மிகவும் கஷ்டப்

பட்டு அதிர்ஷ்டவசமாகத் தப்பித்துக்கொள்ள நேரிட்டது. அந்நாய்களைத் தப்புவிப்பதற்குப் பல மணி நேரம் சென்றது. மற்றொரு சமயம் நள்ளிரவில் அவர்கள் கூடாரமடித்துத் தங்கியிருந்த பனிப்படலம் திடீரென உடைந்து சிதறிப் போகவே, பலவகைப்பட்ட சாமான்களும் நான்கு குதிரைகளும் கடலில் மிதக்கலாயின. மனிதர்களும் மிகக் கஷ்டப் பட்டுத் தப்பித்துக்கொண்டு சாமான்களை மீட்டுக் கொண்டனர்; எனினும் மூன்று குதிரைகள் நீரில் மூழ்கி இறந்துபோயின. 1911-ம் வருஷம் கொடிய குளிரோடு தோன்றிய மாரி காலத்தில் அவர்கள் மிகுதியும் துன்புற்றார்கள்.

பின்பு செப்டம்பர் மாதத்தில் தென் துருவத்திற்குச் சென்று மீள்வதற்கு வேண்டிய சகல பிரயத்தனங்களும் முடிக்கப்பட்டன. 1912-ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதி யன்று காப்டென் ஸ்காட்டும் அவருடைய தோழர்களில் எண்மரும் தென் துருவத்திற்கு 170-மைல் தூரம் வரையிலும் சென்றனர். மூன்றாம் தேதி யன்று கடல் மட்டத்திற்குச் சுமார் 10,000 அடி உயரம் வரையில் போனவுடன், கடைசியாகத் துருவத்தை அடைவதற்குரிய முயற்சியைத் தொடங்கினர். ஒரு மாதத்திய உணவுப் பொருள்களோடு ஸ்காட்டும் அவருடைய நண்பர்களில் நால்வருமாகச் செல்வதென்று ஏற்பாடாயிற்று. அச்சமயம் தங்கள் கருத்து முற்றுப் பெறுவதற்கு ஒரு தடையு மிராதென்று அவர்கள் உறுதியாக நம்பும்படி யிருந்தது.

எவ்வளவோ கஷ்டப்பட்ட பின்பு அவர்கள் தென் துருவத்தை 1912-ம் வருஷம் ஜனவரி மாதம் 18-ம் தேதி யன்று அடைந்தனர். ஆயினும், பாபம்! அங்குத் தமக்கு முன்னரே நார்வே தேசத்து நாவிக வீரரான ரோவல்டு

ஆமுண்ட்ஸென் என்பவர் சென்றிருந்து நார்வீஜியக் கொடியை நாட்டிவிட்டுப் போயிருந்ததை ஸ்காட் கண்டார். ரோவல்டு ஆமுண்ட்ஸென், முதன் முதலாக வட துருவத்தைக் கண்டு பிடிக்கும் எண்ணத்தோடு சென்றவர் அவ்விடத்தைப் பியரி என்பவர் முன்னமே கண்டுபிடித்தாயிற்று என்பதை யறிந்து, பின்பு தம் பிரயாணத்தைத் தெற்கே திருப்பினார். அவர்வரும் சமயத்தில் சீதோஷ்ண நிலைமைசௌகரியமாயிருந்ததனால், கஷ்ட மில்லாமலே அவர் தென்துருவத்தை ஸ்காட் அடைவதற்கு ஐந்து வாரங்கள் முன்னதாகவே அடைந்து திரும்பிப் போய் விட்டார். தம் சுய கீர்த்தியைக் காட்டிலும் தம் தாய் நாட்டின் கீர்த்தியே பெரிதாதலால், அதனைத் தாம் நேரச் செய்யவில்லையே என்ற துயரம் மிகுதியும் ஸ்காட்டுக்கு உண்டாயிற்றேனும் தம்மாற் செய்யப்பட்ட இதர அரிய காரியங்களால் பிரிட்டனுக்கு உண்டான சிறப்பை நினைத்து மகிழ்ச்சி யடைந்தார்.

இதன் பின் திரும்பி வரும்போது சகிக்கவொண்ணாத குளிர்க்கொடுமையையும் எதிர்பாராத விபத்துக்களையும் இவ்வைந்து வீரரும் எதிர்த்து நிற்கும்படியாயிற்று. இவர்கள் ஐவருள்ளும் மிக்க பலசாலியான எட்கார் இவான்ஸ், கால் சோர்ந்து வீழ்ந்து உயிர் துறந்தார். அடுத்தபடியாக, காப்டென் ஓட்ஸ் என்பவர், தாம் இனிப் பிழைப்பதரிது என்பதை நன்குணர்ந்து மிகுந்திருந்த தம் நண்பர்களிருவருடைய மனத்தையும் புண்படுத்த மனமற்றவராய் வெளிச் சென்று வருவதாகக் கூறிக் கொடிய பனிப் பெயலில் கூடாரத்தை விட்டுப்போய்த் திரும்பி வரவே இல்லை. ஆனால் பின்னும் தைரியத்தை இழவாதவராய் மிகுந்திருந்த மூவரும் மேலே செல்ல முயன்று உணவுப் பொருள்-

களும் பிறவும் சேகரித்து வைத்திருந்த தம் பெரிய விடுதிக்குப் பதினொரு மைலுக்குள்ளாக வந்து சேர்ந்தனராயினும் பின்னும் நடக்கமுடியாமல் ஒருசிறு கூடார மடித்துத் தங்கினர். தங்கியும் பிரயோஜன மேது மில்லாமற்போயிற்று. ஸ்காட் தம்முடைய நண்பர்களிருவரும், உயிரிழந்து கொண்டிருப்பதை மனவெதுப்போடு பார்த்துக்கொண்டே தம் இறுதியும் நெருங்குவதை உணர்ந்து ஒரு கடிதத்தில் தாம் பட்ட கஷ்டங்களையும் தம் தோழர்களின் வீரத்தையும் பற்றி மனமுருக்கும் விதமாய் எழுதிவைத்து விட்டுஉயிர் துறந்தார். இங்ஙனமாகத் தென் துருவத்தைக் கண்டு வந்த சுத்த வீரர் ஐவரும் காலமாயினர்.

பின்பு 1912-ம் வருஷம் நவம்பர் மாதம் 12-ம் தேதி யன்று இவர்களைத்தேடிச்சென்ற கூட்டத்தார்விறைத்திருந்த இவர்களுடைய சவங்களையும் ஸ்காட்டினுடைய சிறந்த நிருபத்தையும் கண்டெடுத்து உலகினர்க்கு அவருடைய பெருமையைப் புலப்படுத்தினர்.

# VIII

# ஸர் எர்னஸ்ட் ஹென்றி ஷாக்கில்டன்.

எர்னஸ்ட் ஹென்றி ஷாக்கில்டன் 1874-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 15-ம் தேதியன்று கில்கீ என்ற இடத்தில்ஒரு மருத்துவ சாஸ்திரியின் மகனாய்ப் பிறந்தார். துல்விச் கலாசாலையில் தமது கல்வியைப் பூர்த்தி செய்து கொண்டு தமது பதினாறும் வயதில் வியாபாரத் தொழிலில் புகுந்தார். பின்பு அரசாங்க நாவிகப் படையின் ஒரு பாகத்தில் சேர்ந்து கடினமான வேலைகளிலெல்லாம் திறமையுடன் நடந்துகொண்டு லெப்டெனென்டு பதவியைப் பெற்றார். அதி பாலியத்திலேயே தக்ஷிணத்துருவப்பிரதேசங்களுக்குச்செல்ல வேண்டுமென்று ஒருபேரவாஅவர்மனத்திற்குடிகொண்டது. 1902-ம் வருஷத்தில் காப்டென் ஸ்காட்டோடு கூட மூன்றாவது லெப்டெனென்டாக அவர் தக்ஷணத் துருவப்பிரதேசத்துக்குச் சென்று கீர்த்தி பெற்றார். ஆயினும் அவர் ஒருவிதமான சொறிகரப்பான் வியாதிக்குட்பட்டு அரிதிற்பிழைத்து அடுத்த வருஷ முதலில் தம்மனோரதம் நிறைவேறப்பெறாதவராய் வருத்தத்தோடு 'மார்னிங்கு' என்ற கப்பலில் சுதேசமடைந்தார்.

1904-ம் வருஷத்தில் அவர் மணம் புரிந்து கொண்டு மூன்று வருஷகாலம் வரையில் 'ராயல் ஸ்காட்டிஷ் ஜியோக்ராபிகல் ஸொஸைடி'க்குக்கார்யதரிசியாகவும்பொக்கிஷதாராகவும் பதவி வகித்தனர். பின்பு 1906-ம் வருஷத்தில் நடந்த

பார்லிமென்ட் மகா சபையில் டண்டீ என்ற இடத்துக்காக அங்கத்தினராவதற்கு முயன்றார். அம்முயற்சி கைகூடியிருந்தால், அன்டார்க்டிக் பிரதேசத்தில் அரிய விஷயங்களிற் பல உலகத்தார்க்குத் தெரியாமலே போயிருக்கும். தெய்வ யத்தனத்தால் அவர் அம்முயற்சியில் வெற்றி பெறவில்லை.

இதற்குள் ஷாக்கில்டனுக்குத் திரும்பவும் தக்ஷிணத் துருவப் பிரதேசத்துக்குச் செல்வதே சரி என்ற துணிவு உண்டாயிற்று. அவருடைய தேகமும் சுகமடைந்து திடம் பெற்றிருந்தது. முன் யாத்திரையில் தம் மனோரதம் நிறைவேறாமற்போனது அவருடைய ஊக்கத்தை மிகுதிப் படுத்துவதற்கே பயன்பட்டது. ஆகவே சுதேசத்திலேயே தாம் விருத்திக்கு வந்து சுகமாகக் காலங் கழிக்கத்தக்க பல வழிகளிருந்தும் அவற்றிற் பிரியமில்லாதவராய் ஷாக்கில்டன் கொடிய துருவப்பிரதேசத்தின் ஆராய்ச்சியிலேயே நாட்டமுடையவரானார்.

இவ்யாத்திரைக்கு வேண்டிய பலவிஷயங்களும் ஆயத்தம் செய்யப்பட்டன. 'நிம்ராட்' என்ற கப்பல் இப்பெருங் காரியத்துக்குத் தக்கதாகத் தேர்ந்தெடுத்து வாங்கப்பட்டது. எல்லா விஷயங்களிலும் குறைவின்றிக் கவனஞ் செலுத்தி முடித்த பின்பு, ஷாக்கில்டன் சிறந்த துணைவர்களுடன் 1907-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் இங்கிலாந்தை விட்டுப் புறப்பட்டுப் போனார். துருவப் பிரதேசங்களிற் பரிசீலனை செய்து பூகோள சாஸ்திர சம்பந்தமான உண்மைகளிற் பலவற்றைக் கண்டுபிடிக்க வேண்டுமென்றும், அதன் பின் கூடுமானால் தக்ஷிண துருவத்துக்கே செல்வதென்றும் இவ் யாத்திரையை ஷாக்கில்டன் மேற்கொண்டார். இந்த யாத்திரையில் இரண்டு அம்சங்கள் புதுமையாயிருந்தன. பனிப் பிரதேசங்களில் எஸ்கிமோ நாய்களை விட மஞ்சூரியா

தேசத்துக் குதிரைகள் அதிகப் பயன்படு மென்று கருதி அவற்றைக் கொண்டு சென்றிருந்தனர் யாத்ரிகர்; இஃதன்றி, உறைபனிப் படலத்தின்மீது செலுத்திச் செல்வதற்காக ஒரு மோட்டார் வண்டியையும் கொண்டுபோயிருந்தனர். மஞ்சூரி-யக் குதிரைகள் பயன்படாமற் போயின. மோட்டார் வண்-டியோ கடினமாக உறைந்த பனிப் படலத்தின்மீது சென்ற-தாயினும், மிருதுவான பனி மீது செல்லப் பயன்படவில்லை.

1908-ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதி யன்று 'நிம்ராட்' நியூ ஜீலண்டு தீவுகளைக் கடந்து பனிப் படலங்களி னிடையே புகுந்து ராஸ் கடலை யடைந்தது. இரண்டு பெரிய பனித்திரள்கள் கப்பலின் மீது மோதி அதனை யுடைத்து விடத் தயாராயிருந்தன. ஷாக்கில்டன் சமயமறிந்து கப்பலைப் பின் செலுத்திச் சென்று அனைவரையும் அழிவினின்றும் காப்பாற்றினர். கொஞ்சம் தாமதித்திருந்தால் அத்தொகுதி-களிரண்டிற்கும் நடுவில் அகப்பட்டுக் கொண்டு கப்பல் நசுங் கிப் போயிருக்கும்: தப்பித்தது தெய்வச் செயலாலே யன்றி வேறு எதனாலும் அன்று.

சீதோஷ்ண ஸ்திதியின் கொடுமையால் ஷாக்கில்ட-னுடைய ஏற்பாடுகள் நினைத்தபடி முற்றுப் பெருமல் தவறிப் போயின. தாம் நினைத்திருந்தபடி கிங் எட்வர்ட் தி ஸெவன்த் லாண்டில் மாரிகாலத்தைக் கழிக்கச் செல்லவொட்டாதபடி பனிப்படலம் தடுத்துவிட்டபடியால் மக்மர்டோ ஸவுண்டு என்ற விடத்திற்குச் செல்லும்படியாக நேரிட்டது. இவ் விடத்தில், சிறந்த மாலுமிகளில் ஒருவர் ஒரு அசம்பவத்-தினால் தம் கண்களிலொன்றை இழந்து,யாத்திரைக்கூட்டத்-தார்க்குப் பயனற்றவரானர். ஷாக்கில்டன் கொணர்ந்திருந்த குதிரைகள் எட்டில் நான்கு இறந்துபோயின; ஆகையினால்,

பல கஷ்டங்களுண்டாயின. ஆயினும் இத்தகைய துன்பங்-களினால் ஷாக்கில்டன் மனமழியவில்லை. தென் துருவத்-தையும் தென் மாக்னெடிக் (Magnetic) துருவத்தையும் கண்டு பிடிப்பதற்குச் செல்ல வேண்டிய மார்க்கங்களில் ஆகாராதிகள் சேகரித்து வைப்பதற்குச் சாலைகளமைத்துக் கொண்டு போவதற்குரிய எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்தார்.

பின்பு ஷாக்கில்டன், பிராங்கு உவெல்டு, லெப்டெனென்டு ஆதம்ஸ், டாக்டர் ஈரிக் மார்ஷல், என்பவர்களால் தொடரப்பட்டு அக்டோபர் மாதம் 29-ம் தேதியன்று தென் துருவத்தை நோக்கிப் புறப்பட்டார். அவர்கள் தம்மோடு மிகுந்திருந்த நான்கு குதிரைகளையும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு'ஸ்லெட்ஜ்' வண்டியையும்மூன்றுமாதங்களுக்குப் போதுமான ஆகார சேகரங்களையும் கொண்டு போயினர். தாம் மேற்கொண்ட காரியம் அபாயகரமானதென்றுநன்றாக அவர்கள் உணர்ந்திருந்தார்களாதலால், நால்வரும்தம்உற்றார் உறவினர்க்கும் பிறர்க்கும் தம் செய்திகளைத் தெரிவிப்பதற்கு உரிய கடைசிக் கடிதங்களையும் எழுதி,மக்மர்டோஸவுண்டில் கப்பலைப் பார்த்துக் கொள்பவரென்று ஏற்பட்டிருந்த மறே என்ற புலவரிடம் கொடுத்து விட்டுப் போயிருந்தனர். உரிய காலத்தில் திரும்பி வராமற்போனால் என்ன செய்யவேண்டும் என்பவைப்பற்றிய கட்டளைகளையும் ஷாக்கில்டன் இட்டுப் போயிருந்தார்.

புறப்பட்ட பின்பு ஒருமாதத்திற்குள்,முன்புகாப்டென் ஸ்காட் சாகசத்தோடு சென்றிருந்த இடத்தை யடைந்தனர். இதுவரையில் அவர்களுக்குப் பிரதிகூலங்கள் எவையும் எதிர்ப்படாமலிருந்தமையால் அவர்கள் அவ்வளவு எளிதில்

அக்காரியத்தை முடித்தனர். ஆயினும் அதன் பின் அப்பிர தேசங்களிற் சாதாரணமாகச் சம்விக்கும் பனிப்புயல்களா-லும் பிறகஷ்டங்களாலும் அவர்கள் துன்புறுபவர்களாயினர். கொடிய பனியால் அவர்கள் பார்வையும் மழுங்கியது; அவர்-களுடைய அங்கங்களும் ஊறுபட்டன; கண்ணிலிருந்து பெருகும் நீர், பெருகிய அக்கணமே உறைந்து முகத்தில் விளங்கும்; ஒரு நாளாவது அவர்கள் கண்ணுக்கு மறைபட்-டிருக்கும் பெரும் பள்ளங்களில் விழுவதான அபாயத்தினின்-றும் இடுக்கணுற்றுத் தப்பாமலிருந்திலர்; உவைல்டுக்கும், ஆதம்ஸுக்கும் நோய் கண்டது; ஒன்றன்பின் ஒன்ருகக் குதி-ரைகளும் செத்தன; தென் துருவத்தை யடைவோமென்ற நம்பிக்கை அடியோடு அழிவதாயிற்று. இவ்வளவு துன்பத்தையும் பொறுத்துக்கொண்டு அவர்கள் சௌகரியத்தோடு மேற்சென்ருர்கள்.

கடைசிக் குதிரையான 'ஸாக்ஸ்' ஒரு பெரும் பள்ளத்-தில் விழும்போது உவைல்டையும் கூட இழுத்துக்கொண்டு விட்டது. ஆனல் தெய்வச் செயலாகக் குதிரையின் சேணம் ஓரிடத்திற் சிக்கிக்கொள்ளவே, ஷாக்கில்டன் உவைல்டைக் கொடிய மரணத்தினின்றும் தப்புவித்தார். இனிக் கால் நடைப் பிரயாணமாகவே செல்லவேண்டியிருந்ததனல் இதர சந்தர்ப்பங்களனைத்தையும் அனுசரித்து நாளொன்றுக்கு மூன்று மைல் வீதமே போக முடிந்தது. ஆகவே, தக்ஷிண துருவத்தை யடைவது அசாத்தியமாயினும் அதுவரையிலும் எவரும் சென்றிராத அளவு தூரமாகிலும் சென்றுவரவேண்-டும் என்று ஷாக்கில்டன் தீர்மானித்தார்.

சமுத்திர மட்டத்திற்கு ஆருயிரம் அடிக்குஅதிகமான உயரமுள்ள ஒரு பனிப் பீடபூமியின்மீது அவர்கள் நிலக்கரி

வகைகளைக்கண்டுபிடித்தனர். பின்பு தேர்ந்த பூசாஸ்திர விற்பன்னர்களுடைய பரிசீலனைக்காக அவர்கள் அவற்றில் மாதிரிகளைச்சேமித்து வைத்துக்கொண்டனர். டிஸம்பர்மாதம் இருபத்தைந்தாம்தேதியன்றுஅனைவரும் துருவத்துக்கு200மைல் தூரத்துக்குள்ளாகவே வந்து சேர்ந்துபின்னும் மேற்செல்லலாயினர். இதற்குள் கொஞ்சங்கொஞ்சமாக ஆகாரக்குறைவினால் உபத்திரவம் ஏற்படும்போலத் தோன்றுவதாயிற்று. கடைசியாக எவ்வளவோ கஷ்டப்பட்டுக் கடல் மட்டத்திற்குப் பதினோராயிரம் அடிக்குமேற்பட்ட உயரத்தை அடைந்த பின்பு இனியும் மேற் செல்வது கூடாத காரியமென்று நன்கு உணர்ந்து யாத்ரிகர்கள் நால்வரும் திரும்ப யத்தனித்தனர். தாம் மேற்கொண்ட காரியம் முற்றுப்பெறுமற் போனதால் நண்பர்கள் நால்வருடைய ஆசாபங்கமும் எப்படி இருந்திருக்கும் என்பது ஊகித்தற்குரியது.

பின்பு, 1909-ம் வருஷம் ஜனவரி மாதம் ஒன்பதாந் தேதியன்று கடைசி முறையாகக் கஷ்டப்பட்டு அவர்கள் துருவத்திற்குத் தொண்ணூற்றேழு மைலுள்ள காஸ் என்ற மலையையடைந்து அங்கு ஆங்கிலக் கொடியை நாட்டிப் பின்பு திரும்பிவிட்டனர். சீதோஷ்ண நிலைமை கொஞ்சம் சௌகரியமாக இருந்திருந்தால் அவர்கள் தம் கருத்தை நிறைவேற்றியே இருப்பர். பின்பு ஆகாரக் குறைவினால் பலவிதமாக அல்லற்பட்டும், மறைந்த பள்ளங்களினின்றும் சங்கடத்தோடு தப்பியும் வருகின்றபோது, தெய்வச் செயலாகப் பனிப்புயலின் உபத்திரவமட்டில் நேராதிருந்தது. அதுவும் நேர்ந்திருந்தாலோ, துருவ யாத்ரிகர்கள் நால்வருடைய கதியும் சில வருஷங்களுக்குப் பின் ஸ்காட்டுக்கும் அவருடைய நண்பர்களுக்கும் நேரிட்ட கதியைப் போலவே ஆகியிருக்கும்.

அதிர்ஷ்டவசமாக அவர்கள் கஷ்டம் நேருமுன்னமே தாம் ஸ்தாபித்திருந்த பண்டக சாலையை யடைந்து தப்பினர்.

அதன் பிறகு கூடிய சீக்கிரத்தில் அவர்கள் அவ் விடத்தை விட்டுப் புறப்பட்டு 'நிம்ராட்'டை யடைய விருந் தனர். இதற்குள் நளிர் நோயினாலும் அதிசாரத்தினாலும் அவர்கள் கஷ்டப்படும்படியாயிற்று. டாக்டர் மார்ஷல் அதிக பலவீனத்தை யடைந்தார். கப்பலுக்கு மிக அருகில் வரும் போது மார்ஷல் தம் முழுப்பலத்தையும் இழந்து விழுந்து விட, அவரைப் பார்த்துக்கொள்ளும்படி ஆதம்ஸை விட்டு விட்டு மற்ற இருவரும் கப்பலை யடைந்தனர். அத்தருணம் துருவத்திற்குச் சென்ற இந்நால்வருடைய கதியும் என்னவா யிற்றோ என்று அறியும் பொருட்டு ஒரு கூட்டத்தார் புறப் பட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் அனைவரும் ஷாக்கில் டனையும் உவெல்டையும் கண்டவுடன் பேரானந்தங் கொண்டு மற்ற இருவரையும் பற்றி யறிந்தவுடன் விரைந்து சென்று அவர்களை மீட்டனர். இவ்விதமாக நஷ்டமின்றி அவ் யாத்திரை முடிவுபெற்றது.

தாம் கொண்ட காரியத்திற் பூரண வெற்றி யடையாமற் போனதால் ஷாக்கில்டன் மனம் வருந்தியிருந்தனரேனும், தக்ஷிண மாக்னெடிக் துருவத்தைக் கண்டு பிடிப்பதற்குச் சென்றவர்கள் அக் காரியத்தைச் சாதித்து வந்ததைப்பற்றி மறே கூறினதால் பெருமகிழ்ச்சி கொண்டார். அதனாலும், இது வரையில் ஒருவரும் சென்றிராத தூரம் தாம் சென்று வந்ததனாலும், தென் துருவத்திற்குச் செல்லும் மார்க்கங்கள் அனைத்தினும் கூடிய வரையில் சிறந்த மார்க்கத்தைத் தாம் கண்டு பிடித்ததனாலும் அவர் மனம் ஒருவாறு தேறுதல் அடைந்தது.

இவ்யாத்ரிகர்கள் பூ சாஸ்திர விஷயமாகக் கண்டுபிடித்த விஷயங்கள் மிக அரியனவாக விளங்கின வாதலாலும், இதரர்களால் செய்யக்கூடாத காரியங்களை இவர்கள் சாதித்துவந்ததனாலும் ஆங்கிலேயர்களனைவரும் ஆனந்த பரவச மடைந்து இவர்களை வரவேற்றுக் கௌரவித்தனர். ஆங்கிலேயர் மட்டுமன்றி இதரதேசத்தார்களும்ஷாக்கில்டனைக் கௌரவித்தனர். பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அவருக்கு 20,000 பவுன்களைச் சன்மானமாக அளித்து 'ஸர்' என்ற பட்டத்தையும்தந்தனர் ராயல் ஜியோக்ராபிகல் ஸொஸைட்டியாரும் ஒரு பொற்பதக்கத்தை அவருக்கு அளித்தார்கள்.

அதன் பின் சில வருஷங்கள் வரையில் அவர் பிரசங்கங்களிலும் நூல்களியற்றுவதிலுமாகத் தம் காலத்தைக் கழித்தார். ஆயினும் விரைவில் அவர் சாந்தமான இவ் வாழ்க்கையில் இச்சை யிழந்து தென் துருவப் பிரதேசங்களுக்குச் செல்வதற்கான மற்றொரு பிரயாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலானார். இதற்குள் 1912-ம் வருஷத்தில் தென் துருவம் கண்டு பிடிக்கப்பட்டது என்ற விஷயம் ஐரோப்பா முழுவதும் பரவலாயிற்று. ஆயினும் அப்பிரதேசக்களில் வேறு எவ்வளவோ விஷயங்கள் கண்டு பிடிக்கப்பட வேண்டியிருப்பதை உணர்ந்து ஷாக்கில்டன் புறப்பட ஆயத்தமானார். சிலர் துணிகரமான செய்கைகளை விரும்பியே கஷ்ட சாத்தியமான காரியங்களை மேற்கொள்வர். சிலர் சாஸ்திர சம்பந்தமான விஷயங்களை ஆராய வேண்டுமென்ற எண்ணங் கொண்டவர்களாய் இவற்றில் முனைவர். மற்றுஞ் சிலர் மாய மர்மங்களையுடைய பிரதேசங்களிற் பழகுவதான ஆசை யொன்றையே மேற்கொண்டு செல்வர். ஆனல் ஷாக்கில்டனுடைய விஷயத்

திலோ இவ்வெல்லாக் கருத்துக்களும் ஒன்று சேர்ந்து விளங்கின.

எல்லா ஏற்பாடுகரும் 1914-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் நான்காம் தேதியன்று முற்றுப் பெற்றுவிளங்கின. அத்தினம் உலக சரித்திரத்தில் முக்கியமானதொரு தினமென்பதை அனைவரும் அறிந்திருக்கலாம். மகா ஐரோப்பியயுத்தம் ஆரம்பித்த தினம் அதுவே. அன்று 'எண்டியூரன்ஸ்' என்ற கப்பல் ஷாக்கில்டனுடையதலைமையின் கீழ்த் துருவப் பிரதேசங்களுக்குச் செல்லத் தயாராயிருக்கையில் யுத்தமாரம்பிக்கப்பட்டதென்றசெய்தி பரவியது. ஸர் எர்னஸ்டுஷாக்கில்டன் அதன் உண்மையை யறிந்து கொண்டார். உடனே, மற்றெல்லா விஷயங்களையும் மறந்தவராய்த் தம் மாலுமிகள் அனைவரையும் ஒன்று கூட்டி, தம் கூட்டத்தாரைப் பிரித்துவிடாதிருக்கும் பக்ஷத்தில் அவர்களோடு தாம் தாய்நாட்டுக்கு உரிய தொண்டைப் புரிவதற்குத் தயாராயிருப்பதாக அதிகாரிகளிடம் விஞ்ஞாபித்துக் கொள்ளப் போவதாகக் கூற, அனைவரும் ஏக மனதோடு அதனை ஆதரித்தனர். உடனே ஷாக்கில்டன் தம்கருத்தை அதிகாரிகளுக்குஅறிவித்தார். ஆயினும் அதிகாரிகள், அவர் ஒருவருஷ காலமாகச் செய்த ஏற்பாட்டையும், சாஸ்திர விஷயமாக நடக்க வேண்டிய அருந்தொண்டையும் பற்றி ஆலோசித்தவர்களாய் எவ்விதத்திலும் அவரைத் தடுக்கமனமற்று அவரிஷ்டப்படியே தென்துருவத்துக்கே செல்லும்படி அனுமதி தந்தனர். சில நாட்களுக்குப் பின், ஷாக்கில்டன் பிராங்கு உவைல்டைத் தம் அடுத்ததுணையாளராகக் கொண்டு 'என்டீயூரன்ஸை'த் தென்கடலை நோக்கிச் செலுத்தினர்.

தென் துருவ கண்டத்தைத் துருவத்தின் மூலமாகக் கடந்து செல்வதென்று ஷாக்கில்டன் ஏற்பாடு செய்தார்.

85992



முதலில் எல்லாம் அநுகூலமாகவே தோற்ற, கப்பல் தடை ஏதுமின்றி வெட்டல் கடலுக்குள் செலுத்தப்பட்டது. இந்தத் தரமும் எவ்வளவோ புதிய விஷயங்கள் கண்டுபிடிக்கப்பட்-டன. அதன்பின் மாரிகாலம் வந்துவிட்டது. அம்மாரிகாலத்தில் சற்றேறக்குறைய எழுபத்தொன்பது நாட்கள் வரையில் சூரியோதய மென்பதே இன்றி முழு இருட்டாக இருந்தது. அவ்விடத்தில் யாத்திரைக்கு மிக முக்கியமான சாதனங்களுக்கு உரிய நாய்களிற் பல இறந்தன. முடிவாக, 'எண்டியூரன்ஸ்' என்னும் கப்பலுக்கே அழிவு நேரிடும்போல் தோன்றியது. அவர்கள் தம்மாலியன்றவரையிலும் கப்பலைக் காப்பாற்ற முயன்றனர். ஆயினும் நாலா பக்கங்களிலும் பனிப்படலம் சுற்றிக்கொண்டு அதை நெருக்கி உடைக்க வாரம்பித்தது. ஆகவே முன்னெச்சரிக்கையுடன் வீரர்களெல்லாரும் கப்பலிலுள்ள பொருள்களனைத்தையும் வெளியேற்றி மூன்று சிறு படகுகளைமாத்திரம் இழுத்துக்கொண்டு அப்பாற் செல்லலாயினர். கப்பலும் சுக்கல் சுக்கலாக உடைந்து போயிற்று.

துருவத்திற்குச் செல்வதென்ற எண்ணம் விடுபட்டது; எதிர்பாராது தமக்குநேர்ந்த இத்தொல்லையிலிருந்து எப்படித் தப்பிப் போவதென்கிற எண்ணமே அவர்களை வருத்த-லாயிற்று. எந்தக் கண்டத்துக்குச் செல்வதென்றாலும் நூற்-றுக்கணக்கான மைல் தூர மிருந்தது. மாலுமிகள் தங்கள் தலைவரின் திறமையிலும் தங்கள் பொறுமையிலுமே நம்பிக்கை வைத்திருந்தனர். இதற்குள் இவர்கள் தங்கியிருந்த பனிப்படலமோ உடைந்து தண்ணீரில் மிதக்கலாயிற்று. நிலம் கண்ணுக்குத் தென்படுமேயன்றி அதன் கரையையடைய முடியாதபடி ஒவ்வொரு கணமும் அப்பனிப் படலம் வில-கியே செல்லும். இம்மாதிரியாக எவ்வளவோ கஷ்டப்பட்ட

பின்பு அவர்கள் கடைசியாக எலிபன்ட் தீவு (யானைத் தீவு) என்ற தீவை அரிதில் அடைந்து அங்குத் தங்குவாராயினர்.

கொஞ்சம் சிரம பரிகாரம் செய்துகொண்ட பின்பு அளவற்ற தைரியத்தை யுடையவராய் ஷாக்கில்டன் எண்ணூறு மைல்களுக்கப்பால் உள்ள தென் ஜியார்ஜியா என்ற தேசத்தை யடைந்து தம் தோழர்களை மீட்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் துணிந்தார். கொந்தளிக்கின்றதும் அடிக்கடி உறைந்து போகின்றதும் அபாயகரமானதுமான அப்பிராந்தத்திய கடலில் அவ்வாறு செய்வது எவ்விதத்தினும் எளிதன்றாகிலும் சந்தர்ப்பத்தின் கொடுமையை உத்தேசித்தும் தம் திறமையில் நம்பிக்கை வைத்துமே ஷாக்கில்டன் தம்மோடு ஐவரைக் கூட்டிக்கொண்டு மிகக் கஷ்டப்பட்டு ஒரு படகைச் செலுத்திச் சென்று பதினாறு நாட்கள் கழித்துக் குறித்த இடத்தை அடைந்தார். ஒருவரும் இவ்விதமான சாகசச் செயலை இதற்கு முன் செய்ததில்லை.

அங்குள்ளவர்களுக்கு இவர், தாம் இன்னாரென்பதை நிரூபிக்கும்படியாயிற்று. அதன் பின்பு அவர்கள் முழு மனத்தோடு உதவிசெய்ய ஒப்புக்கொண்டு இருமுறை முயன்றும் எலிபன்ட் தீவை யடைய முடியவில்லை. அதன் பின்பு சிலி தேசத்தார் அனுப்பிய எல்கோ என்னும் கப்பலைத் திறமையுடன் செலுத்திச் சென்று தீவில் விட்டு வந்த இருபத்திரண்டு வீரர்களையும் சமயத்தில் காப்பாற்றினர்; ஏனெனில் இன்னும் சில தினங்கள் பொறுத்திருப்பின் அவர்களனைவரும் உணவின்மையால் வாடி இறந்திருப்பர். இவ்யாத்திரையை மேற்கொண்ட காரியத்தில் இவர் முற்றிலும் வெற்றி பெறாவிடினும், சாஸ்திர சம்பந்தமாகத் தென் துருவப் பிர

தேசங்களைப்பற்றிப் பல விஷயங்களைத் தெரிந்துகொள்ள இது மிக்க அனுகூலமாக இருந்தது.

இங்கிலாந்துக்குத் திரும்பிவந்தவுடன் அரசாங்கத்தார் அவரை ருஷியாவின் வடக்கே போய் வந்த ஒரு படைக்குத் தலைவராக்கி அனுப்பினர். அதன் பின்பு 1921-ம் வருஷத்தில் அவர் திரும்பவும் தென் துருவப் பிரதேசங்களில் சில தீவுகளைப் பரிசிலனை செய்வதற்காக யாத்திரை செய்யப் புறப்பட்டுச் சென்றார். ஆரம்ப முதலே இவ் யாத்திரைக்குத்தடை ஏற்பட்டுக் கொண்டிருந்தது. பிஸ்கே குடாக் கடலில் புயலில் அகப்பட்டுக் கொண்டு குவெஸ்ட் என்ற இவருடைய கப்பல் சேதமடையவே அதனை இடை வழியில் டேகஸ் நதியில் செப்பனிட வேண்டியதாயிற்று. மாலுமிகளில் இருவர் நோயுற்றதனால் அவர்கள் இங்கிலாந்துக்குத் திரும்பிப் போயினர். ரியோடி ஜனிரோவை அடைந்தவுடன் கப்பலைத் திரும்பவும் பழுது பார்க்கும்படியாயிற்று. அதற்குப் பின் குறித்த காலத்திற்கு அதிகமாகத் தாமதித்து ஷாக்கில்டன் தென் ஜியார்ஜியாவை அடைந்தார். ஆயினும் அவர் தம் காரியத்தில் முனைந்து தென் துருவப் பிரதேசத்தை யடையுமுன்னமே 1922-ம்வருஷம் ஜனவரிமாதம் 5-ம்தேதியன்றுகாலன் அவருயிரைக் கவர்ந்து போயினன். அவருடைய உடலுக்கு உரிய கடைசி மரியாதைகள் தென் ஜியார்ஜியாவிலேயே செய்யப்பட்டன. சமீப காலத்தில் வசித்த ஆங்கில நன் மக்களுள் மிக்க கீர்த்தி வாய்ந்த சிலருள், ஷாக்கில்டன் தலை சிறந்தவராவர். பிற்காலத்தில் வருபவர்க்கு இவர் முன் மாதிரியாக விளங்கத் தக்கவரென்பது திண்ணம்.

IX

# ரோவல்டு ஆமுண்ட்ஸென்.

'ஒன்றை நினைக்கி னதுஒழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளு மீசன் செயல்.'

என்ற ஆன்றோர் வாக்கு ஆமுண்ட்ஸெனுடைய சரிதத்தில் உதாஹரிக்கப்பட்டது போலக் கீர்த்தி பெற்ற நாவிக வீரர்களுடைய சரிதங்களில் வேறு எதனிலும் காணலரிது உத்தர துருவத்தைக்கண்டு பிடிக்கவேண்டுமென் றுவாழ்நாளெல்லாம் முயன்று வந்த ஒருவர் திடீரெனச் சிந்தை மாறித் தக்ஷிண துருவத்தில் ஒருவரும் அடி வைக்காத முன் சென்று நின்றார் என்பது ஆச்சரியத்தை விளைவிக்கத் தக்க விஷயமல்லவா?

ரோவல்டு ஆமுண்ட்ஸென் நார்வே தேசத்தில் ஆஸ்ட்போல்டில் உள்ள போர்ஜ் என்னுமிடத்தில் 1872-ம் வருஷம் ஜூலை மாதம் பதினாறுந்தேதி யன்று பிறந்தவர். அவருடைய குடும்பத்திற் சேர்ந்த பலரும் மாலுமிகளே. அவருடைய தந்தைக்குச் சொந்தமாகச் சிறந்த கப்பலொன்றும் இருந்தது. இயற்கையாக இப்படிப்பட்ட விஷயங்களிருந்தும், ஆமுண்ட்ஸென் முதலில் நாவிகத் தொழிலை மேற்கொள்ள நினைக்கவில்லை. கிரிஸ்டியானியா சர்வ கலா சாலையில் தமது கல்வி முற்றிய பின்பு இரண்டு வருஷ காலம் அவர் மருத்துவ சாஸ்திரத்திற் பயின்றார். ஆயினும் அவர் இறுதியில் அத்தொழிலில் மனமற்றவராய் நார்வீஜியக் கப்பற்படையிற் சேர்ந்தார்.

இக்காலத்தில் டாக்டர் பிரிட்ஜாப் நான்ஸேன் என்ற கீர்த்திபெற்ற நார்வீஜிய சாஸ்திர ஞானி உத்தர துருவப் பிரதேசங்களிற் சென்று அதற்கு முன் ஒருவரும் கண்டு பிடிக்காத அபூர்வ விஷயங்களைக் கண்டுபிடித்து வந்ததைப் பற்றிய செய்திகள் நாடெங்கும் பரவலாயின. ஆமுண்ட்ஸென் அவரைத் தம் முன் மாதிரியாகக் கொண்டு, தாமும் அப்படிப்பட்ட அருஞ் செயல்களைப் புரிந்து கீர்த்தி பெறவேண்டும் என்று துணிந்தார். ஆகையினால் பிற்காலத்தில் தாம் சலிப்பின்றி உழைப்பதற்குத் தக்கதான திறமை ஏற்படும் பொருட்டுச் சாதாரண மாலுமியாகவே கப்பற் படையிற் சேர்ந்து கஷ்டப்பட்டு உழைக்கலானார். ஆர்டிக் மகா சமுத்திரத்தில் மீனும் ஸீலும் பிடிக்கும் கப்பல்களில் குளிரிலும் பனியிலும் பலவாறு அல்லற்பட்டுழைத்தது இவருக்குத் துருவப் பிரதேச வாழ்க்கையினுக்கு உரிய பழக்கத்தைத் தந்தது. சாதாரண மாலுமிகள் படிப்படியாகப் பரீக்ஷைகளில் தேறியே உயர்வதுபோல ஆமுண்ட்ஸெனும் தம் பதவியில் உயரலானார்.

அவருக்கு வயது இருபத்தைந்தானதும் தக்ஷிணத்துருவப் பிரதேசங்களுக்கு ஏட்ரின் டிஜெர்லாஷ் என்பவருடைய தலைமையின் கீழ்ப் பெல்ஜிய தேசத்தார் சிலர் சென்ற யாத்திரையில் சேரும்படி அழைக்கப்பட்டார். ஆறடிக்கு மேற்பட்ட உயரமும், உரம் பொருந்திய அங்கங்களும், அழகிய உருவமும், கடலில் நல்ல அனுபவமும் பொருந்திய ஆமுண்ட்ஸெனைப் போன்ற சிறந்த நாவிக வீரர்கள் அப்படையில் மிகச் சிலரே யிருந்தனர். 'பெல்ஜிகா' என்ற அவ்யாத்திரைக் கப்பலில் அவர் முதல் மாலுமியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1897-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் 'பெல்ஜிகா'

புறப்பட்டுத் தென் கடல்களைக் கடந்து சென்றது மேற் கொண்ட கருத்துக்களை முற்றுவிப்பதற்கு வேண்டிய சாத னங்களிற் குறைவு மிகுந்திருந்ததனால் அவ்யாத்திரை வெற்றி பெற்று மீளவில்லையேனும் பல அரிய விஷயங்களை அது கண்டு பிடித்து வந்ததனால் ஆமுண்ட்ஸென் மிக்க திருப்தி அடைந்தவராகவே யிருந்தார்.

பின்பு 1901-ம் வருஷத்தில் உத்தர துருவப் பிரதேசங் களுக்குச் சென்ற மற்றொரு யாத்திரையிலும் அவர் சேர்ந்து அதனால் பனிப்படலங்களினிடையே சென்றுவருங் காரியத் தில் மேற்கொள்ள வேண்டிய எல்லா விஷயங்களிலும் நல்ல தேர்ச்சி பெற்றார்.

ஆமுண்ட்ஸெனுக்குச் சிறந்த வன்மையோடு அளவற்ற பொறுமையும் பின் வருவனவற்றை முன்னுணர்ந்து தவிர்க் கும் ஏற்பாடுகளைச் செய்ய வல்ல திறமையும் மிகுதியும் இருந் தன. ஆதலால் அவர் ஒவ்வொரு விஷயத்தையும் ஊன்றிப் பார்த்து எவ்வகைக் குறைவும் இல்லாதபடிக்கு வேண்டிய எல்லா வசதிகளையும் ஏற்படுத்திக் கொண்டு 'ஜோவா' என்ற ஒரு சிறிய அழகிய கப்பலில் தம் நண்பர்கள் சிலரோடு புறப்பட்டு உத்தர மாக்னெடிக் துருவத்தைக் கண்டுபிடித்துப் பின்பு அட்லாண்டிக் மகா சமுத்திரத்திலிருந்து பஸிபிக் மகா சமுத்திரத்திற்கு வடமேற்கு மார்க்கமாகச் செல்வ தென்று துணிந்து சென்றார். இம்முயற்சியில் எப்படியும் தாம் வெற்றி பெறுவது நிச்சயமென்றுநம்பி யிருந்தபடியே இது அவருக்குக் கை கூடியது.

ஆமுண்ட்ஸென் முதலில் அட்லாண்டிக் மகா சமுத்தி ரத்தைக் கடந்து அமெரிக்காவின் வட கிழக்குக் கரையை அடைந்தார். பின்பு ஏழே துணைவர் உள்ள தம் கப்பலைப்

பாபின் பே என்ற கடற் பிரதேசத்தின்மூலமாகச்செலுத்திச் சென்று பூதியா தீபகற்பத்தை அடைந்தார். இவ்வாறு ஒன்றரை வருஷம் காலம் அவர்பிரயாணம்செய்துகொண்டே பூ சாஸ்திர சம்பந்தமாகப் பரிசீலனை செய்கையில், முன்பு ஸர் ஜான் ராஸினால் கண்டு பிடிக்கப்பட்ட உத்தர மாக்னெடிக் துருவம் ஒரே இடத்தில் நிலைத்திருப்பதில்லை என்றும் சதா மாறிக்கொண்டேயிருக்கிற தென்றும் அவர் கண்டறிந்தார். மற்ற எச்செயல்களையும் அவர் செய்யாமலே இருந்திருப்பாராயினும் இஃதொன்றினாலேயே அவருக்கு எக்காலத்திலும் புகழ்உண்டாயிருந்திருக்கும். ஆயினும் இத-னோடு திருப்தி அடையாமல் தம் ஏற்பாட்டின்இரண்டாவது பகுதியையும் முற்றுவிக்க எண்ணங்கொண்டு அவர் வட மேற்கு வழியைக் கண்டு பிடிக்க மேற்செல்வாராயினர்.

இவ்வடமேற்கு வழியைக்கண்டு பிடிக்க நூற்றுக்கணக்-கானவருஷங்களாகப்பலவீரர்கள் முயன்றதும், பிராங்கிளின் போன்ற வீர சிகாமணிகள் பனிப்பிரதேசங்களில்அகப்பட்டு மீளாமற் போனதும் பலரும் அறிந்த விஷயங்களே. ஆயினும் அதனை பெரும்ஜயம்பெறுதகாரியத்தில் ஆமுண்ட்-ஸென் நிருவகித்து வந்தது அவருடைய பெருமைக்கு ஒரு சான்றும். இடையில், கப்பல் தீ விபத்தினின்று ஒரு தரமும், பனிப்படலங்களினின்றும் பல தரமும், அழி-யாது அதிர்ஷ்ட வசமாகத் தப்பித்துக்கொண்டது. அவ்வா ஒரு தரம் உறைபனி யிடையே கப்பல்சிக்கிக்கொண்டபோது ஆமுண்ட்ஸென் தாம் உயிரோடிருப்பதை உலகினர்க்குத் தெரிவிக்கவும் தமக்கும் தம் துணைவர்க்கும் வேண்டிய உண வுப் பொருள்களைச் சேகரித்துக் கொள்ளவும் கருதி 1905-ம் வருஷம் டிஸம்பர் மாதத்தில் தைரியத்தோடுபனியில் அலாஸ்-

காவிலுள்ள ஈகில் பட்டணத்தை யடைந்தனர். அதன்பின் 1906-ம் வருஷம் வசந்த காலத்தில் அவர் கப்பலை யடைந்து அதனைப் பஸிபிக் மகா சமுத்திரத்திற்குச்செலுத்திக் கடல் மார்க்கமாக அலாஸ்காவை யடைந்தார். இவ்வாறுஉலகினர் பலரும் புகழும்படிதாம்மேற்கொண்டே இரண்டுகாரியங்களி-லும் அவர் வெற்றி பெற்றுச் சுதேசத்துக்கு மீண்டு வந்தார்.

அதன்பின் இரண்டு வருஷ காலம் அவர் தம்யாத்திரை-யைப் பற்றியும், அதிற் கண்டுபிடித்த சாஸ்திர சம்பந்தமான விஷயங்களைப் பற்றியும், எஸ்கிமோ ஜாதியாருடைய நடையுடைய பாவனைகளைப் பற்றியும் பலதேசங்களிலும்பலவிடங்களிலும் பிரசங்கம் புரிவதில் செலவிட்டார். எவ்வகையினும் அவர்திறமையுடன் நடந்து கொண்டதைப்பற்றிவியவாதவர் இலராயினர். ஆதலால் மற்றொரு முறையும் அவர் உத்தர துருவப் பிரதேசங்களுக்கு யாத்திரை செய்ய யத்தனித்துத் தம் எண்ணத்தை உலகறியக்கூறும்போது நார்வீஜியஜியோக்-ராபிகல் சொஸைடியார் அவருக்கு வேண்டும் உதவி யனைத்-தையும் செய்யத் தயாராயிருந்தனர். டாக்டர் நான்ஸெனும் தம்யாத்திரைகளுக்கென்று பிரத்தியேகமாய்ச் செய்யப்பட்ட 'பிராம்' (Fram) என்ற சிறந்த கப்பலை உபயோகப்படுத்திக் கொள்ளும்படி ஆமுண்ட்ஸெனுக்கு அனுமதி தந்தார். நார்-வீஜிய அரசர் முதலாகப் பலரும் குறைவில்லாத திரவிய சகாயம் செய்தனர்.

இந்தயாத்திரையில் ஆமுண்ட்ஸென் ஐந்துவருஷகாலம் கழிப்பதென்றும் அதனிடையேஉத்தரத்துருவப்பிரதேசத்தி-லுள்ளசகல விஷயங்களையும்ஆராய்ந்துவிடுவதென்றும்அதன்பின் கூடுமானால் துருவத்திற்கே துணிந்து செல்வதென்றும் அவர் தீர்மானித்திருந்தார். ஆனாலும் தெய்வச் செயல் வேறு

விதமாக முடிந்தது. 1909-ம் வருஷத்தில் எல்லாம் தயாராகிப் புறப்படும் எல்லையில் அமெரிக்க தேசவாசியாகிய 'பியரி' என்பவர் உத்தரத்துருவத்தைக்கண்டுபிடித்துவிட்டார்என்றசெய்தி உலக முழுவதும் பரவியது. ஆமுண்ட்ஸெனே அதைக் கண்டுபிடிப்பதாலுண்டாகும் சிறப்பு தம் நாட்டுக்கேகிடைக்க வேண்டுமென்று வெகு காலமாக எண்ணி இருந்ததனால், இச்செய்தியைக் கேள்விப்பட்டவுடன் மிகவும் வருந்தினார். ஆயினும் அவர் தம் வருத்தத்தை வெளியிற் காட்டாமல் வட துருவத்திற்குச் செல்பவரைப் போலவே பல ஏற்பாடு-களையும் இன்னும் எச்சரிக்கையோடு முற்றுவித்துக்கொண்டு, பின்பு 1910-ம் வருஷம் கோடை காலத்தில்பிரகடனம்பண்-ணிக் கொள்ளாமல் ஒரு நாள் 'பிராமை'ச்செலுத்திக்கொண்டு புறப்பட்டார். வட துருவத்துக்குச் செல்வதை விட்டுத்தென் துருவத்துக்குச் செல்வதென்று அவருடைய ஏற்பாடுகள் மாறிவிட்டன. ஏற்கனவே காப்டென் ஸ்காட் அதனை நோக்கிச் சென்றிருக்கின்றார் என்பது அவருக்குத் தெரியும். அவ் யாத்திரைக்கு முன்பு ஸ்காட்டுக்குத் தம்எண்ணங்களைக் குறித்தும் அவர் தெரிவித்தார். ஆதலின் தென் துருவத்துக்கு யார் முன்பு போய்ச் சேருவார்களென்பதைக் கண்டறிய உலகினர் அவாவுடன் காத்திருந்தனர்.

வழக்கம்போலக்கப்பல் பனிப்படலத்தடையை அடைந்தவுடன், ஆமுணட்ஸென் தம்முடைய துணைவர்களை இரண்டு கூட்டத்தினராகப் பிரித்து, ஒரு கூட்டத்தார் கப்பலிலேயே இருந்து சில காரியங்களைச் செய்யும் படிக்கும் மற்றொரு கூட்டத்தார் தென் துருவத்துக்குச் செல்லும் படிக்கும் ஏற்-[illegible] செய்தார். கோடைகாலமுழுவதும் துருவத்திற்குப் [illegible]ார்க்க முழுவதிலும் உணவுப் பொருள்களும் மற்

றவும் சேர்த்து வைக்கும்படி சேகர சாலைகள் நிருமிப்பதில் செலவிடப்பட்டது. மாரிகாலத்தைக் கழிப்பதில் சிரமந் தெரியாமல் இருப்பதற்கு எத்தனையோவிதமான 'பொழுது போக்கு'க்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. தேர்ந்தெடுத்த 3,000 புத்தகங்களும், சில 'கிராமபோன்'களும் இசைக்கருவிகளும், பாடுகின்ற கனேரிப்பறவை ஒன்றும் எடுத்துக் கொண்டு போகப்பட்டிருந்தமையின் அவர்களுக்குக் காலஞ்செல்வதே தெரியாமல் இன்பமாகக் கழிந்தது.

ஆகஸ்டு மாதம் 24-ம் தேதியன்று சூரிய வெளிச்சமும் சுகமான சீதோஷ்ண நிலைமையும் திரும்பின முதலில் ஸெப்டம்பர் மாதத்தில் ஆமுண்ட்ஸென் புறப்பட்டுச் சென்று கொடிய குளிரினால் திரும்பும்படியாயிற்றாயினும் அக்டோபர் மாதம் 20-ம் தேதியன்று அவர் திரும்பவும் புறப்பட்டு,பனியிற் செல்லத்தக்க சக்கரமற்ற வண்டிகள் நான்கையும், துணைவர் ஐவரையும், ஐம்பத்திரண்டு நாய்களையும், நான்கு மாதங்களுக்கு வேண்டிய உணவையும் உடன் கொண்டு சென்றார். போகும் வழியே திரும்பி வருவதற்குரிய அடையாளங்களை அவரும் அவர் நண்பர்களும் ஸ்தாபித்துக்கொண்டேபோயினர். நடுவில் எவ்வளவோ கஷ்டங்கள் உண்டாயின.

ஷாக்கில்டன் முன்பு ஒருவரும் அடையாத இடத்தை யடைந்திருந்தாரென்று கூறினோமல்லவா? சுகமானசீதோஷ்ணத்தினால் தைரியங்கொண்டு ஆமுண்ட்ஸெனும் அவர் நண்பர்களும் அவ்விடத்தைத் தாண்டிச் சென்றனர். 1911-ம் வருஷம் டிசம்பர் மாதம் 14-ம் தேதியன்று அவர்கள் துருவத்திற்கு மிக அருகாமையில் வந்து விட்டனர். அன் சூரிய வெளிச்சமும் சீதோஷ்ணமும் நன்றாயிருந்தன தில் அவா அடித்துக்கொள்ள அவர்கள்சிறிதள

அருந்தி, அதிகம் பேசாமல் மைல் மைலாகக் கடந்து சென்றார்கள். ஒரு சமயம் தங்களுக்கு முன்பு ஸ்காட் அவ்விடத்தை அடைந்துவிட்டாரோ என்றகவலையவர்களுக்குண்டாகும், ஒருசமயம் ஆமுண்ட்ஸென் கணக்குப்பிசகாமல்குறித்த நாளில் அவ்விடத்துக்கு மிக அருகாமையில் வந்துவிட்டதனால் தங்களுக்கு முன்பு ஒருவரும் வந்திருக்க மாட்டார்கள் என்ற எண்ணம் அவர்களுக்குத் தைரியத்தை யுண்டாக்கும். இவ்வாறு மாறி மாறி வரும் ஐயங்களோடும்தேறுதல்களோடும் அவர்கள் சென்று கொண்டே யிருக்கையில் பகல் மூன்று மணி யடித்தது. உடனே, 'நில்லுங்கள்' என்ற சப்தம் தலைவரிடத்தினின்றும் உண்டாயிற்று! தக்ஷிண துருவமுங் கண்டு பிடிக்கப்பட்டது!! பிரயாணமும் பலன் உடையதாயிற்று!!!

பின்பு அளவுகடந்த மகிழ்ச்சியோடு ஐவரும் நார்வீஜியக் கொடியைத் தூக்கி அப்பரந்த பீடபூமியின் மத்தியிலே நட்டு அப் பீடபூமிக்கு 'ஏழாவது ஹாகன் அரசர் பீடபூமி' (King Haakon VII's Plateau) என்ற பெயரை இட்டனர். பின்பு அவர்கள் தங்கள் வெற்றியை ஒரு விருந்தினால் கொண்டாடி, மூன்று நாட்கள்வரை அங்கேயே தங்கிச் சாஸ்திரசம்பந்தமான பல விஷயங்களை ஆராய்ந்து, ஒரு கூடாரம் அடித்து ஸ்காட் அவ்விடத்தையடைந்தால் அவருக்கு உபயோகப்படும்படி சில குறிப்புக்களையும் வஸ்திர ஆகாராதிகளையும் வைத்துவிட்டு மீண்டனர். திரும்பி வருகையிலும் அவர்களுக்கு ஒருவித கஷ்டமும் நேரவில்லை. தாம் குறித்த அதே தினத்தில் அவர் தக்ஷிணத் துருவத்தை அடைந்தது ஆச்சரியகரமான ஒரு விஷயமே.

இவர் இப்போது ஜீவிய தசையில் உள்ளவர். வடமேற்கு மார்க்கத்தைக் கண்டு பிடித்ததனாலும், உத்தர மாக்னெடிக் துருவத்தைக் கண்டு பிடித்தனாலும், தென் துருவத்தையும் கண்டு பிடிதததனாலும் இவருக்குண்டான புகழ் என்றும் அழியாததாகும்.

TB
U8(10)
N35

85992

THE B. N. PRESS, EDUCATIONAL PRINTERS, MADRAS.

# Ambika's Tamil New Publications for School use

*APPROVED BY THE TEXT BOOK COMMITTEE FOR CLASS USE
Gazette IB. 14-4-31 P. 266 & 267

*1. THE RAJAPUT GEM —A " Historical Novel " —by V. Duraisawmi Ayyar, Senior Tamil Pandit, P. S. High school, Mylapore with a foreword by S. Vaiyapuri Pillai, B.A., B.L., Member, Tamil Board of Studies, Member, Board of the Dravidian Languages, Editor, Tamil Lexicon. Re. 1 0 0

*2. NINE FAMOUS NAVIGATORS by P. B. Srinivasachariar, B. A., with a foreword by Sir P. S. Sivasawamy Ayyar, K.C.S., C.I.E. 0 8 0

*3. FABLES FOR THE YOUNG by P. B. Srinivasachariar, B.A. Rs. 0 4 0

4. THE IDEAL SONS by P.B. Srinivasachariar, B A. 0 4 0

*5. DELIGHTFUL STORIES FOR THE YOUNG by S. Kaundinya Rs. 0 3 0

6. SRI RAMABIRAN by V. Narayana Ayyar, M.A., M.L., (With illustrations) Rs. 0 4 0

7. "MAHABARATHAM" with illustrations by Y. Mahalinga Sastry, B.A., B.L. Rs. 0 4 0

## English.

*APPROVED BY THE TEXT BOOK COMMITTEE FOR CLASS USE
Gazette I-B 11-11-30 P. 608.

*1. EASY SELECTIONS IN VERSE Book-I for Form I by M. K. Rajagopalasastrigal, Superintendent, P. S. High School, Mylapore. Rs. 0 4 0
*2. do Book-II For Form II do Rs. 0 4 0
*3. do Book-III For Form III do Rs. 0 4 0

## Sanskrit.

1. A PICTORIAL SANSKRIT PRIMER by Y. Mahalinga Sastri, B.A., B.L. Rs. 0 3 0

2. SANSKRIT FIRST READER by Y. Mahalinga Sastri, B.A., B.L. Rs. 0 8 0

**Sole Agents**
for *A FIRST BOOK OF SANSKRIT by N. Krishna Sastrigal, Pattamadai. Rs. 0 8 0